கோகுலம்

GOKULAM

மே '89 ரூ. 3/-




ஃபன் ஸ்டிக்கர் செட்
TRAVEL INDIA
டிராவல் இண்டியா கேம்
Fun is
ஃபன் ஈஸ் போஸ்டர் செட்
MAGGI®
கிளப்
கேளிக்கையும், உல்லாசமும் நிறைந்த 1989
எல்லா மேகி பிரியர்களுக்கும் இந்த ஆண்டு விதவிதமான புதிய பரிசுகளை மேகி கிளப் வழங்குகிறது.
உங்கள் இலவசப் பரிசை உடனே பெறுங்கள்!
5 மேகி நூடுல்ஸின் காலி பேக்குகளிலிருந்து அதன் முன்பக்கம் அச்சிடப்பட்டுள்ள இந்த முத்திரையை வெட்டியெடுத்து எமக்கு அனுப்பினால், நீங்கள் விரும்பும் ஒரு இலவசப் பரிசு உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். 6 முதல் 8 வாரங்களுக்குள் மேகி கிளப்பில் இருந்து கேளிக்கைகள் நிறைந்த பரவசமூட்டும் பரிசு உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.
மறவாதீர்:
நீங்கள் மேகி கிளப் உறுப்பினர் எனில் ஒவ்வொரு முறையும் எமக்கு எழுதும்போது உங்கள் பெயர், முகவரி மற்றும் உறுப்பினர் எண்ணுடன் நீங்கள் விரும்பும் பரிசின் பெயரையும் குறிப்பிட்டு எழுதவும்.
நீங்கள் மேகி கிளப் உறுப்பினர் இல்லையெனினும் கூட எமக்கு எழுதும் போது உங்கள் பெயர், முகவரியுடன் நீங்கள் விரும்பும் பரிசின் பெயரையும் குறிப்பிடவும்.
HTA 6320 TAM
I'M A MAGGI CLUBBER
MAGGI CLUB
எங்கள் முகவரி: மேகி கிளப், அஞ்சல் பெட்டி எண்: 5788, புது தில்லி 110055



கோகுலம்

1989 மே மாத இதழ்
மலர் 7 இதழ் 4

அருமைச் சிறுவர் சிறுமியரே,

குழந்தைக் கவிஞர் காலமானதையொட்டி உங்களிடமிருந்தும் உங்கள் பெற்றோர்களிடமிருந்தும் எனக்கு வந்த ஆயிரக்கணக்கான கடிதங்கள் என் வருத்தத்தைப் பகிர்ந்து கொள்வதாகவும் எனக்கு ஆறுதல் கூறுவனவாகவும் இருந்தன.

கோகுலம் பத்திரிகையைத் தொடர்ந்து சிறப்பான முறையில் நடத்தி வருவதே அழ. வள்ளியப்பாவுக்கு நாம் செலுத்தக் கூடிய மெய்யான அஞ்சலி என்பதை வற்புறுத்தியும், அதற்குத் தங்கள் முழு ஆதரவைத் தருவதாக வாக்களித்தும், கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் எழுதியுள்ளனர்.

உங்கள் அனைவருடைய ஏகமனதான விருப்பத்தைக் கட்டளையாக ஏற்று, துயரை ஒதுக்கிக் கடமையைத் தொடர்கிறேன். எனக்கு இந்தப் பணியில் கைகொடுத்து உதவி, இந்தப் பத்திரிகையை மேலும் புதுமையான முறையில் நடத்திச் செல்ல, ஒரு ''தேச பந்து'' எனக்குக் கிடைத்திருக்கிறார்.

'தேச பந்து' என்றால், 'இந்த நாட்டையும் இந்நாட்டிலுள்ள மக்கள் எல்லோரையும் தனது நெருங்கிய உறவினர்களாகக் கருதுகிறவர்' என்று அர்த்தம். நெருங்கிய உறவினர்களைப் 'பந்துக்கள்' என்று நாம் குறிப்பிடுவதுதான் உங்களுக்குத் தெரிந்திருக்குமே! அப்படி இவர் தேச பந்து! தேசத்தின் எதிர்காலக் குடிமக்களான உங்கள் நலனுக்காகச் சிறந்த முறையில் பணியாற்றக் காத்திருக்கும் அண்ணன்! பத்திரிகைத் துறையில் அவர் தேர்ந்த அனுபவம் உள்ளவர். குழந்தை இலக்கியத்தில் அளவற்ற ஆர்வம் கொண்டவர். குழந்தை எழுத்தாளராகப் பணியாற்ற ஆரம்பித்துப் பிறகு பெரியவர்களுக்காக எழுதிக் கொண்டிருந்து விட்டு, இப்போது மறுபடியும் குழந்தைகள் பக்கமே தமது முழுக் கவனத்தையும் செலுத்த முன் வந்திருக்கிறார்.

அடுத்த இதழ் முதல் கோகுலம் அவருடைய எழுத்தையும் யோசனைகளையும் ஏற்றுப் புதுப் பொலிவுடனும் புதிய அம்சங்களுடனும் உங்கள் கரங்களை அலங்கரிக்கும்.

அன்புடன்,

(கி. ராஜேந்திரன், ஆசிரியர்.)

உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

— பாரதியார்.

குழந்தைக் கவிஞரின் மறைவு எதிர்பாராத அதிர்ச்சி. மனத்தில் எழும் துக்கத்தை வார்த்தையில் வடிக்க முடியவில்லை.

மம்சாபுரம், அழ. கிருஷ்ணமூர்த்தி.

* இலக்கிய உலகில் தனக்கென ஒரு பாணியை ஏற்படுத்திக் கொண்டு ஓசைப்படாமல் ஓராயிரம் பணிகளைச் செவ்வனே செய்து கொண்டிருந்த தலைசிறந்த எழுத்தாளர், கவிஞர் ஒருவரை நாம் இழந்திருப்பது ஈடு செய்ய முடியாதது...

திருச்சி — 16, ஜானகி மணாளன்.

* 'சிரிக்கும் பூக்கள்' எனச்
செல்வச் சிறுவருக்கு
அரிதாய் நூலியற்றி
அறிவைப் புகட்டிட்டார்.
இளையோர் கவிதந்தார்
இன்றோ அவரில்லை.
களைத்துச் சோர்கின்றோம்
கண்ணீர் சொரிகின்றோம்.

கீரப்பாளையம்,
புவனை கலைச்செழியன்.



* ஆடம்பரமில்லாதஎளியநிகழ்ச்சிகளில் ஒரு சோபையையும் கண்ணியத்தையும் சேர்க்கத் தெரிந்தவர் வள்ளியப்பா. நமது முப்பதாவது வயதிலேயே பொதுப் பணியில் நல்ல நிர்வாகி என்று பெயர் வாங்கி விட்டார்... 1952 முதல் முப்பத்தேழு ஆண்டுகள் தொடர்ந்த நண்பர் இல்லை என்ற செய்தியைத் தாங்கச் சிரமப்படுகிறேன்... — தொடக்க காலங்களில் பொருளாதார நெருக்கடியில், நண்பர் என்ற உரிமையுடன் அவரது உதவியை நாடியதுண்டு. என்னை உடன்பிறந்த தம்பி போல் அவர் பாவித்த பெருந்தன்மையை மறக்க இயலாது.

புதுதில்லி, தம்பி சீனிவாசன்.

* குழந்தைக் கவிஞரும் எங்கள் கோகுலத்தின் கௌரவ ஆசிரியருமான திரு. அழ. வள்ளியப்பா காலமாகிவிட்ட செய்தியைக் கேட்டு, பெரும் துயரத்தில் ஆழ்ந்தோம். அவர் கோகுலத்தில் எழுதி வந்த, 'பழைய கதை — புதிய பாடல்' கவிதைகளைப் படிக்கும்போது எங்களுக்குத் தனி உற்சாகம் ஏற்படும். இனி அம்மாதிரியான பாடல்களை யார் எழுதுவார்கள் ...? ஆழ்ந்த துக்கத்தில் தவிக்கிறோம், நாங்கள்......

பேதாதம்பட்டி புதூர்,
பி. கோவிந்தசாமி (5,703).

* லட்சியங்களுடன் வாழ்ந்து வாழ்வில் பிரகாசிக்கக் கோகுலம் மூலம் எங்களுக்கு அறிவுரை தந்து ஊக்கப்படுத்திய நம் ஆசிரியர் அமரராகி விட்ட செய்தி, எங்களை ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்திவிட்டது.

இராஜாக்கமங்கலம்,
சிவ. அய்யப்பன் (12,088).

கௌரவ ஆசிரியருக்குக் கண்ணீர் காணிக்கை

* ஓர் ஒப்பற்ற இலக்கியச் செம்மலை, காந்தி பக்தரை, தேச பக்தரை, தமிழன்னையின் தவப்புதல்வரை இழந்துவிட்ட துர்ப்பாக்கியசாலிகளாகிவிட்டோமே...!

சென்னை — 61,
கண்ணப்பர் தேவதாஸ் (தாணு).

* குழந்தைகள் புத்தக டிரஸ்ட் ஏற்படுத்த வேண்டும் என்பது வள்ளியப்பாவின் நெடுநாளைய லட்சியம். அது நிறைவேற்றப்பட்டால் அதுவே அவருக்கு உகந்த நினைவுச் சின்னமாக அமையும்.

சென்னை — 18,
புத்தனேரி சுப்பிரமணியம்.

* குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்காக அயராது உழைத்தவராகவும், சக எழுத்தாளர்களிடம் பண்போடும் அன்போடும் பழகுபவராகவும், பிற எழுத்தாளர்களை உற்சாகப்படுத்துபவராகவும், ஊக்கப்படுத்துபவராகவும் தம் வாழ்நாள் முழுதும் திகழ்ந்தார் அவர்.

பரமக்குடி, மு. திருஞானம்.
(அன்பிற்கினியவன்)

* திண்டிவனம் அரிமா மகளிர் சங்க ஆண்டு விழாவில் கவிஞர் கலந்து கொண்ட போது, 'அழ. வள்ளியப்பா சிறுவர் மன்றம்' என்ற பெயர்ப் பலகையை அவர் அறியாமலேயே திறக்கச் செய்து, புகைப்படம் எடுத்து, கோகுலத்தில் வெளியிட அனுப்பினோம். தன்னடக்கம் காரணமாக அதை அவர் வெளியிடவில்லை...

வெள்ளிமேடு பேட்டை,
ஆ. ஜெயராமன்.

* மதுரைப் பல்கலைக் கழகத்தில் நடந்த பாராட்டுக் கூட்டத்தில், குழந்தை இலக்கியத்தைப் பாடமாக வைக்குமாறு வேண்டுகோள் விடுத்துப் பேசி அமர்ந்தார் குழந்தைக் கவிஞர். அடுத்த இரண்டாவது நிமிடம் என் மீது சாய்ந்தார். மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். ஆனால் மனித முயற்சியைத் தெய்வச் செயல் வென்று விட்டது.

காரைக்குடி, தெ. முருகசாமி.
(முதல்வர் — இராமசாமி தமிழ்க் கல்லூரி)

* எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பேரிழப்பை அவரது கவிதைகள்தாம் ஆறுதல் அளித்துத் தேற்ற இயலும்.

சென்னை — 26, ஹேமாசிமின் (7637).



என்னுடைய சின்ன வயதிலே...

அழ. வள்ளியப்பா

1936 ஆம் ஆண்டு. ஏடு தூக்கிப் பள்ளி செல்லும் பருவம். நாலைந்து சிறுவர்களுடன் தினம் இராயவரத்திலிருந்து ராமச்சந்திரபுரம் பள்ளிக்குப் புத்தகச் சுமையுடன் உணவுத் தூக்குடனும் செல்வேன்.

வழியில் சுவரில் 'Lost Jungle' என்னும் ஆங்கிலப் படத்துக்கான சுவரொட்டியைப் பள்ளியிலிருந்து திரும்பும்போது கண்டோம். எனது நண்பர்கள் அந்தத் திரைப்படச் சுவரொட்டியில் மூழ்கிப் போய் நின்று விட்டார்கள். அந்தச் சமயத்தில் அவர்களை வீட்டுக்கு இழுத்துச் செல்ல என்னையறியாமலே கவிதை வரிகள் உதித்தன.

'காணாத காடு!
கண்டு விட்டால் ஓடு
எளிய இடம் தேடு
ஏழைகள் படுவதோ அரும்பாடு!
டிக்கெட் விலையோ பெரும்பாடு!'

இந்தப் பாடலை நான் பாட, என் நண்பர்கள் கோரஸாக எதிரொலிக்க ஆனந்த நடனம் புரிந்தபடி வெகு சீக்கிரமே இராயபுரம் திரும்பினோம்!

குழந்தைகளின் உள்ளம் கவர்ந்த நேருஜி பிறந்த நவம்பர் மாதத்தில் தான் 1922 வருஷம் ஏழாம் தேதி பிறந்தேன்.

என் தந்தை அழகப்பச் செட்டியார் பர்மாவில் ஒரு வட்டிக் கடையில் மேலாளராகப் பணி புரிந்தவர். ஒருவருக்குத் தாம் ஒரு பொருள் கொடுக்க வேண்டியிருந்தால் அதைக் கொடுத்து விட்டுத்தான் மறு வேலை பார்ப்பார். அதே போல் ஒருவர் தமக்கு ஒரு பொருள் தர வேண்டியிருந்தால் அதை வாங்காமல் தூங்க மாட்டார்! 'எதையும் இன்றே செய்! அதையும் இப்போதே செய்!' என்பதுதான் என் தந்தையின் குறிக்கோள்.

புதுக்கோட்டையில் நடைபெறும் சந்தைக்குப் போகும்போது என் தந்தை அழகப்பர் தமக்குத் தெரிந்தவர்களிடம் அவர்களுக்கு ஏதாவது வேண்டுமா என்று கேட்டுக் குறித்துக் கொள்வார். சந்தையிலிருந்து வந்ததும் மற்றவர்களுக்காக வாங்கி வந்த பொருளை அப்போதே கொண்டு போய்க் கொடுக்கச் சொல்வார். இந்த வேலைக்கு அங்கும் இங்குமாக அலைவது என் பொறுப்பு. இரவு நெடு நேரமானாலும் இந்தப் பணியை நிறைவேற்றச் சொல்வார் என் தந்தை.

"விடிஞ்சப்புறம் பொருள்களைக் கொடுத்தனுப்பலாமே! இந்த இருட்டிலே ஏன் பிள்ளையை விரட்டுறீங்க?" என்று என்னைப் பெற்ற தாய் உமையாள் ஆச்சி கெஞ்சுவார்.

என் தந்தையின் கண்டிப்பு, அன்றையக் கணக்கை அன்றே முடிக்கும்

சித்தம்தான் நிறைவேறும்! என் தந்தையிடமிருந்து இந்தக் கண்டிப்பையும் பிறருக்கு உதவும் பண்பையும் பெற்றதில் அவை எனக்குப் பிற்காலத்தில் கைகொடுத்து உதவின.

என் தந்தை அழகப்பர் மில் வேட்டி தான் அணிவார். எனக்குக் காந்தியிடம் உள்ள ஈடுபாட்டினால் கதர்த் துணி அணியத் தந்தையிடம் அனுமதி கேட்டபோது மறுக்காமல் எனது ஆசையை நிறைவேற்றி வைத்தார்!

எங்கள் வீடு 'நடுவளவு' என்று அழைக்கப்பட்டது. என் அன்னை உமையாள் ஆச்சியிடம் சண்டை சச்சரவுக்கு நியாயம் பெறப் பல பெண்மணிகள் வருவதுண்டு. என் ஆச்சியின் தீர்ப்பு பாரபட்சமற்ற நிலையில் இருக்கும். என் தந்தைக்கு அஞ்சி, ஆச்சி பல தடவை ஏழை எளியவர்களுக்குக் கொல்லைப்புற வழியாக உணவோ, பண்டமோ கொடுத்து உதவுவதைக் கண்டிருக்கிறேன்.

இராயவரத்தில் காந்தி பாடசாலையை நிறுவியவர் க. கதிரேசன் செட்டியார். ஓர் இலட்சியவாதியால் நடத்தப்பட்ட பள்ளி இது. என் தந்தை அழகப்பர் பலகையும், புத்தகமும் வாங்கிக் கொடுத்து இப் பள்ளியில் சேர்த்தார். இந்தப் பள்ளிதான் என் கவிதை உள்ளத்துக்கு வித்திட்டது. படிப்போடு பண்பாட்டையும் போதித்தது காந்தி பாடசாலை. கதிரேசனார் கணித மேதை. பிற்



காணாத காடு, கண்டுவிட்டால் ஓடு. எளிய இடம் தேடு!

காலத்தில் நான் வங்கியில் கணிதத்தில் சிறப்புற விளங்க அஸ்திவாரமிட்டதே காந்தி பாடசாலைதான்! மணிவிழா கொண்டாட ஒதுக்கிய பெரும் தொகையைக் கதிரேசனார் கூரைக் கட்டிடப் பள்ளியை மாடிக் கட்டிடமாக்கிய பெருந்தன்மை என்னைக் கவர்ந்தது!

ஒருநாள் காந்தி பாடசாலைக்குக் காவல்துறையைச் சார்ந்த சப்–இன்ஸ்பெக்டர் வருகை தந்தார். பாடசாலைக் கட்டிடத்தைச் சுற்றி வந்தார். பிறகு பள்ளித் தலைமை ஆசிரியரிடம், "இங்கே கை ராட்டைகள் இருப்பதாகக் கேள்விப்பட்டேனே! அவை எங்கே?" என்று கேட்டார்.

"இப்போது நாங்கள் ராட்டைகளைப் பயன்படுத்துவதில்லை. அவை பரண் மீது கிடக்கின்றன!" என்றார் தலைமை ஆசிரியர்.

"ஏன் அப்படிச் செய்தீர்கள்? ராட்டையில் நூற்பது குற்றமில்லையே! பரண் மீது கிடக்கும் ராட்டையை எடுத்துப் பயன்படுத்துங்கள்!" என்றார் சப்–இன்ஸ்பெக்டர். அந்தக் காலத்தில் நாட்டுப்பற்று மிக்க காவல் அதிகாரிகளும் இருந்திருக்கிறார்கள்!

அன்று பகல் பன்னிரண்டு மணிக்குப் பள்ளி விட்டதும் வீட்டுக்கு ஓடினேன். உமையாள் ஆச்சி எனக்காகத் தட்டில் உணவு எடுத்து வைத்தார். ஆச்சி அன்று மாமிசம் சமைத்திருந்தார்.

"ஆத்தா! எனக்கு மாமிசம் வேண்டாம்!"

"தம்பி! மாமிசம் சாப்பிடு! பிறகு ஏலக்காய் தருகிறேன்! வாயிலே போட்டுக்கோ. வாத்தியாரு கேட்டா மாமிசம் சாப்பிடலைன்னு சொல்லிப் போடு! வாயிலேயும் ஊதிக் காட்டு. மாமிச வாடை வராது," என்றார் உமையாள் ஆச்சி.

"ஆத்தா! மாமிசம் சாப்பிட்டு விட்டு வாத்தியாரிடம் இல்லைன்னு சொல்ல எனக்குப் பிடிக்கலே! ஏலக்காய் சாப்பிட்டு ஆசிரியரை ஏமாத்தவும் பிடிக்கலே! எனக்கு மாமிசம் வேண்டாம் ஆத்தா!"

என் பிடிவாதத்தைக் கண்டு உமையாள் ஆச்சியின் மனமும் தளர்ந்தது!

வீட்டுப் பாடம் கற்க ஐந்து ரூபாய் என் தந்தை என் தலைமை ஆசிரியர் ஆனந்தப் பிள்ளைக்குக் கொடுத்து வந்தார். வீட்டுப் பாடம் சொல்லிக் கொடுத்தால் வருஷம் அறுபது ரூபாய்க்காக என்னை மூன்றாவது வகுப்பிலிருந்து நாலாவது வகுப்புக்குத் தூக்கிப் போட்டு விட்டிருப்பார்' என்று என் தந்தை அழகப்பர் கேலி செய்தார்! எனக்கு ரோஷம் பொத்துக் கொண்டது!

"அப்பச்சி! இனிமே எனக்கு டியூஷன் வேண்டாம்! நானே படிச்சு நல்ல மார்க் வாங்கி பாஸ் செய்து காட்டுகிறேன்!" என்று கூறுரைத்தேன்!

இராயவரத்தில் தொடக்கப் பள்ளிப் படிப்பை முடித்து இராமச்சந்திரபுரம் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தேன். அதனால் எட்டு மணிக்கே பள்ளிக்குப் புறப்பட வேண்டும். எனது சகாக்கள் மதிய உணவுக்குப் பழைய சோற்றையே எடுத்து வருவார்கள். என் அன்னையிடம், "எல்லாப் பையன்களும் பழைய சாதம்தான் கொண்டு வர்றாங்க. நானும் பழைய சாதமே கொண்டு போறேன், ஆத்தா!" என்று அவர்களது சிரமத்தைச் சொல்லிக் கெஞ்சுவேன். ஆனால் தம் சிரமத்தைக் கருதாது ஒரு நாளும் எனக்குப் பழைய சாதம் கட்டித் தந்ததில்லை.

உன்னைப் போலே வளர்த்திடுவோர்
உலகில் உண்டோ வேறொருவர்?
என்னைக் காக்கும் அம்மாவே
எனக்குத் தெய்வம் நீதானே?


எங்கள் நடுவளவு வீட்டுக்குப் பக்கத்தில் நடுத்தர வீடு. அந்த வீட்டில் வசித்தவர் அழகப்பச் செட்டியார். அவரது மனைவி அலர்மேலு ஆச்சி. அவர்களுக்குப் பிள்ளையில்லாக் குறை! ஆகவே என்னைச் சுவீகாரம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். செட்டி நாட்டில்

சுவீகாரம் கொடுப்பதும் எடுப்பதும் வழக்கமாக உள்ளது.

எங்கள் வீட்டில் தேனப்பன், அருணாசலம், நான், வள்ளியம்மை என்று நான்கு குழந்தைகளிலிருந்ததால் என் உமையாள் ஆச்சிக்கு என்னைச் சுவீகாரம் கொடுப்பதில் தயக்கமிருக்கவில்லை.

எனக்கு ஐந்து வயது. என்னைச் சுவீகாரம் பெறப் போவதில் பெருவகை எய்தினார் அலர்மேலு ஆச்சி! ஆனால் சுவீகார நாளுக்குச் சில தினங்கள் முன்பே அந்த ஆச்சி இறந்து விட்டார். மனைவி இழந்த சோகத்திலும் அழகப்பர் என்னைச் சுவீகாரம் எடுத்துக் கொள்ளும் ஆர்வத்தை விட்டு விடவில்லை.

இராமச்சந்திரபுரம் உயர்நிலைப் பள்ளிக்கு மாட்டு வண்டியில் செல்வது வழக்கம். மாட்டு வண்டிக்கு மாதம் மூன்று ரூபாய் வாடகை. எனது நண்பன் பெரியண்ணனும் மூன்று ரூபாய் தந்தான். ஆனால் ஏழைச் சிறுவன் அனந்த நாராயணனிடம் இலவசமாகவே பள்ளிக்கு அழைத்துச் சென்றோம்! எனக்கு மாட்டு வண்டி ஓட்டுவதிலும் தேர்ச்சி பிறந்தது! ஒரு தடவை அழகப்பன் வண்டியை ஓட்டும்போது மற்றொரு வண்டி எங்கள் மாட்டு வண்டியை முந்த முயன்றது! அழகப்பன் சும்மாயிருப்பானா? தார்க் குச்சியினால்



எனக்கு மாட்டு வண்டி ஓட்டுவதிலும் தேர்ச்சி பிறந்தது.

மாட்டைக் குத்தி விரைவுபடுத்தினான்! இதன் விளைவு எங்கள் மாட்டு வண்டி பள்ளத்தில் தடம் புரண்டது! நாங்கள் வண்டியிலிருந்து பூசணிக்காய் போல் உருண்டு விழுந்தோம்!

எங்கள் 'பூமீஸ்வரநாத உயர் நிலைப் பள்ளிக்குக் குறிப்பிடத்தக்க பெருமை உண்டு. அண்ணல் காந்தியடிகள் இப் பள்ளிக்கு வருகை தந்து, பள்ளி மாணவர்களைக் கதர் அணியுமாறும் தக்களியில் நூல் நூற்குமாறும் அறிவுரை வழங்கியிருக்கிறார்

என்னோடு படித்த மாணவர்களில் குன்றக்குடி அடிகளார், பழனியப்பா பிரதர்ஸ் உரிமையாளர் பழனியப்பன் குறிப்பிடத்தக்கவர்கள். நான் படித்த பள்ளியிலேயே கல்கி சதாசிவமும் எழுத்தாளர் வஸந்தனும் கற்றிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன்.

எனக்கு ஓவியம் வரைவதில் அளவற்ற ஆசை. ஒருநாள் பள்ளித் தோழன் அருணாசலம், "உன்னால் ஆம்பிளை, பொம்பளை படம் வரைய முடியுமா?" என்று கேட்டான்.

எனது ஓவிய ஆர்வத்தில் ஒரு பெண் பிள்ளையின் படத்தை வரைந்து காட்டினேன். அந்தப் படத்தை வைத்து ஒரு விபரீதத்தை அருணாசலம் தோற்றுவிப்பான் என்று கனவிலும் நினைக்கவில்லை.

அடுத்த நாள் வகுப்பாசிரியர் வீராசாமி ஐயர், "இந்தப் படத்தை வரைந்தது யார்?" என்றதும், "நான்தான் வரைந்தேன்!" என்று எழுந்து நின்றேன். உடனே அவர், "இந்தப் படத்தின் கீழ் மங்களம் என்றும் எழுதினாயா?" என்று கேட்டார். அருணாசலத்தின் குறும்பு பற்றி எடுத்துச் சொன்னேன். ஆனால் அருணாசலம் பொய் சொல்லித் தப்பிக்கப் பார்த்தான். ஆனால் ஒரு மாணவன், அருணாசலம் அந்தப் படத்தை மங்களம் மேஜையில் வைத்ததை எடுத்துச் சொல்லி விட்டான்!

ஆசிரியர் வீராசாமி ஐயர் அருணாசலத்தையும் என்னையும் தலைமை ஆசிரியரிடம் அழைத்துச் சென்று நடந்த கதையைக் கூறினார்.

தலைமை ஆசிரியர், அருணாசலத்துக்கு நான்கு பிரம்படியும் எனக்கு இரண்டு பிரம்படியும் வழங்கப் போவதாகச் சொல்லி, என் கையை நீட்டச் சொன்னார்!

"சார்! நான் ஒரு தவறும் செய்யவில்லை. எனக்கு எதற்குத் தண்டனை?" என்று கையை நீட்ட மறுத்தேன்!

அருணாசலத்துக்குப் பிரம்படிகள் விழுந்தன! "இவனைப் போன்ற பொல்லாதவரோடு சகவாசம் வைத்துக் கொள்ளாதே!" என்று தலைமை



ஆசிரியர் கூறி அனுப்பி வைத்தார்!

நான் பள்ளி செல்லுவதற்காகத் தந்தை தரும் 'பஸ் சார்ஜ்' ஓரணாக்களைச் சேகரித்து, நடந்து சென்று, புத்தகங்களை வாங்கிப் படித்ததுண்டு.

ஒரு தடவை தமிழ் வகுப்பில் கட்டுரை எழுதும் போது மேற்கோளாக நாலடியாரைக் குறிப்பிடுகையில் நாலாவது அடி மறந்து விட்டது. சொந்தமாகவே ஒரு வரி எழுதிச் சேர்த்து விட்டேன்.

தமிழாசிரியர் அன்று வகுப்புக்கு வந்ததும், ''ஓய், நாலாவது அடியாரே, எழுந்து வாரும்!'' என்று கூறினார்.

''நாலாவது அடி மறந்து விட்டது. அதனால்தான்!'' என்று இழுத்தேன்.

''அதனாலென்ன? பொருத்தமான அடியையே எழுதியிருக்கிறாய்!'' என்று தமிழாசிரியர் முதுகில் தட்டிக் கொடுத்தார்!

பள்ளித் தோழர்களுக்கு உதவுவதற்காகப் பல நூல்களை அவர்களுக்குப் படிக்கக் கொடுத்து, ஒரு 'நடமாடும் குட்டி நூலக'மாகவே பள்ளிப் பருவத்தில் பவனி வந்தேன்!

இராயவரத்தில் பாரதி வாலிபர் சங்கம் நிறுவிப் பாரதி விழா காந்தி ஜயந்தி நடத்திய ஊக்கத்தினால்தான் பிற்காலத்தில் எனக்குப் பல விழாக்கள், மாநாடுகள் நடத்தக் கூடிய ஆற்றல் பிறந்தது!

1940—ஆம் ஆண்டு. பள்ளியிறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றேன். எனக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கல்லூரிப் படிப்பு படிக்க ஆசை. ஆனால் தந்தை அழகப்பரோ. ''எதிர்த்த வீட்டுப் பழனியப்பன் கூட எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்த பிறகு கல்லூரியில் சேர்ந்து படிக்கச் செல்லவில்லையே? நீயும் காலேஜ் போக வேண்டாம்!'' என்று உறுதியாகச் சொல்லி விட்டார்! இராயவரத்திலேயே விவேகானந்தர் வாசக சாலையும் பாரதி வாலிபர் சங்கமும் பொழுது போக உதவின.

மூன்று மாதங்களுக்குப் பிறகு வை. கோவிந்தன் என்னைச் சென்னைக்கு அழைத்துச் சென்று சக்தி காரியாலயத்தில் பொருளாளராக நியமித்தார். சக்தி காரியாலயத்தில் பிரபல எழுத்தாளர் தி. ஜ. ர. வின் சிநேகம் கிட்டியது 'சக்தி'யில் பொருளாளராகப் பணியாற்றினாலும் எழுத்தார்வத்துக்கு அது வடிகாலாக அமைந்தது! எழுத்தாளர்களின் பொருளாதார நிலை எனது முழு நேர எழுத்தார்வத்துக்குத் தடை போட்டு 1941—ல் இந்தியன் வங்கியில் சேர வைத்தது. இந்தியன் வங்கிப் பணியிலிருந்து கொண்டே குழந்தை இலக்கியப் பணியைத் தொடர்ந்தேன்.



புதிய

சித்திரத் தொடர்கதை ஆரம்பம்

கதை: தேசபந்து

படம்: ஜி...

எனக்கு வள்ளியம்மையுடன் திருமணம் நடந்து, நான்கு புதல்விகளுக்கும், ஒரு புதல்வனுக்கும் தந்தையானேன். பேரன் பேத்திகளோடு கொஞ்சிக் குலாவுதலோடு என் குழந்தை இலக்கியப் பணிகளும் தொடர்ந்தன.

வையமே வியக்கும் வண்ணம்
வள்ளியப் பா! உன் நெஞ்சுள்
தெய்வமே குழந்தை யாகித்
திருவிளை யாடல் ஒன்று
செய்வமே என்று மெள்ளச்
சேர்ந்ததோ? சிறுவர்க் காகச்
செய்வமே பாடல் என்று
பெய்ததோ! உண்மை பேசு!''


— சௌந்தரா கைலாசம்.


ஆதாரம்: பூவண்ணன் எழுதிய குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா வாழ்க்கை வரலாறு.


எதற்கும் ஒரு நேரமுண்டு.,

விமலன்




ஹி ஹா! ஹி ஹா!
என்ன இது?
கழுதை குரல் போல இருக்கு...
அக் கழுதையைப் பிடிச்சா, பொதிகளை ஏத்தலாமே! வண்டியை நிறுத்து!
ஹி ஹா! ஹிஹா!!
ஹை! கழுதையும் ஒட்டகமும் போகுது பார்.
அது நமக்கு தேவை!
ஹோய்!
புடி, ஒட்டகத்தை வுட்டுடாதே!
உன் முட்டாள்தனம் செய்த விளைவைப் பார்த்தாயா?
வாயை மூடு! உன் பேச்சு எனக்கு வேணாம்....
விரைவில்


கழுதைக்கு முடியாமல் விழுந்து விட்டது. ஓடு, ஒரு வேளை முதுகு வலிக்குமோ! மூட்டையை இறக்கு.!!
ஹா!
மூட்டையையும் கழுதையையும் அதன் மேலேத்து..
உனக்கு வலிக்கவில்லை, நடிக்கிறாய்?
ஹி ஹி ஹி
ஹி ஹி
உனக்குப் பாடம் கற்பிக்கிறேன், பார்!
மரப்பாலம் அருகே,
தம்பீ! எனக்கு டான்ஸ் ஆடணும் போலிருக்கு..
ஐயா! வேண்டாம் கீழே விழுந்து விடுவேன்...
நான் சொல்லிக்கேட்கவில்லை, டான்ஸ் ஆடத்தான் போகிறேன்.




அட்டை வண்ணப்படம்: யோகா

பிருந்தா

உலகிலேயே மிகச் சிறிய விமானம்!

விரைவான பயணத்து விமானம். மிகவும் பயன் உள்ளதாக இருக்கிறது.

அதில் சிறப்பு வாய்ந்த விமானத்தைப் பற்றிய தகவல் கிடைத்திருக்கிறது. இதன் எடை வெறும் 47 கிலோ தான், நீளம் 3 மீட்டர் இருக்கிறது. உயரம் ஒரு மீட்டர் இறக்கையின் பரப்பு 15 சதுர மீட்டர் இதன் குறைந்த பட்ச வேகம் 30 மைல். ஒரு மணி நேரம் இந்த விமானம் பறக்க 3 லிட்டர் காசோலின் எரி பொருள்




தேவைப்படுகிறது. ஓடு பாதையில் ஓடி வானத்தில் சீறிப் பாய்கிறது. ரஷ்யாவில் உள்ள கிர்கிளியா குடியரசுத் தலைநகர் பிரன்ஸேயைச் சேர்ந்த நிபுணர் விக்தர் திமித்ரியேவ் இந்த விமானத்தை உருவாக்கி இருக்கிறார். புவி இயல் நிபுணர்கள், வனத் துறை நிபுணர்கள், உழவியல் நிபுணர்கள் ஆகியோருக்கு இந்த விமானம் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

— வந்தை கே. சீனிவாசன்.
வந்தவாசி.

கோவைப் பள்ளிக்கு உலகப் பரிசு!


அகில உலகத் தபால்தலை சேகரிப்புக் கண்காட்சி புதுதில்லியில் ஜனவரி '89 — ஆம் ஆண்டு 20 — ஆம் தேதி முதல் 29 — ஆம் தேதி வரை நடந்தது. இதில் கோவை மாவட்டத்திலிருந்து கார்மல் கார்டன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி மட்டுமே கலந்து கொண்டது. கடந்த 40 ஆண்டு காலத்தில் சுதந்திர இந்தியா பல்வேறு துறைகளில் பெரிய முன்னேற்றத்தைச் சித்திரிக்கும் வகையில் தபால்தலைகளை நயமாக முறைப்படுத்தி அனுப்பினார்கள். இதனால் இப்பள்ளி உலகிலேயே முதல் முதலாக வந்துள்ளது. இதற்காக வெள்ளிப் பதக்கம் இப்பள்ளிக்குக் கிடைத்தது. இப்பள்ளி 1977, 1982, 1987 — ஆம் ஆண்டுகளில் தேசிய விருதுகளும், பெற்றிருக்கிறது. நமது நாட்டைச் சேர்ந்த ஒரு பள்ளி, அதுவும் நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த பள்ளி அகில உலகப் பரிசைப் பெற்றதில் நம் அனைவருக்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது அல்லவா? இப்பள்ளி உலக விருதைப் பெறுவது இதுவே முதல்



முறை ஆகும். இப்பள்ளியின் முதல்வர் அருட்திரு. ஜோசப் பெலிக்ஸ் அவர்கள். தபால்தலை சேகரிக்கும்



...வனம்




பொறுப்பை ஏற்று நடத்திய ஆசிரியர் திரு பிரான்சிஸ் அல்போன்ஸ் அவர்கள். நானும் இப்பள்ளியில்தான் படித்துக் கொண்டிருக்கிறேன் என்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

— அ. ரெக்ஸ் சகாயம் (22,404),
கோவை — 18.

6000 நிறங்கள்!

நிறங்களிலே ஆறாயிரம் வகைகள் உள்ளன. 1400 வகையான நீலமும், 500 வகை சாம்பல் நிறமும், 550 வகையான மஞ்சள் நிறமும், 820 வகையான பச்சை நிறமும், 1375 வகையான பிரவுன் நிறமும் உள்ளன என்று இங்கிலாந்து நாட்டு வண்ண ஆய்வுக் கழகம் கண்டுபிடித்துள்ளது.



தொகுப்பு: எஸ். விஜயா சீனிவாசன்.

அவனுக்கு இவள் லட்சணம்.

ஒரு நாள், என் வகுப்பில் விடைத் தாள்களைக் கொடுத்துக் கொண்டு வந்த வகுப்பாசிரியர் சக மாணவியிடம் 'நீதான் இப்படி! உங்க தம்பி உனக்கு நேர் ஆப்போசிட்டா இருக்கான்' என்றார். உடனே நாங்கள் இந்த மாணவி மக்கு, எனவே, அவன் ரொம்ப நன்றாகப் படிப்பான் என்று நினைத்துக் கொண்டோம். அவர் தொடர்ந்தார். "நீயாவது பத்து மார்க் வாங்கியிருக்கே? உங்க தம்பி ஒரு மார்க்தான் வாங்கியிருக்கான்!" என்றார். உடனே எங்கள் வகுப்பே, 'குபீர்' என்று சிரித்து விட்டோம்.


— மு. திருநாவுக்கரசு (16742),
மொரப்பூர்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் முதன் முதலில் ரயில் எங்கு ஓடியது தெரியுமா?

பம்பாயிலிருந்து தானா வரை முதன் முதலில் ஓடியது.


தெருத் தெருவாகப் பத்திரிகை



விற்று வந்தவர் கவர்னராக ஆனார் என்பதை உங்களால் நம்ப முடிகிறதா?

நியூயார்க் நகர கவர்னராக இருந்த ஆல்ஃப்ரட்ஸ்மித் முதலில் பத்திரிகை விற்பனையாளராகத்தான் இருந்தார்.

— இ. மோகனகிருஷ்ணன் (18327), விழுப்புரம் — 2.



மூத்தது எது?

உலகில் இரட்டைக் குழந்தைகள் பிறந்தால், முதலில் பிறந்த குழந்தை தான் மூத்ததாகக் கருதப்படுகிறது. ஆனால், ஜப்பானில் இரண்டாவது பிறந்த குழந்தைதான் மூத்தது.

— வ. அருள்முருகன் (10,080), கடலூர் — 1.

தலைமேல் வேலை



பாட்டி: பால் வாங்கிட்டு வான்னு சொன்னால் தலைமேல் வேலை இருக்குன்னு சொல்றியே, அப்படி என்ன வேலை?

பேத்தி: பேன் பார்க்கிற வேலை தான்!

— மா. வெங்ளிங்கிரி (21604), வடசித்தூர் — 2.

உலக மொழிகளிலே

உலகத்தில் சுமார் மூன்றாயிரம் மொழிகள் பேசப்படுகின்றன. 10 லட்சம் பேருக்கு மேல் பேசும் மொழிகள் மொத்தம் 160 தான். மூன்று கோடி பேருக்கு மேல் பேசும் மொழிகள் 13 மட்டுமே. இதில் அதிகம் பேசப்படும் மொழி சீன மொழி தான்.

சீன மொழி — 70 கோடி பேர்.
ஆங்கிலம் — 30 கோடி பேர்.



— ஏ. முத்து (23,006), மேலூர் — 106.



புத்தரும் பௌர்ணமியும்

புத்தர் பிறந்தது பௌர்ணமியன்று. புத்தர் இறந்தது பௌர்ணமியன்று. புத்தருக்கு ஞானம் கிடைத்ததும் பௌர்ணமியன்றே.



எட்டுக் கோழிக் குஞ்சுகள்

அழ. வள்ளியப்பா



எட்டுக் கோழிக் குஞ்சுகள்
இரையைத் தேடிச் சென்றன.
குட்டை யாக ஒருபுழு
குறுக்கே செல்லக் கண்டன.

பார்த்த வுடனே எட்டுமே
பாய்ந்து கொல்ல முயன்றன.
யார்தான் புழுவைத் தின்பது?
என்று சண்டை போட்டன.


சிறகை அடித்துக் கொண்டன;
சீறித் தாவிக் கொத்தின;
குரலைக் காட்டி வேகமாய்க்
கோபத் தோடு கூவின.

அம்மாக் கோழி குரலுமே
அந்தச் சமயம் கேட்கவே,
வம்புச் சண்டை நிறுத்தின.
மனத்தைக் கட்டுப் படுத்தின.

சண்டை ஓய்ந்து போனதும்
தரையைக் கூர்ந்து நோக்கின.
கண்ணில் அந்தப் புழுவையே
காண வில்லை; இல்லையே!

சண்டை முடியும் வரையிலும்
சாவ தற்கு நிற்குமோ?
மண்டு அல்ல அப்புழு.
மகிழ்ந்து தப்பி விட்டதே!

மின்மினிக் கதைகள்



காலமறிந்து செய்தல்

"எப்பொழுதும் ஓயாமல் பேசிக் கொண்டிருப்பதால் ஏதேனும் நன்மை உண்டா?" என்று மாணவர்கள் ஆசிரியரைக் கேட்டனர்.

"நீங்களேதான் முடிவுக்கு வரவேண்டும். இரவு முழுதும் ஓயாமல் 'க்ரக் க்ரக்' என்று கத்திக் கொண்டிருக்கும் தவளையையும் ஓசை எழுப்பிக் கொண்டிருக்கும் வண்டுகளையும் பாருங்கள். இவற்றின் பேச்சால் நமக்குத் தொல்லையே தவிர நன்மை உண்டா சொல்லுங்கள்" என்று கேட்டார் ஆசிரியர்.

"தொல்லைதான் ஐயா" என்றார்கள் மாணவர்கள்.

"அதே சமயம் காலம் தவறாமல் அதிகாலையில் நம் எல்லோரையும் எழுப்பிவிடும் சேவலின் குரலைப் பாருங்கள். அதன் குரல் கேட்டதும் உலகமே விழித்துக் கொள்கிறது. எல்லோரும் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்குகின்றனர். சேவலும் ஓயாமல் குரலெழுப்புவதில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது?" என்று மீண்டும் வினவினார் ஆசிரியர்.

"காலமறிந்து பேசினால் காலமறிந்து செயல் செய்தால் எல்லோர்க்கும் நன்மை விளையும் என்று புரிகிறது" என்றார்கள் மாணவர்கள்.

எந்த மதம் உயர்ந்தது?



அந்த ஆண்டு பருத்தி விளைச்சல் முடிந்தது. உழவர்கள் விளைந்த பருத்தியை விற்பதற்காகப் பக்கத்து ஊர் சந்தைக்குக் கூட்டம் கூட்டமாகச் சென்று கொண்டிருந்தனர்.

சைவர், வைணவர், கிறித்துவர் முதலிய பல சமயத்தினர் அந்தக் கூட்டத்தில் இருந்தனர்.

வழியிலிருந்த பெரிய ஆல மர நிழலில் அவர்கள் அனைவரும் இளைப்பாறுவதற்காக அமர்ந்தனர்.

சிறிது நேரத்தில் அவர்கள் பேச்சு 'யார் பின்பற்றுவது உண்மையான சமயம்?' என்று திரும்பியது.

''சைவ சமயமே உண்மையான சமயம். சிவபெருமானே எல்லாக் கடவுளுக்கும் மேலானவர்'' என்றார் சைவர் ஒருவர்.

''இல்லவே இல்லை, திருமால்தான் பெரியவர். வைணவமே உண்மை யான சமயம்'' என்று உரக்கச் சொன்னார் வைணவர்.

''ஏசுவை மறந்துவிட்டு, நீங்கள் இருவரும் வீண் பேச்சில் இறங்கி யிருக்கின்றீர்கள்'' என்றார் கிறித்துவ சமயத்தில் ஒருவர்.

அவ்வளவுதான், அங்கிருந்த கூட்டம் மூன்று பிரிவாகப் பிரிந்து எங்கள் மதந்தான் உயர்ந்தது என்பதை நிலைநாட்ட ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளும் நிலைக்கு வந்துவிட்டனர்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த பெரியவர், ''எது உண்மையான சமயம் என்று உங்களுக்குத் தெரிய வேண்டும். அவ்வளவு தானே?'' என்றார்.

''ஆமாம்'' என்றார்கள் எல்லோரும்.

''நீங்கள் கொண்டு வந்திருக்கும் பருத்தியை விற்பதற்காகச் சந் தைக்குச் செல்கிறீர்கள், அங்கு யாருடைய பருத்தி அதிக விலைக்குப் போகும் சைவருடையதா? வைணவருடையதா, கிறித்துவ சமயத்தவருடை யதா? உங்களில் யாராவது சொல்லுங்கள்'' என்று கேட்டார் பெரியவர்..

''யாருடைய பருத்தி நல்ல தரம் உடையதாக உள்ளதோ அது அதிக விலைக்குப் போகும். சந்தையில் யார் நிலத்தில் விளைந்தது என்று பார்த்து யாரும் வாங்குவதில்லை'' என்று பதில் தந்தார் ஒருவர்.

''நல்லது'' என்ற பெரியவர், ''அதே போலத்தான் கடவுளும். நீங்கள் எந்த மதத்தை வேண்டுமானாலும் பின்பற்றுங்கள். யார் நல்ல வாழ்க்கை வாழ்ந்துள்ளனரோ அவரே கடவுளுக்கு மிகவும் வேண்டியவர். அவரைப் பொறுத்தவரையில் எல்லாச் சமயமும் ஒன்றுதான். எப்படிப் பருத்தி வாங்குபவன் எந்த நிலத்தில் விளைந்தது என்று பார்ப்பதில்லையோ, அது போல. இனிமேலாவது சமயத்தின் பெயரால் சண்டை போடாதீர்கள் என்றார்.

நல்லறிவு பெற்ற கூட்டத்தினர் பெரியவரை வணங்கி விட்டு ஒற்றுமையுடன் சந்தைக்குப் புறப்பட்டார்கள்.

உயிருக்கும் மேலான ஜாடி!

ஒரு நாட்டை ஆண்டு வந்த அரசனுக்கு வேலைப்பாடமைந்த பழங்கால ஜாடிகளைச் சேர்த்து வைப்பதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. அவன் மிகவும் முயன்று முப்பதுக்கும் மேற்பட்ட ஜாடிகளைச் சேர்த்து வைத்தான்.

அவற்றைப் பாதுகாப்பான ஓர் அறையில் வைத்து, வேலைக்காரனை அழைத்து, அவற்றின் மீது படிந்திருந்த தூசுகளைக் கவனமாகத் துடைத்துவிடும்படி ஆணையிட்டான்.

ஆனால் அந்த வேலையாளோ கவனக் குறைவால் ஒரு ஜாடியை உடைத்து விட்டான்.

அதனால் உண்டான கோபத்தை அரசனால் அடக்க முடியவில்லை. விலைமதிப்பற்ற ஜாடியை உடைத்ததற்காக வேலைக்காரனுக்கு மரண தண்டனை விதித்தான் அரசன்.

அந்த ஊருக்கு வந்த துறவி ஒருவருக்கு 'ஜாடியை உடைத்ததால் வேலையாள் ஒருவன் உயிர் இழக்கப் போகிறான்' என்ற செய்தி தெரிந்தது.

அரசனிடம் சென்ற அவர், "எத்தனை துண்டுகளாக உடைந்து போன ஜாடியாக இருந்தாலும் அவற்றை ஒட்டி உடையாத ஜாடி போல ஆக்க என்னால் முடியும். யாருமே அந்த ஜாடியை ஒட்டப்பட்ட ஜாடி என்று சொல்ல மாட்டார்கள்" என்றார்.

அரசனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. துறவியை ஜாடிகள் இருந்த அறைக்கு அழைத்துச் சென்றார்.

உள்ளே நுழைந்ததுதான் தாமதம். துறவி வெறி பிடித்தவர்போல அங்கிருந்த அனைத்து ஜாடிகளையும் சுக்கல் சுக்கலாக உடைத்தெறிந்தார்.




அவர் செயலைக் கண்டு ஆத்திரப்பட்ட அரசன், "துறவியாரே! என்ன காரியம் செய்தீர்? இந்தச் செயலுக்குக் கிடைக்கும் தண்டனை என்னவென்று உமக்குத் தெரியுமா? மரண தண்டனைதான்" என்று கத்தினான்.

துறவி அமைதியாக, "முப்பது ஜாடிகளையும் உடைத்ததற்காக என் ஒரே உயிர்தான் போகப் போகிறது. இல்லாவிட்டால் இந்த ஜாடிகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் உயிரை அல்லவா குடித்திருக்கும்?" என்றார்.

அவர் சொல்லியதைக் கேட்டுச் சிந்தனையில் ஆழ்ந்த அரசன் தன் தவற்றை உணர்ந்தான். துறவியாரை வணங்கினான். வேலைக்காரனுக்கு அளிக்கப்பட்ட தண்டனையை நீக்கினான். அவனை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொண்டான்.

அரிய செயல்



அரசர் உமர் மாறுவேடத்தில் தம் நாட்டைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது ஓர் அடிமைச் சிறுவன் ஏராளமான ஆடுகளை மலைப் பகுதியில் மேய்த்துவிட்டு மாலை நேரத்தில் ஊர் திரும்பிக் கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்த உமர், ''எனக்கு ஓர் ஆடு தேவையாய் உள்ளது. விலைக்குக் கொடு'' என்று கேட்டார்.

அந்தச் சிறுவன், அவரிடம் ''ஐயா! இவை எனக்கு உரிமையான ஆடுகள் அல்ல. நான் இவற்றை மேய்ப்பவன். உங்களுக்கு ஆடு வேண்டுமானால் என்னுடன் ஊருக்கு வந்து என் முதலாளியிடம் வாங்கிச் செல்லுங்கள்'' என்றான்.

''ஓர் ஆடுதானே கேட்கிறேன். இந்த நூற்றுக்கணக்கான ஆடுகளில் ஓர் ஆடு குறைவதை உன் முதலாளியால் கண்டுபிடிக்க முடியாது. அப்படியே கண்டுபிடித்தாலும் ஓநாய் அடித்துவிட்டது. அல்லது காணாமல் போய்விட்டது என்று ஏதோ ஒரு காரணம் சொல்லி நீ தப்பித்துக் கொள்ளலாம்'' என்றார் உமர்.

''நீங்கள் சொல்வது சரிதான். இந்தக் குற்றத்தை என் முதலாளியால் கண்டுபிடிக்க முடியாமல் போகலாம். எல்லாம்வல்ல இறைவனிடமிருந்து என்னால் எப்படி இதை மறைக்க முடியும்?'' என்றான் அந்த அடிமைச் சிறுவன்.

இதைக் கேட்ட உமர் அந்தச் சிறுவனுடன் சென்று அவன் முதலாளியைக் கண்டார்.

ஒரு பெருந்தொகையைச் சொல்லி அதைப் பெற்றுக் கொண்ட முதலாளி, ''முன்பின் அறிமுகம் இல்லாத ஒரு சிறுவனின் விடுதலைக்காக இவ்வளவு பணம் தந்திருக்கிறீர்களே! அது ஏன்?'' என்று வியப்புடன் கேட்டார்.

அதற்கு உமர், சிறுவனின் நேர்மைச் செயலைப் பற்றிச் சொல்லி, ''வாழ்க்கையிலே மிக அரிய செயல் நேர்மையான ஒரு மனிதனைக் காண்பதுதான். அதற்காக எவ்வளவு பொருள் வேண்டுமானாலும் இழக்கலாம்'' என்று சொன்னார்.

உமர், விடுதலை பெற்ற அந்தச் சிறுவனைத் தன்னுடன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று உயர்வளித்தார்.

— பேராசிரியர் எ. சோதி தொகுத்த 'நன்னெறிக் கதைகள்' என்ற புத்தகத்திலிருந்து வெளியிட்டோர்: நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி — 1.

கவிதை பிறந்த கதை:

இந்தியர் இந்தியரே!



— பூவண்ணன்

முதலில் ஒரு குட்டிக் கதையைப் படிப்போம்.

பிறகு கவிதையைப் பார்ப்போம்.

ஆம். இந்தக் கதைக்குள், ஒரு கவிதை ஒளிந்து கொண்டிருக்கிறது. அழகான கவிதை. நீங்கள் உங்கள் பாடப் புத்தகத்திலும் அதைப் படித்திருக்கலாம். அந்தப் பாட்டை எழுதியவர் கவிஞர் பூவண்ணன் அவர்கள். அவரே அந்தக் கதையைக் கூறுகிறார்:

“சிறந்த நூல்களைச் சுருக்கித் தரும் ஆங்கிலப் பத்திரிகைகள் மேல் நாட்டில் பல உண்டு. அத்தகைய அமைப்பில் இந்தியாவிலிருந்து வெளிவந்த முதல் பத்திரிகை ‘இம்ப்ரிண்ட்’ (Imprint).

“இதன் முதல் இதழ் வெளிவந்தது. அதிலே முதலாவதாக இடம் பெற்றிருந்தது, ‘The African’ என்னும் நாவல். இதழ் கிடைத்த முதல் நாளே ‘ஆப்ரிகன்’ நாவலைப் படித்து முடித்தேன். அற்புதமான நாவல். ஏழ்மையிலும் இன்னலிலும் தவிக்கும் ஆப்பிரிக்கக் குடும்பம், வைரச் சுரங்கத்தில் வேலை பார்க்கிறது. குடும்பத்தினர் தம் மகனை மிகவும் சிரமப்பட்டுப் படிக்க வைக்கின்றனர். மேற்படிப்புக்காக அவனை லண்டனுக்கு அனுப்பும் போது அவனுடைய தாய் அவனிடம், பட்டை தீட்டாத ஒரு வைரக் கல்லைக் கொடுக்கிறார்.

“இதை எப்போதும் உன்னிடமே வைத்துக் கொள். இது, ‘நீ ஒரு ஆப்பிரிக்கன்; ஆப்பிரிக்காவே உன் வீடு’ என்பதை நினைவுறுத்தும். நீ படிக்கச் செல்வது, உன்னை உயர்த்திக் கொள்வதற்காக அல்ல, உன் நாட்டையும், உன் இனத்தையும் உயர்த்துவதற்காக” என்று கூறுகிறார்.

“அந்தக் கணம் முதல் அவனிடமே அந்த வைரம் இருந்தது. படித்துப் பட்டம் பெற்ற பின்பும், பணத்துக்கும் பதவிக்கும் ஆசைப்படாமல் இனத்துக்காக உழைக்கத் தாயகம் திரும்புகிறான். அங்கே ஆப்பிரிக்கர்களை



ஒன்று திரட்டி, ஒரு சங்கம் அமைக்கிறான். ஆப்பிரிக்கர்களுக்குள்ளே ஏராளமான பிரிவுகள், ஒவ்வொரு பிரிவும் நம் நாட்டுச் சாதிப் பிரிவைப் போலப் பிரிந்து நிற்கின்றது. வேற்றுமைகள் மிகுதியான மக்களிடம் ஒற்றுமையை எப்படி உண்டாக்குவது என்று யோசிக்கிறான்.

"அதே நேரத்தில், அவன் ஏற்படுத்திய சங்கத்துக்கு ஓர் இலச்சினையும், அதை விளக்கும் வாசகமும் உருவாக்க வேண்டிய பொறுப்பு அவனைச் சாருகிறது. பிரிந்து கிடக்கும் ஆப்பிரிக்க மக்கள் குழுக்களைப் பிணைந்து நிற்குமாறு செய்யும் இலச்சினை எது என்று யோசிக்கிறான். அப்போதும் அவனிடம் அன்னை தந்த வைரக்கல் இருக்கிறது. அது அவன் கையில் தட்டுப்படுகிறது. உடனே அவன் முகம் பிரகாசமடைகிறது. பட்டை தீட்டிய வைரத்தை இலச்சினையாகத் தேர்ந்தெடுக்கிறான். அந்த வைரத்தின் கீழே — "Many faces; but one object!" என்னும் வாசகத்தைப் பொறிக்கிறான். அதாவது, 'உருவங்கள் பல, ஆனால் இலட்சியம் ஒன்றே' என்பது அதற்கு அர்த்தம்.

"ஆப்பிரிக்க மக்களுக்கு நன்கு தெரிந்த பொருள் வைரம். அதனால் அது பிரபலமடைகிறது. 'பட்டைகள் பல இருந்தாலும், வைரம் ஒரே ஒரு பொருள்தான்' என்னும் உண்மை ஆப்பிரிக்கர்களுக்குத் தெளிவாகத் தெரிந்த ஒன்று. அதன் அடிப்படையில், பிரிந்து நிற்கும் குழுக்கள் ஒன்றுபட்டு அவன் தலைமையில் போராடி உயர்வு பெறுகிறது."

இதுதான் கதை. இந்த அழகிய கதை, கவிஞர் மனத்தில் ஆழப் பதிகிறது. கதையில் வரும் அந்த நிகழ்ச்சிகள் அப்படியே கண்முன் தெரிகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, Many faces, but one object என்னும் அந்த வாசகம், கவிஞர் மனத்தில் நிலைக்கிறது; அதை வைர வரி என்றும் கவிஞர் வர்ணிக்கிறார். அந்த வைர வரிகளே, நாளடைவில், கவிதை வரிகளாக வடிவம் பெறுகின்றன.

"இந்த வைர மொழியே என் நினைவில் நிறைந்திருந்தது. ஒற்றுமையைக் காட்ட உகந்த பொருள் வைரம். இந்தியாவும், ஆப்பிரிக்காவைப் போலப் பிரிந்து நிற்கும் மக்களைக் கொண்டது. சாதியால் — மதத்தால் — மொழியால் பிரிந்து நின்றாலும், அவர்கள் 'இந்தியர்' என்னும் முறையில் இணைந்து நிற்க வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும். இதை விளக்க வைரத்தைக் கொண்டே ஒரு பாடல் எழுதத் தீர்மானித்தேன்" என்று கூறும் கவிஞர்,

"எத்தனைப் பட்டைகள் வயிரத்தில்
எனினும் வயிரம் ஒரு பொருளே"

என்று பாட்டைத் தொடங்குகிறார். அந்த முழுப் பாடலும் இதுதான்:



"எத்தனைப் பட்டைகள் வயிரத்தில்
எனினும் வயிரம் ஒரு பொருளே!
எத்தனைச் சாதிகள் இந் நாட்டில்
எனினும் இந்தியர் இந்தியரே!

எத்தனை ஆறுகள் கடல் வயிற்றில்
எனினும் பெருங்கடல் ஒரு கடலே!
எத்தனை மதங்கள் இந் நாட்டில்
எனினும் இந்தியர் இந்தியரே!


எத்தனை விழுதுகள் ஆலினிலே
எனினும் ஆலம் ஒரு மரமே!
எத்தனை மொழிகள் இந் நாட்டில்
எனினும் இந்தியர் இந்தியரே!


"இந்தப் பாடலுக்கு 'இந்தியரே!' என்று தலைப்புக் கொடுத்தேன். இது முதலில் 'மத்தாப்பு' இதழில் வெளி வந்தது. பிறகு எனது 'பாட்டுத் தோட்டம்' நூலில் இடம் பெற்றது. பாட நூலிலும் சேர்க்கப்பட்டது. என்னுடைய பாடல்களில் இதுவே சிறந்தது என்று பலரும் கூறுகின்றனர். அது மட்டுமல்ல, எனக்குப் பிடித்த பாடலும் இதுவே!" என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் கவிஞர்.

பேட்டி: பி. வி. கிரி.

ஆபத்தில் உதவிய நண்பன்.....

படக்கதை : ஓவியர்:- எஸ்.கே.ராமானுஜம் (ராநு÷)






அக்குஞ்சு தனக்கும், தன் தாய்க்கும் எப்பொழுதும் பக்கத்துக்காட்டினால் இரவு நேரங்களில் ஆபத்து ஏற்படும் என்பதை அறிந்து கொண்டது...
இதிலிருந்து என் தாயையும், என்னையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்
நன்றியுள்ள ஒரு நல்ல நாயினிடம் அக்கோழிக்குஞ்சு சென்றது...
எங்கள் எஜமானர் எங்களை வெறுக்கிறார்....
கோழிக்கும், அதன் குஞ்சுக்கும் ஏற்பட்டுள்ள கஷ்டங்களை அந்த நல்ல நாய் புரிந்து கொண்டது.
இனி நான், உங்களுடைய நண்பன்.. இரவும், பகலும் உங்களுடன் சேர்ந்திருக்கிறேன்
கோழிக்குஞ்சு நாயை நண்பனாக்கிக்கொண்டதிலிருந்து அதற்கும், அதன் தாய்க்கும் நல்ல பாதுகாப்பு ஏற்பட்டுவிட்டது.
உங்கள் இருவரையும் நான் உங்களுடைய எஜமானரிடம் சேர்த்து வைக்கிறேன், பார்..
உடனே நாய், கோழியையும், அதன் குஞ்சுவையும் முத்தன் வீட்டிற்குள் துரத்திக்கொண்டு சென்றது......
அப்பொழுது தான் முத்தனுக்குப் புத்தி வந்தது. அன்றுமுதல் கோழியையும் அதன் குஞ்சுவையும் மிகவும் ஜாக்கிரதையாகத் தன் வீட்டிற்குள் நல்ல ஆகாரங்களைக் கொடுத்து வளர்த்து வந்தான்.
நீங்கள் இருவரும் இனி வீட்டுக்குள்ளே தான் வாழ வேண்டும். இல்லாவிட்டால் உங்களை நாய் கடித்து விடும்
கோழியும், அதன் குஞ்சுவும் நாயின் உதவியால் எஜமானருடன் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தன.

பிருந்தாவனக் கவியரங்கம்

பேருந்து



பெயர் பொறித்து நின்றிடும்.
பெரிய சப்தம் செய்திடும்!
பெரிய மனிதர் போலவே,
பெருமை காட்டிப் போயிடும்!

வண்ண வண்ண நிறத்திலே,
விளக்கு நிறைய எரிந்திடும்!
உன்னை என்னை ஏற்றியே,
ஊரைச் சுற்றி வந்திடும்!

பாட்டு ஒலியும் கேட்டிடும்.
படமும் போட்டுக் காட்டிடும்!
பசிக்கு எண்ணெய் ஊற்றியே,
புகையைக் கக்கி ஓடிடும்!

குறுக்கு வழியில் சென்றிடும்,
குறும்புத் தனமும் செய்திடும்!
களைப்பு இன்றி வேகமாய்,
காற்றை ஒதுக்கித் தள்ளிடும்!

சறுக்கி சுருக்காய் ஓடியே,
சீமை கொண்டு சேர்த்திடும்!
சலுகைச் சீட்டும் கொடுத்திடும்,
சாயும் இருக்கை போட்டிடும்!

பழைய பலகை மாற்றியே,
புதிய தொன்றைப் போர்த்திடும்!
போட்டி போட்டு முந்தியே,
போகும் நல்ல பேருந்தாம்!

— மு.க. கலிபத்துல்லார், உளுந்தூர்
பேட்டை.

பாதையில் கவனம்

பாதை விதியை மீறாமல்
பக்கம் பார்த்துக் கடந்திடுவீர்!
வேண்டாம் கதைகள் வீதியிலே; — அது
கொண்டு சேர்க்கும் மருத்துவமனையிலே!

பாடத்தில் கவனம் உள்ளது போல்
பாதையில் கவனம் அவசியமே!
சாலையோரம் நீ நடந்தால் — அது
வேலியன்றோ உன் வாழ்வுக்கு!

வேதனை தரும் உடல் ஊனமதை
வலுவில் சென்று அடையாதீர்!
சாதனை பலவும் புரிந்திடவே — நீவிர்
நீடூழி வாழ வேண்டுமன்றோ?


— ஜி. மீனாக்ஷி காஞ்சிபுரம் — 2.



சிட்டுக்குருவி

சிட்டுக் குருவி சிட்டுக்குருவி
செய்தி சொல்லடி — நீ
சிறகடிக்கப் பறக்கிற
வித்தையைச் சொல்லடி

பச்சை மரத்தில் பறந்துலாவும்
மகிழ்ச்சி என்னடி? — உன்



பசுமையான குரலில் பாடித்
திரிவ தேனடி?

குறுகுறுன்னு நீ பார்க்கிற
பார்வை புரியலே — நீ
குறும்பாகப் பாடி யாடும்
மொழியும் புரியலே

கூடுகளில் கூடி வாழும்
குருவிங்க நீங்க — உன்னைக்
குறையொன்றும் சொல்ல
எனக்கு வார்த்தை தெரியலே!

— இரகு. வீனா மணிமேகலை (23,040)

மரம் வளர்ப்போம்



உலகம் அழியும் இப்பொழுது
உலகம் அழியும் இப்பொழுது

வாழ வைக்கும் மரத்தையே
பாழும் மனிதன் அழித்திட்டால்
உலகம் அழியும் இப்பொழுது
உலகம் அழியும் இப்பொழுது

மண் அரிப்பைத் தடுத்திடவே
கண் போன்ற மரத்தையே
பாழும் மனிதன் அழித்திட்டால்
நாளும் நாமும் அழிவோமே

காற்றைக் காக்கும் மரத்தையே
ஆற்றை வளர்க்கும் மரத்தையே
நீளும் மரத்தை அறுத்துவிட்டால்
பாழும் மனிதன் அழிந்திடுவான்

கோவையில் ஆலை கண்டிட்டால்,
கோடையில் மரங்கள் வளர்ந்திடுமா?
அரசு திட்டம் தீட்டிட்டால்
அரச மரமும் வளர்ந்திடுமா?

பறவைகள் வாழும் கூட்டையும்
கறவை மாட்டுத் தீவனத்தையும்
பாரில் வழங்கிடும் மரத்தையே
பாழும் மனிதன் அழித்திட்டால்
பாலும் நமக்கு கிடைத்திடுமா?

இயற்கை மரங்கள் தந்திடும் காற்றை
செயற்கை காற்றாடி தந்திடுமா?
மரங்களில் வகையும் பல உண்டு
மரங்களின் பயனும் பல உண்டு

நிலத்தடி நீரைத் தந்திடுமே
நிலமும் செழிப்பாய் இருந்திடுமே
வீரிய விதைகளை பெருக்கிடலாம்
விரும்பிய காலத்தில் விதைத்திடலாம்

பள்ளிச் சிறுவர் பலர் சேர்ந்து
பாங்காய் மரங்கள் வளர்த்திட்டால்
பாரத நாடும் உயர்ந்திடுமே
பாரினில் பசியும் தீர்ந்திடுமே.

— ஆர். சுரேஷ் குமார் (10,813),
சேலம் — 7.

விண்மீன்கள்

கோடி கோடி விண்மீன்கள்
கொட்டிக் கிடக்குது விண்ணிலே!
தேடித் தேடிப் பார்த்தாலும்
சிலவே தெரியுது கண்ணிலே!

பகலில் காணும் விண்மீன்கள்
பருதி மட்டுமே உணர்ந்திடும்!
பகலவன் தன் சுடரொளியால்
பகலில் மற்றவை மறைந்திடும்!

விண்ணில் மற்ற விண்மீன்கள்
வீசும் வெப்பமும் ஒளியுமே!
மண்ணில் உணரா திருப்பதற்கு
மிக்க தூரமே காரணம்!

எண்ணில் அடங்கா விண்மீன்கள்
இன்றும் உலகில் கண்டிட
விண்ணில் ஆய்வு பல நடத்த
வியப்புச் செய்திகள் வந்திடுமே!

— கோ. முருகேசன் (11,021), நம்பியப்
பட்டி (அரூர்).



டாக்டர் பக்கம்



வியர்க்குருவைத் தவிர்க்கலாமே!

டாக்டர் கு. கணேசன்

இவன்தான் ஆனந்த். எங்கள் ஊர் சின்மயா வித்யாலயாவில் ஆறாம் வகுப்பில் படிக்கிறான். படிப்பில் கெட்டிக்காரன். சரளமாக ஆங்கிலம் பேசுவான். பொது அறிவு 'வினாடி—வினா' நிகழ்ச்சிகளில் பல பரிசுகளைப்பெற்றிருக்கிறான். அன்பாகப் பேசுவான். பண்போடு பழகுவான். அதனால் ஆனந்தை அனைவருக்கும் பிடிக்கும்.

ஓய்வு நேரங்களில் ஆனந்த் என் வீட்டிற்கு வருவான். மருத்துவத்தைப் பற்றிப் பல சந்தேகங்களைக் கேட்பான். ''மாமா, நானும் டாக்டருக்குத்தான் படிப்பேன்,'' என்று அடிக்கடி சொல்வான். அவனுடைய ஆசையை நான் பாராட்டுவதோடு மட்டுடல்லாமல் அவ்வப்போது மருத்துவ விஷயங்களைப் பற்றிச் சொல்லி அவனுக்கு ஊக்கமும் தருவேன்.

ஆனந்த் வீட்டிற்கு வந்தால் விஷயத்தோடுதான் வருவான். இன்று எதற்கு வந்திருக்கிறான்? கேட்கலாமா?

நான்: என்ன ஆனந்த், சாவகாசமாக வந்திருக்கிறாய்? முழு ஆண்டுத் தேர்வுகளெல்லாம் முடிந்து விட்டதா? தேர்வுகளை எப்படி எழுதியிருக்கிறாய்?

ஆனந்த்: தேர்வுகளை நன்றாக எழுதியிருக்கிறேன், மாமா! போன வாரமே எல்லாத் தேர்வுகளும் முடிந்து விட்டன. விடுமுறை கூட ஆரம்பமாகி விட்டது.

நான்: அப்படியா, மகிழ்ச்சி ஆனந்த்! இந்தக் கோடை விடுமுறையில் எங்கே செல்லப் போகிறாய்?

ஆனந்த்: கொடைக்கானலுக்குச் செல்லலாம் என இருக்கிறேன், மாமா. அங்கு என் அத்தை வீடு இருக்கிறது. போன வாரமே அங்கு வரச் சொல்லி அத்தை கடிதம் எழுதியிருந்தார்கள். நான்தான் அடுத்த வாரம் செல்லலாம் என்று இருக்கிறேன்.

நான்: ஏன் ஆனந்த், பயணத்தை

எதற்காகத் தள்ளிப் போட்டாய்?

ஆனந்த்: மாமா, என் உடம்பு முழுவதும் 'வியர்க்குரு' வந்துள்ளது. அதை என் அத்தை பெண் பார்த்து விட்டால் போதும், என்னைக் கேலியும் கிண்டலும் செய்துவிடுவாள். அதனால் இந்த வியர்க்குருவிற்கு உங்களிடம் நிவாரணம் பெற்றுக் கொண்டு, அதன் பின்னரே கொடைக் கானலுக்குச் செல்ல வேண்டும் என்று எண்ணுகிறேன். அதனால்தான் உங்களைச் சந்திக்க இன்று இங்கு வந்திருக்கிறேன், மாமா!

நான்: அப்படியா விஷயம்! பொதுவாகக் கோடைக் காலம் வந்துவிட்டாலே உன்னை மாதிரி சிறுவர் சிறுமியருக்கு 'வியர்க்குரு' தொந்தரவு வருவது இயற்கை! ஆனந்த், நீ சொன்ன மாதிரி அது 'வேர்க்குரு' அல்ல; வியர்க்குரு என்று அழைப்பதே சரி. வியர்க்குரு என்பது ஒரு வியாதி அல்ல; அது ஒரு சாதாரணத் தொந்தரவு மட்டுமே!

ஆனந்த்: வியர்க்குரு எதனால் வருகிறது, மாமா? அதனால் உடம்பு முழுவதும் அரிப்பும், எரிச்சலும் உண்டாகிறதே, ஏன்?

நான்: ஆனந்த், நம் தோலில் தோன்றும் மிகச் சிறிய கொப்புளங்களைத் தான் 'வியர்க்குரு' என்று சொல்லுகிறோம். இதனை ஆங்கிலத்தில் 'பிரிக்லி — ஹீட்' (**Prickly-Heat**) என்று சொல்வார்கள். எங்கள் மருத்துவத் துறையில் 'மிலியாரியா ரூப்ரா' (**Miliaria Rubra**) என்று அதற்குத் தனிப் பெயரே உண்டு. வியர்க்குரு எதனால் உண்டாகிறது என்பதை உனக்குச் சொல்கிறேன், கேள். நம் தோலுக்கு அடியில் உள்ள வியர்வைச் சுரப்பிகளில் அழுக்குச் சேர்வதனால் அவை அடைத்துக் கொள்ளும்போது தோலின் மேற்பரப்பில் எண்ணற்ற சிறு சிறு கொப்புளங்கள் தோன்றும். அவற்றில் நீர் கட்டிக் கொள்ளும். இதனால் அரிப்பும் எரிச்சலும் உண்டாகும்.

ஆனந்த்: ஏன் மாமா, வியர்க்குரு கோடைக் காலத்தில் மட்டும் அதிகமாக வருகிறதே... அதற்கு ஏதேனும் தனிக் காரணம் உண்டா?

நான்: உண்டு, ஆனந்த்! கோடைக்



காலத்தில்தானே நம் உடம்பில் அதிக அளவு வியர்வை சுரக்கிறது? அப்போதுதானே தோலில் அழுக்கும் அதிகமாகச் சேர்கிறது. ஆக, கோடைக்காலத்தில் இந்த வியர்வையும் அழுக்கும் முழுமையாக வெளியேற்றப்படுவதில்லை. அதனால்தான் வியர்க்குரு கோடைக்காலத்தில் அதிகமாக வருகிறது.

ஆனந்த்: சரி மாமா! வியர்க்குரு உடம்பு முழுவதும் வருமா? எனக்கு இப்போது முதுகிலும் மார்பிலும் வியர்க்குரு இருக்கிறது. இது மற்ற இடங்களுக்கும் பரவி விடுமோ என்று பயமாக இருக்கிறது...

நான்: ஆனந்த்! வியர்க்குரு பரவுவதில்லை. நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி நம் உடம்பில் எங்கெங்கு வியர்வை அடைத்துக் கொள்கிறதோ அங்குதான் வியர்க்குரு தோன்றும். இது பொதுவாகக் கழுத்து, மார்பு, முதுகு, அக்குள், இடுப்புப் பகுதி ஆகிய இடங்களில்தான் அதிகமாகக் காணப்படும்., அதற்குக் காரணம் அந்த இடங்களில்தான் அதிகமாக வியர்வை சுரக்கிறது. அழுக்கும் சேர்கிறது.

ஆனந்த்; ஏன் மாமா, வியர்க்குருவும் சிரங்கும் ஒன்றா? முன்பு ஒரு முறை எனக்குச் சிரங்கு வந்திருந்ததே! அப்போதும் இந்த மாதிரி கொப்புளங்கள்தானே வந்திருந்தன?

நான்: இல்லை ஆனந்த்! வியர்க்குரு என்பது வேறு; சிரங்கு என்பது வேறு. இரண்டிலும் கொப்புளங்கள்



வரும். ஆனால் சிரங்கில் கொப்புளங்கள் பெரிதாக இருக்கும். சீழ் பிடிக்கும். இரவில் அதிகமாக அரிப்பெடுக்கும். சிரங்கு, விரல் இடுக்குகளிலும், மணிக்கட்டு, முழங்கை, தொப்புள், பிறப்பு உறுப்புப் பகுதி போன்ற இடங்களிலும் வரும். ஆனால் வியர்க்குருவில் சீழ் பிடிப்பதில்லை. இதில் பகல் நேரத்தில்தான் அரிப்பு அதிகமாக இருக்கும். வியர்க்குரு கொப்புளங்கள் அளவில் சிறியதாகவும் எண்ணிக்கையில் அதிகமாகவும் இருக்கும்.

ஆனந்த்: நன்றி, மாமா! இதுவரை வியர்க்குருவும் சிரங்கும் ஒன்றுதான் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அது தவறு என்பதை இன்று புரிந்து கொண்டேன். சரி மாமா! வியர்க்குரு வந்துவிட்டால் என்ன செய்ய வேண்டும்? அதைப் போக்க என்ன வழி? அதையும் எனக்குச் சொல்லுங்கள்.

நான்: சொல்கிறேன், ஆனந்த்! கவனமாகக் கேள். வியர்க்குருவைப் போக்க வேண்டுமென்றால் உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். அதற்குத் தினமும் காலை, மதியம், இரவு ஆகிய மூன்று வேளைகளிலும் குளிக்க வேண்டும். உடம்பில் அழுக்கு நீங்குமாறு சோப்புப் போட்டு குளிக்க வேண்டியது அவசியம். குளித்து முடித்ததும் உடம்பில் ஈரம் இல்லாதவாறு நன்றாகத் துடைக்க வேண்டும். பின்பு டால்கம் பவுடரை உடம்பு முழுவதும் தூவ வேண்டும். வியர்க்குருவில் அதிகமாக அரிப்பு இருந்தால் டால்கம் பவுடருக்குப் பதிலாக 'காலமின் லோஷனை' **(Calamine Lotion)** வியர்க்குருவில் தடவலாம். அடுத்தபடியாக உடம்பில் அணியும் ஆடைகள் இறுக்கமாக இருக்கக் கூடாது. தோலின் மேற் காற்று உட்புகுமாறு உடைகள் தளர்வாக இருக்க வேண்டும். கோடைக் காலங்களில் டெர்லின், பாலியெஸ்டர் போன்ற துணிகளை அணியக் கூடாது. அதற்குப் பதிலாக, பருத்தித் துணிகளையும் கதர் ஆடைகளையும் அணிய வேண்டும். உன்னை மாதிரி சிறுவர்கள் விடுமுறை தினங்களில் வெயிலையும் பாராமல் எந்நேரமும் விளையாடிக் கொண்டிருப்பார்கள். அம்மாதிரிச் சிறுவர்களுக்கு வியர்க்குரு வருவதற்கான சாத்தியம் அதிகம். அதனைத் தவிர்க்க விளையாடும் போது அவ்வப்போது மர நிழல்களில் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும். உடம்பில் உண்டாகும் வியர்வையை அடிக்கடி துடைத்துவிட வேண்டும். இம்மாதிரியான தவிர்ப்பு முறைகளால் வியர்க்குரு தொந்தரவுகளிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். இதெல்லாம் தவிர, வியர்க்குரு வந்தவர்கள் வெயில் உள்ள இடங்களைத் தவிர்த்துக் குளிர்ச்சியான கோடை வாசஸ்தலங்களுக்குச் சென்று வந்தால் வியர்க்குரு தன்னால் மறைந்து விடும்.

ஆனந்த்: அப்படியென்றால் நான் கொடைக்கானலுக்குச் சென்றதும் எனக்கு வியர்க்குரு நீங்கிவிடும் என்று சொல்கிறீர்களா, மாமா?

நான்: ஆமாம், ஆனந்த்! இருந்தாலும் மீண்டும் உனக்கு வியர்க்குரு வராமல் இருக்க, நான் சொன்ன தடுப்பு முறைகளைக் கையாள வேண்டியது அவசியம்.

ஆனந்த்: நன்றி, மாமா! நீங்கள் சொன்ன அத்தனை வழிமுறைகளையும் கடைப்பிடித்து வியர்க்குருவை விரட்டி விடுகிறேன். மீண்டும் நன்றி, மாமா!

நான்: சரி ஆனந்த். உன் பயணம் நன்கு அமைய வாழ்த்துக்கள்!



தணிகை உலகநாதன்

சோழ நாட்டில் ஆலந்துறை என்னும் ஊர் ஒன்று உண்டு. அவ்வூரில் இளஞ்சூரியர், முதுசூரியர் என்று இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். இளஞ்சூரியர் குருடர்; முதுசூரியர் முடவர். இருவரும் நெருங்கிப் பழகி வந்தனர். இருவரும் ஊனமுற்றவர்களாய் இருந்தாலும் அறிவால் 'ஞான சூரியர்கள்' என்று பலராலும் பாராட்டப்பட்டார்கள்.

எங்கே போனாலும் இருவரும் சேர்ந்தே செல்வார்கள். முடவர் குருடர் தோளில் ஏறி வழிகாட்டுவார். குருடர் காலால் முடவர் நடந்தார். முடவர் கண்ணால் குருடர் பார்த்தார். இருவரும் அவ்வளவு ஒற்றுமையாய் இருந்தார்கள். முடவர் படிப்பதைக்குருடர்கேட்டறிந்துகல்வி ஞானம் பெற்றார். இவ்வாறு இருவரும் கல்வியில் மட்டுமல்லாமல் கவிதை பாடுவதிலும் வல்லவராய் இருந்தார்கள். ஒருவர் பாதிப் பாட்டைப் பாடுவார். மற்றவர் மீதிப் பாட்டைப் பாடி முடிப்பார். அதனால் எல்லாரும் அவர்களை 'இரட்டைப் புலவர்' என்று அழைத்தார்கள்.

இரட்டைப் புலவர்கள் பல ஊர்களுக்கும் சென்று கோயில் தெய்வங்களை வழிபடுவார்கள்; தமிழ்ச் செல்வர்களைப்பாடிப்பரிசுகள்பெறுவார்கள்.

ஒருநாள் ஆங்கூர் என்னும் ஊருக்குப் போனார்கள். அங்கு, பசியால் வாடி, ஏதாவது கிடைக்குமோ என்று சிவன் கோயிலுக்குச் சென்றார்கள். கோயிலில் பூசை முடிந்ததும் உணவு கிடைக்குமென்று எதிர்பார்த்தார்கள். ஆனால், ஒன்றும் கிடைக்க

வில்லை. ஏமாற்றமடைந்த புலவருள் ஒருவர், "புகழ்பெற்ற ஆங்கூர்க் கோயிலில் உள்ள சிவபெருமானே, நஞ்சு உண்ட நீலகண்டப் பெருமானே! உன் அடியார்களாகிய நாங்கள் பசியோடு இருப்பது முறையோ?" என்னும் கருத்தை அமைத்து அரைப்பாட்டைப் பாடினார்.


மற்றவர் சிவபெருமானே அந்தக் கேள்விக்குப் பதில் கூறுவது போல அரைப் பாட்டைப் பாடி முடித்தார். அப்பாட்டின் அடிகளில், "புலவர்களே! நான் மட்டும் என்ன! நானும் சங்கு, மேளம், முரசம் இவற்றின் ஓசையைக் கேட்டேனே தவிர, சோற்றைக் காணவில்லை. நானும் பட்டினியாகத்தான் இருக்கிறேன். உங்களுக்கு எப்படிச் சோறு அளிப்பேன், சொல்லுங்கள்?" என்னும் கருத்தை அமைத்திருந்தார்.

தேங்குபுகழ் ஆங்கூர்ச் சிவனே
அல்லாளி அப்பா
நாங்கள் பசித்திருக்க நியாயமோ?
— போங்காணும்.
கூறுசங்கு டோல்முரசு கொட்
டோசை அல்லாமல்
சோறுகண்ட மூளியார்? சொல்.

இப்பாடலைக் கேட்ட கோயில் அதிகாரிகள் தெய்வப் புலவர்களின் வாயில் பொய் வருவதில்லை. இதில் ஏதோ உண்மை இருக்க வேண்டுமென்று ஆராயத் தொடங்கினார்கள். பணியாளர்கள் தெய்வத் திருவமுதுக்குத் தரும் அரிசியைச் சமைக்காமல் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டு, சூடான செங்கல்லின் மேல் ஈரத் துணியைப் போட்டுக் கொண்டு வருவார்கள். அதில் ஆவி பறப்பதைக் கண்டு அனைவரும் சுவாமிக்குச் சுடச் சுட நைவேத்தியம் கிடைப்பதாக நினைத்துக் கொள்வார்கள். திரை மறைவில் வழிபாடு நடப்பதால் இதை யாரும் கண்டு கொள்ள முடியவில்லை. இரட்டைப்புலவர்கள் பாடிய பின்னர் குட்டு வெளிப்பட்டது. குற்றம் செய்த கோயில் பூனைகள் கோயிலிலிருந்து விலக்கப்பட்டார்கள்.

சித்திரப் புதிர்!


ஆழி




1 இது எந்த நாட்டு விமானப் போக்குவரத்தின் சின்னம்?




2 இது எந்த நாட்டின் தபால் தலை?



3 இது என்ன பறவை?



4 இது எந்த நாட்டின் பழங்காலத் தலை அலங்காரம்?



5 தேசப்படத்தில் இந்த அடையாளம் இருந்தால் அங்கே என்ன பொருள் கிடைக்கும்?

விடை வேறு பக்கம்

யானையை விரட்டிய நீலன்!



கொ.மா.கோதண்டம்

கோவிலின் முன் மண்டபத்தில் அந்த மாணவர்கள் முப்பது பேரும் மாலைச் சிற்றுண்டியை முடித்து விட்டு அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர். மலைவாழ் மக்களான ஆதிவாசிகள் இவர்கள் தந்த உணவினை உண்டு முடித்து மரத்தின் கீழே உட்கார்ந்து கொண்டு மாணவர்கள் பேசுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். மாணவர்களில் முரட்டுச் சுபாவம் உள்ளவனான மணி எழுந்தான்.

''டேய், நாம் இந்த மலையடிவாரத்துக்கு வந்து இரண்டு நாளாகிறது. இன்னும் இரண்டு நாட்கள்தான் இருக்கப் போகிறோம். அதற்குள்ளே ஒரு யானையைக் கூடப் பார்க்காமல் போனால் எப்படி? நம் பள்ளிக் கூடத்தில், வீட்டில், அல்லது நண்பர்களிடத்தில், 'காட்டுக்குப் போனோம்; யானையைப் பார்த்தோம்' எனச் சொல்ல வேண்டாமா? இங்கே இரவில் யானைகள் வருமென்று எங்கள் அப்பா கூடச் சொன்னாரே!''

''டேய், நீ யானையைப் பார்த்ததே இல்லையா? நம்ம ஊர் மாரியம்மன் கோவிலில் கூட ஒரு யானை கட்டிப் போட்டு இருக்குமே!''

இளங்கோ இவ்வாறு சொன்னதும், எல்லா மாணவர்களும் கொல்லென்று சிரித்து விட்டனர்.

''நான் மதுரையில் சர்க்கஸில் ஒரே நேரத்தில் நாலு யானைகளைப் பார்த்தவனாக்கும்! மலையில், இயற்கையாக வாழுகின்ற யானையைத்தான் பார்க்கணும்னு சொன்னேன்; வளர்ப்பு யானையை அல்ல.''

''அப்போ, இன்னைக்கு ராத்திரி நீ மட்டும் மலை ஏறிப் போய் யானையைப் பார்த்துட்டு வந்துடு.'' — அமுதன் இப்படிச் சொன்னதும் மற்ற மாணவர்கள் சேர்ந்து கொண்டனர்.

''அதுதான் சரி, நீதான் எங்கள் எல்லோரையும் விட வீரனாட்டம் பேசுவியே! அதைச் செயலில் காட்டு. இன்றைக்கு நீ மட்டும் போய் யானையைப் பார்த்துட்டு வந்திடு.''

''எனக்கென்ன அவ்வளவு தைரியமில்லை என்றா நினைச்சீங்க? சார் மட்டும் 'சரி'ன்னு சொன்னா இப்





பவே மலைக்குப் போகத்தான் போறேன்.''

மண்டபத் தூணில் சாய்ந்தவாறு ஏதோ படித்துக் கொண்டிருந்த என். எஸ். எஸ். அதிகாரியான பாரதி எழுந்து வந்தார்.

''ஏம்ப்பா மணி, நீ பள்ளியிலே அடிக்கிற லூட்டி போதாதா? இங்கே வந்து கூட வனத்திலே ஒற்றையாகப் போயிடுவேன்னு சொல்றியே, ஏதும் ஆச்சுன்னா, நானல்லவா பதில் சொல்லணும்? கொஞ்சம் அமைதியாத்தான் இரப்பா. இன்றைக்கு இரவில் யானை வந்தால் உங்கள் எல்லாரையும் நானே எழுப்பிக் காட்டுகிறேன். சரிதானே!''

''அப்படியே செய்யுங்க சார்'' — எல்லா மாணவர்களும் சேர்ந்து சொன்னார்கள்.

அவர்கள் அடுத்த நகரத்திலுள்ள ஒரு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள். இந்த மலையடிவார அய்யனார் கோவிலுக்கு அடுத்த வாரத்தில் வருகின்ற திருவிழாவை ஒட்டி அந்த நகரத்தின் பொது மக்கள் அதிகமாக வருவார்கள். அதற்காகக் கோவிலின் சுற்று வட்டாரத்தைத் தூய்மை செய்தும், மக்கள் விருந்து சாப்பிடுவதற்கான இடத்தை ஒழுங்கு செய்தும், அருவியிலும் நதியிலும் மக்கள் குளிப்பதற்காகக் கற்களை அகற்றி வசதிகள் செய்தும், நாட்டு நலப் பணித் திட்டத்தின் கீழ் சேவை செய்வதற்காக இங்கு வந்து தங்கிப் பணி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் குழுவில் நாற்பது மாணவர்கள் இருந்தாலும் அதிகாரி பாரதி முப்பது பேரை மட்டுமே இங்கு அழைத்து வந்தார், மீதி உணவினை மலைவாழ் மக்களுக்குத் தரலாமே என்ற எண்ணத்தில்.

இவர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த ஆதிவாசிச் சிறுவன் நீலன் மெல்லத் தயங்கியவாறே அதிகாரி அருகில் வந்து,

''கும்புடுறேன் சாமி'' என்றவாறே கைகளைக் கூப்பினான்.

''என்னப்பா நீலா, என்ன விசயம்?''

''இந்தப் படிக்கிற சாமிங்க எல்லாம் யானைகளைப் பார்க்க ஆசைப் படுறாகளே...''

''ஆமா, அதுக்கு நீ போய் யானைகளைக் கூட்டியாறேன்னு சொல்லுறியா?''

''இல்லே சாமி... வந்து... உங்க கிட்டே அஞ்சாறு படி உப்பு இருக்குங்களா...?''

''உப்பா...!'' என்றவர் ஏதோ யோசிக்கத் துவங்கினார். உடனே, மணி எழுந்தான்.

''இவன் என்னடா யானையைப் பார்க்கிறதுக்கு உப்பு இருக்கான்னு கேட்கிறான். உப்புக்கும் யானைக்கும் என்ன சம்பந்தம்? காட்டுப் பயலுன்னா சரியாத்தான் இருக்கு'' என்று சொல்லி விட்டுச் சிரித்தான். அவனோடு சில மாணவர்களும் நீலனைக் கேலி செய்து சிரித்தனர்.

''சரி, சரி, கொஞ்சம் இருங்கப்பா...'' என்றார் அதிகாரி.

''மாணவர்களே! நீலனைக் கேலி செய்ய வேண்டாம். இவன் உப்பு என்று சொன்னதும், எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகின்றது. உங்களைப் போன்ற குழந்தைகளின் மேல் அதிகமான அன்பு செலுத்திய இந்திய நாட்டுத் தலைவர் யார் தெரியுமா? சொல்லுங்கள், பார்க்கலாம்!''

''பண்டித நேரு சார்!'' இளங்கோடக்'கென்று பதில் சொன்னான்.

''ஆமா, இந்த ஆண்டு நேருவின் நூற்றாண்டு. நாம கூட நம்ம பள்ளியிலே அடுத்த மாதம் இந்த விழாவைக் கொண்டாட நூறு கவிஞர்களை அழைத்து அவருக்குக் கவிதாஞ்சலி செய்யப் போகிறோம்.''

''அது சரி சார், இவன் உப்புக்

கேட்டதற்கும் யானைக்கும், நேருவுக்கும் என்ன சம்பந்தம்...?'' மணி வேகமாகக் கேட்டான்.

''அதைத்தான் சொல்ல வந்தேன். ஒரு சமயம் நேரு தமிழ் நாட்டுக்கு வந்தார். அப்பொழுது அவர், தேக்கடி பெரியாறு நீர்த் தேக்கத்தில் படகுச் சவாரி செய்யவும், மலை வளம் காணவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நேரு இயற்கை அழகை மிகவும் விரும்புவார் என்பதால், இந்த ஏற்பாடு. அதே சமயத்தில் இந்த மலைகளில் வாழுகின்ற யானைகளையும் அவருக்குக் காட்ட வேண்டும் என அதிகாரிகள் முடிவு செய்து நீர்த் தேக்கத்தின் கரையோரக் காடுகளில் ஆங்காங்கே உப்பைக் கொட்டி வைத்தனர். யானைகள் உப்பைப் பிரியமாகச் சாப்பிடுமாம்! அது போலவே அன்று நேரு பெருமகன் நூற்றுக் கணக்கான யானைகளை அருகிலே இருந்து இயற்கையாகக் கண்டுகளித்தார் என்று பேப்பரில் செய்தி படித்த நினைவு எனக்கு வருகிறது.''

''அதிசயமா இருக்கே!'' என்றனர் பல மாணவர்கள்.

''சரி மணி, நீதானே யானையைப் பார்க்க ரொம்பப் பிரியப்பட்டாய்? அதனாலே நாளைக் காலையில் நீ சைக்கிளில் சென்று ஊரில் ஒரு பத்துப் படி உப்பு வாங்கி வந்து மத்தியானத்திற்குள் நீலனிடம் கொடுத்திடணும். நாளை மாலையில் நாமெல்லாம் நீலனுடன் சென்று பாதுகாப்பாக இருந்து யானைகளைப் பார்க்கப் போகிறோம்.''

அவர் கூறியதும் மாணவர்கள் கைகளைத் தட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

''சரி, இப்போ நேரமாச்சு. எல்லோரும் சிறிது நேரம் படித்து விட்டு, பின்னர் தூங்கப் போகலாம்.''

அவர் கூறியதும் மாணவர்கள் புத்தகங்கள் எடுக்க மண்டபத்தினுள் சென்றனர்.

மதியம் உணவு நேரத்தில் மணியும் அமுதனும் நகரிலிருந்து வேர்க்க விறுவிறுக்க உப்பு மூட்டையுடன் வந்து அதனை நீலனிடம் சேர்த்தனர். கோவில் துப்புரவுப் பணிகளை வேக






''பாப்பா! உன்னோட பெயரைச் சொன்னால்தான் உனக்கு சாக்லேட் தருவேன்!''

''சரி—தா!''

— மணியன் தர்மலிங்கம்.





வேகமாக முடித்து, அருவியில் சென்று குளித்தனர்.

பிற்பகலில் தயாராக இருந்த நீலனுடன், பாரதியும் மாணவர்களும் புறப்பட்டனர். பச்சைப் பசேல் என்றிருந்த அடர்வனத்தின் ஒற்றையடிப் பாதையில் நடந்தனர். சிறிது தூரத்தில் மரங்கள் குறைவாக இருந்த ஒரு சமதளக் காடு தென்பட்டது. ஒரு பக்கத்தில் மிகப் பெரிய பாறை காணப்பட்டது. நீலனைத் தொடர்ந்து அவர்கள் அதில் ஏறினார்கள். பாறை உச்சி சமமாக, மொட்டையாக இருந்தது.

''யானைகள் இப்ப வந்துடும் சாமி. வெள்ளைச் சட்டை போட்டவங்க எல்லாரும் சட்டைகளைக் கழட்டி மறைச்சு வச்சிடுங்க. கொஞ்ச நேரம் இப்படியே உட்கார்ந்திருப்போம்.'' நீலன் இப்படிக் கூறியதும்,

''ஏன்..? எதற்கு...?'' என்று கேட்டனர் பல மாணவர்கள்.

''வெள்ளை நிறத்தைக் கண்டால் யானைகளுக்குப் பிடிக்காது சாமி. அதுகளுக்கு கோபம் வரும். காட்டுக்குள்ளே போகும் போது வெள்ளைச் சட்டை போட்டிருந்தால் யானை நம்மைத் துரத்தும். சட்டையைக் கழட்டி மறைச்சு வச்சுடுங்க.''

பாரதி உடனே அதனை விளக்கினார்.

''அதனால்தான் ஐயப்பன் கோவிலுக்குப் போகின்றவர்கள் வேறு வேறு நிற உடைகளை அணிந்து போகின்றார்கள்.''

இதுவரை அவர்களால் அலட்சியப்படுத்தப்பட்டு வந்த ஆதிவாசிச் சிறுவன் நீலன், இப்போது ஓர் ஆசிரியரைப் போலத் தென்பட்டான். மாணவர்கள் அவனை வியப்புடன் பார்த்தனர்.

யானைகளின் பிளிறல் சத்தம் அருகில் கேட்டது. நீலன் சொன்னபடி அவர்கள் அந்தப் பாறையில் படுத்துக் கொண்டு எதிரே பார்த்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் ஒரு யானைக் கூட்டமே அங்கே வந்து கொண்டிருந்தது. முன்னால் வந்தது நீண்ட கொம்புகளை உடைய பெரிய யானை. பின்னர் வரிசையாக ஐந்

தாறு யானைகள். ஒரு யானையின் கால்களுக்கு ஊடே சிறிய குட்டி யானை.

"குட்டி யானை! அதோ குட்டி யானை!" என்று அவர்கள் உற்சாகத்தால் கூச்சலிட்டனர்.

அமைதியாக இருக்குமாறு நீலன் சைகை செய்தான். நான்கு இடங்களில் குவித்து வைத்திருந்த உப்பை அவை ஆர்வத்துடன் தும்பிக்கையால் எடுத்துத் தின்றன.


குட்டி மட்டும் உப்பைச் சாப்பிடாமல் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தது. தாய் அதன் முதுகில் தும்பிக்கையால் ஒரு போடு போட்டது. பின்னர், அதுவும் வந்து உப்பை அள்ளிச் சாப்பிட்டது.

மாணவர்களுக்குக் காட்டு யானைகளை மிக மிக அருகில் இருந்து பார்த்துக் கொண்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. மெல்ல கிசுகிசுவெனப் பேசிக் கொண்டிருந்தனர்.

மணி, யாருக்கும் தெரியாமல் மெல்ல எழுந்தான். பாறையிலிருந்த உடைந்து போன ஒரு கட்டையை எடுத்துக் கொம்பு யானை மீது வீசினான். அது யானையின் முதுகில் 'பட்'டென விழுந்தது. யானை பயங்கரமாகப் பிளிறியவாறே சுற்றும் முற்றும் பார்த்தது. பாறையின் மேல் மாணவர்கள் இருப்பதைக் கண்டு விட்டது. அது எதையோ தேடியது. ஒரு கல்லைத் தும்பிக்கையால் எடுத்தது.

"சாமி, குனிஞ்சிக்கோங்க, குனிஞ்சுக்கோங்க." — நீலன் கத்தினான்.


யானை தும்பிக்கையால் வீசிய கல் குனிந்து கொண்ட மணியின் தலைக்கு மேலாக ஒரு சாண் உயரத்தில் பறந்து சென்று பாறைக்கு அப்புறம் விழுந்தது. எல்லா யானைகளும் பாறையின் அருகில் வந்து பிளிறிக் கொண்டிருந்தன. மாணவர்கள் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருந்தனர். நீலன் பின்பக்கமாக மெல்ல இறங்கினான். செத்தைகளைச் சேகரித்து ஒரு கம்பால் அதைக் கட்டி, அதில் நெருப்பை வைத்துத் தூக்கிக் கொண்டான். கம்பின் உச்சியில் நெருப்பு, தகதகவென்று பெரும் பந்தமாக எரிந்தது. நீலன்



"அங்கே ஏன் உன்னுடைய சைக்கிளைப் படுக்க வைத்திருக்கிறாய்...?"

"அங்கேதான் 'சைக்கிளை 'நிறுத்தக் கூடாது'ன்னு போர்டு போட்டிருக்கே...!"

— ஏ. ஆர். வீரராகவன் (2118).



"எங்க தாத்தாவோட முதியோர் பள்ளிக்கூடம் இன்றைக்கு ஸ்டிரைக்காம்!"

"எதற்காக?"

"உட்கார்ந்து படிக்க 'ஈஸி சேர்' போடணுமாம்!"

— ஏ. ஆர். வீரராகவன் (2118).



அதனைத் தூக்கிப் பிடித்தவாறே, யானைகள் உள்ள பக்கம் ஓடினான். நெருப்பைக் கண்ட யானைகள் அலறிப் பிளிறியவாறே வந்த திசையில் ஓட்டமெடுத்தன.

மாணவர்கள் 'ஹோ'வென்று கூச்சலிட்டவாறே, பாறையிலிருந்து குதித்தனர். நீலனைத் தலைக்கு மேல் தூக்கிக் கொண்டு ஆரவாரம் செய்தனர்.

கீழே இறங்கி வந்த பாரதி,

''மணி உன்னுடைய சேட்டைக்கு அளவே இல்லையா? இப்போ உன்னால் எல்லோருக்குமல்லவா பெரிய ஆபத்து வர இருந்தது? நீலன் இல்லையென்றால் நமது கதி என்ன ஆகியிருக்கும்!''

மணி தலைகுனிந்தவாறு அவர் அருகில் வந்தான்.

''மன்னிச்சிடுங்க சார். இனிமேல் இந்த மாதிரி செய்ய மாட்டேன்.''

''சரி, இனிமேலாவது ஒழுங்காக இரு. நீலனை நேற்றுக் காட்டுப் பயல் என்று திட்டினாயே, இன்று அவனால் நாம் எத்தனை விஷயங்களைத் தெரிந்து கொண்டோம், பார்த்தாயா! யானை உப்பைப் பிரியமாகச் சாப்பிடும் என்பதையும், வெள்ளை நிறம் அதற்குப் பிடிக்காது என்பதையும், எதிரிகளைக் கல்லை எடுத்துக் குறி பார்த்து எறியும் என்பதையும், நெருப்பைக் கண்டால் பயந்து ஓடும் என்பதையும் தெரிந்து கொண்டோமல்லவா! ஒவ்வொரு மனிதனிடமும் ஏதோ ஓர் ஆற்றல் மறைந்திருக்கும் என்பதையும், நமக்குத் தெரியாத சில விஷயங்கள் அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்பதையும் நாம் உணர்ந்தோமானால், யாரையும் அலட்சியப் படுத்த மாட்டோம். கடைசியில், நீ யானையின் மீது கல்லை எறிய நம்மைத் தாக்க வந்த யானைகளை நீலன் சாமர்த்தியமாக விரட்டியல்லவா நம்மைக் காப்பாற்றினான்? ஆகவே, நீ இப்பொழுது நீலனிடம் தான் மன்னிப்புக் கேட்க வேண்டும்."


மணி நீலனின் அருகே சென்று அவனை அன்புடன் கட்டிப் பிடித்துத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான்.

இந்தச் சிறுமிக்கு வயது 10. சென்னையிலுள்ள இல் ஆதர்ஷ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 5 — வது வகுப்பில் படிக்கிறாள். பெயர் சஜிதா கிருஷ்ணமூர்த்தி.

சின்னஞ்சிறு வயதிலிருந்தே பரதநாட்டியத்தில் ஆர்வம் காட்டி வந்தாள். இவளது ஆர்வத்தை அறிந்த இவளுடைய தந்தை என். கிருஷ்ணமூர்த்தியும், தாய் சரோஜாவும் 7 — வது வயதில் வழுவூர் ஆர். சாம்ராஜிடம் இவளுக்குப் பரதநாட்டியக் கலையில் பயிற்சி அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள்.

பத்து வயதுக்குள் பரத நாட்டியக் கலையில் நன்கு தேர்ச்சி பெற்றுள்ள சஜிதா, சித்திரங்கள் வரைவதிலும், வண்ண ஓவியங்கள் தீட்டுவதிலும் தன் திறமையைக் காட்டி வருகிறாள். இவளுடைய ஆசை என்ன தெரியுமா? வருங்காலத்தில் பரதநாட்டியக் கலையை நன்கு ஆராய்ந்து அதில் ஒரு சாதனை புரிய வேண்டுமென்பதுதான்!




கதை: ஆனந்தி. படம்: விநு
சாணக்கியன் சபதம்
சாணக்கியர் என்று கேள்விப் பட்டிருப்பீர்களே. ... ராஜ தந்திரத்தில் தேர்ந்த அறிஞர்....
ஒரு நாள் காட்டு வழியே நடக்கும் போது...
ஆ! புல் தடுக்கி விழுகிறேனே!
சாணக்கியர் தம்மைத் தடுக்கிய புல்லைக் கொளுத்தி விட்டார்!
எனக்குத் தடையாக இருக்கும் எதையும் விட்டு வைக்க மாட்டேன்..
சாணக்கியர் பாடலிபுத்திரத்தை அடைந்தார்...
மன்னர் நந்தருடைய சபை...
நந்தா! சாணக்கியன் வந்திருக்கிறேன்.
இந்தப் பரதேசியை யார் உள்ளே விட்டது!


இது மந்திராலோசனை மண்டபம் இல்லை; பொதுச் சபை. இங்கு யாருக்கும் மன்னனைக் காண உரிமை உண்டு.
இந்த அதிகப் பிரசங்கியைக் குடுமியைப் பிடித்து வெளியேற்றுங்கள்!
தடுக்கி விட்ட புல்லைக் கூடக் கொளுத்திய சாணக்கியர் சபதம் செய்தார்...
நந்தா! அகம்பாவத்தினால் என்னை அவமதித்தாய்! உன் வம்சத்தையே அழிப்பேன்! அதுவரை குடுமி முடிய மாட்டேன்!
அரண்மனை முன்முற்றத்தில் மக்கள் மொய்த்தனர்.
ஒரு நாள், பாடலிபுத்திரத்துக்கு யானை மீது ஒரு கூண்டுப்புலி வந்து சேர்ந்தது.
அட, பொம்மைப்புலி!
ரோமாபுரி மன்னர் அனுப்பிய பரிசாம்!


மன்னன் நந்தனிடம் ரோமாபுரி வீரன்...
கூண்டைத் திறக்காமல், கம்பிகளை வளைக்காமல் புலியை விடுவிக்கக் கூடியவர் பாடலிபுத்ரத்தில் உண்டா?
எல்லோரும் திகைத்து நிற்க சந்திரகுப்தன்...
நான் சொல்கிறேன் அதற்கு வழி...
நிழல் தரும் மேல் விதானத்தை நீக்கி விட்டுப் புலிக் கூண்டை வெய்யிலில் வையுங்கள்....
மெழுகால் ஆன கூண்டு, வெய்யிலில் உருகி விட.....
பாடலிபுத்திரத்தில் அறிவாளிகளுக்குப் பஞ்சமில்லை என்று ரோமாபுரி மன்னனிடம் திரும்பிச் சென்று சொல்லுங்கள்.
மக்கள் கூட்டத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார் சாணக்கியர்...
என்ன கம்பீரம்! அறிவுக் கூர்மை! பார்த்தவுடன் மெழுகுக் கூண்டு என்று கண்டு பிடித்து விட்டானே!


சந்திரகுப்தனைச் சந்தித்துப் பாராட்டினார் சாணக்கியர்...
உன் ஆற்றல் வளரட்டும்!
என்ன பயன்? என்னை என் தந்தை வெறுக்கிறாரே!
அப்படியா! ஏன்?
நான் அவருடைய மூத்த மகன் என்றாலும் ஒரு வேலைக்காரிக்குப் பிறந்தவனாம். அதனால் எனக்குப் பட்டம் கிடையாதாம்!
அநீதி! வேலைக்காரி என்றாலும் விரும்பித்தானே உன் தந்தை அவளை மணந்தார்? மேலும் உன் புத்திசாலித்தனம் பட்டத்தரசிகளுக்குப் பிறந்த உன் தம்பிகளுக்கு இல்லையே?
அதை யார் கேட்கிறார்கள்?
சந்திரகுப்தா! கவலைப் படாதே! உன்னை அரியாசனத்தில் அமர்த்துவது என் பொறுப்பு!
ஹூம்... அதற்கு என் அப்பாவின் மதிமந்திரி ராக்ஷஸன் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டார்...
பார்க்கலாம் ஒரு கை!



மன்னன் நந்தனும் பட்டமகிஷி மூலமாகப் பிறந்த அவனுடைய புதல்வர்களும் இறந்து விட்டதாகச் செய்தி கிடைத்தது ராக்ஷஸனுக்கு...
சரி, நீ போகலாம்...
காப்பாற்றுபவன் - ரக்ஷிப்பவன் என்ற அர்த்தத்தில் ராக்ஷஸன் என்று பெயர் பெற்றேன். ரட்சிக்கத் தவறி விட்டேனே!
ராக்ஷஸன், நந்தனுடைய தம்பி சர்வசித்தியைக் காணச் சென்றார்...
எல்லாரும் ஒரே சமயத்தில் போய் விட்டார்களே...
இது சாணக்கியனுடைய வேலையாக இருக்கலாம்...
...சாணக்கியன் சந்திரகுப்தனுக்கு முடி சூட்ட முயற்சி செய்வான். அதைத் தடுக்க வேண்டும். நந்த வம்சத்தின் அடுத்த வாரிசு நந்தரின் தம்பியாகிய நீங்கள்தான்.
சர்வசித்திக்கு மகுடாபிஷேகம் நடந்தது.
வாழ்க! வாழ்க!



சாணக்கியர் அண்டை நாட்டு அரசனான பர்வ தேசுவரனிடம் சென்று...
நந்தனின் மூத்த மகன் இருக்க, நந்தனின் தம்பி நாடாள்வதா?
உங்கள் யோசனை என்ன?
சந்திரகுப்தன் மகத நாட்டின் மன்னனாவதற்கு உதவுங்கள். முடி சூட்டு விழா முடிந்ததும் மகத நாட்டில் பாதி உங்களுக்கு!
பேராசை கொண்ட பர்வதேசுவரன் படையெடுத்து வந்தான். அவனுடன் இளவரசன் மலையகேதுவும் வந்தான்.
பெரும்போர் நடந்தது...
தோற்றுப்போன சர்வசித்தி, தப்பினால் போதும் என்று ஓடிப் போனான்.



வெற்றிக் களிப்பில் பர்வதேசுவரன்...
மறுநாள் காலை பர்வதேசுவரன் இறந்து கிடப்பதைப் பார்த்த மகன் மலையகேது...
மகத ராஜ்யத்தைப் பகிர்ந்து கொடுக்காமல் இருக்க இந்த ஏற்பாடா? இதுவும் சாணக்கிய தந்திரங்களில் ஒன்றா..?
மலையகேது அவசரமாகத் திரும்பிச் சென்றான்...
எனக்கும் வஞ்சனையால் மரணம் ஏற்படும் முன் தப்பி விடுகிறேன்...
மகத நாட்டின் எல்லை கடந்ததும் பாசறை அமைத்துப் பெரும் படை திரட்டினான் மலையகேது.
ராக்ஷஸன், மலையகேதுவைக் காண வந்தான்.
ஒரு வேலைக்காரியின் மகன் மகதத்தை ஆள்வதை விட, நீ அதனை ஆள்வதே நியாயமாக இருக்கும்.



நீங்கள் எனக்கு உதவினால் சாணக்கியனையும் சந்திர குப்தனையும் முறியடிக்கலாம்.
நிச்சயம் உதவுகிறேன்.
பாடலிபுத்திரத்தில் சாணக்கியரின் குடில்...
வாப்பா, செய்தி ஏதும் உண்டா?
ராக்ஷஸன், மலையகேதுவின் பாசறைக்குப் போய்விட்டார்.
வந்தவன் சாணக்கியரின் ஒற்றன்...
...ராக்ஷஸனின் குடும்பத்தினர் ஒரு நண்பர் வீட்டில் தங்கியிருக்கின்றனர்.
...சான்று?
இதோ!
ஆ! ராக்ஷஸனுடைய முத்திரை மோதிரம்! இது எப்படி கிடைத்தது?
வீடு வீடாகப் பிச்சைக்காரன்போல் வேஷமணிந்து போனேன். பாடினேன். ஒரு வீட்டில் ராக்ஷஸனுடைய குழந்தை பிச்சையிட வாசலுக்கு ஓடி வந்தான்...



சந்தனதாசன் வீட்டினெதிரே நான் பார்க்கும்போது ஒரு சிறுவன் வாசல் திரைவிலக்கி எட்டிப் பார்த்தான்.
பின்னாலிருந்து ஒரு பெண் கரம் சிறுவனைப் பற்றி இழுத்தது...
போகாதே நில்!
ஒற்றன் கூறி முடித்தான்...
அப்போது இந்த மோதிரம் நழுவி விழுந்ததை, பரபரப்பில் அவள் கவனிக்கவில்லை.
ஓ! அது ராக்ஷஸனின் மனைவியாகத்தான் இருக்கும்! அவள் அங்கு மகனுடன் ஒளிந்து வாழ்வது வெளியே தெரியக் கூடாதே என்ற பரபரப்பு!
ஒற்றனை அனுப்பிவிட்டு சாணக்கியர்...
உம்... ராக்ஷஸன் மகாதிறமைசாலி! அவர் மட்டும் சந்திரகுப்தன் தலைமையை ஏற்றுக் கொண்டு விட்டால்... பிறகு ஒரு கவலையும் இல்லை! உம்...




சாணக்கியர் தமது நம்பிக்கைக்குரிய இன்னொரு ஒற்றனை அழைத்தார்...
சித்தார்த்தா! உன்னிடம் மிக முக்கியமான பொறுப்பை ஒப்படைக்கிறேன்.
ஆ! ராக்ஷஸனின் முத்திரையுடன் ஓலை...
ஆமாம்., ஆனால் கடிதத்தை எழுதியது நான்! நீ என்ன செய்ய வேண்டுமென்றால்...
நான் தப்பிச் செல்ல முயற்சி செய்வதுபோல் நடித்து அகப்பட்டுக்கொள்ள வேண்டும்!
சித்தார்த்தன் மலையகேதுவின் பாசறைப் பக்கம் சென்றான்...
யார் அங்கே! நில்!
சித்தார்த்தன் கைதாகி மலையகேது முன் நின்றான்...
இவன் ஒற்றன்! தப்பி ஓடப்பார்த்தான்...
இந்த ஓலையை இவனிடம் கைப்பற்றினோம்.
ஓலையில் முத்திரையைப் பார்த்த மலையகேது...
ஆ! என் அமைச்சர் ராக்ஷஸனிடமிருந்து ஓலை எடுத்துச் செல்கிறாயா, யாருக்கு.....?



பிரபோ! நான் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். என்னை விட்டுவிடுங்கள். .. ராக்ஷஸன் என்னை சந்திரகுப்தனிடம் அனுப்பினார்...
... ஆனால் உங்களுக்குத் துரோகம் இழைக்க என் மனம் இடம் தரவில்லை. வலிய வந்து மாட்டிக் கொண்டேன்...
என்ன! என்ன!
மலையகேது ஓலையைப் படித்தான்...
மலையகேதுவுக்குத் துணையாக வந்துள்ள அரசர்கள் அவன் ராஜ்யத்தைப் பங்கு போட்டுக் கொள்ள விரும்புகிறார்கள்! நீ சாணக்கியனை அனுப்பி விட்டு என்னை மதி மந்திரியாக ஏற்றால் மகதத்தை எதிர்ப்பு இன்றி ஆளலாம்!
மலையகேது கொதித்து எழுந்தான்...
துரோகி! கூட இருந்தே குழி பறிக்கிறானே...
சித்தார்த்தகனை விடுவித்துவிட்டு, மலையகேது ராக்ஷஸனின் இருப்பிடம் வந்தான்...
என்ன முடிவு?
படைகிளம்பவேண்டியதுதான்!


இன்னும் சிலதினங்களில் மகத நாட்டுக்கும் மலையகேது தான் மன்னர்!
நயவஞ்சகனே! போர் நடக்கும் போது என்னை நீ முதுகிலே கூடக் குத்துவாய்!
மலையகேது என்ன உளறுகிறாய்?
இதோ இந்த ஓலையை எதற்காக எழுதினாய்? துரோகி!
ஓலையைப் படித்த ராக்ஷஸன் அதிர்ச்சி அடைந்து...
மலையகேது! இதை நம்பாதே! இது சாணக்கியனின் சூழ்ச்சி!
இருக்கலாம், ஆனால் இதில் உன் முத்திரை எப்படி வந்தது?
அது... அது... எனக்கும் புரியவில்லை!
ராக்ஷஸா! உனக்கு நான் மரண தண்டனை விதிக்கலாம். ஆனால் நான் சுத்த வீரன்! நீ போய்விடு! உன் ஆசைப்படி சந்திர குப்தனுடன் சேர்ந்து கொள்! அவனையும் உன்னையும் சேர்த்து நான் ஜெயிப்பேன்!


மனவேதனையுடன் ராக்ஷஸன் மலயகேதுவின் முகாமிலிருந்து வெளியேறினார்...
சாணக்கியனுடைய சூழ்ச்சிக்குப் பலியாகி விட்டேனே... இனி எங்கே போவது? என்ன செய்வது?
இதற்கிடையில் சாணக்கியர்...
சந்தனதாஸனை அழைத்து வாருங்கள்.
அவன் வந்ததும்...
சந்தனதாஸா! ராக்ஷஸன், சந்திரகுப்தனுடைய எதிரியென்பது தெரிந்திருந்தும் அவன் குடும்பத்தினருக்கு நீ அடைக்கலம் தந்திருக்கிறாய், அல்லவா?
அவர்கள் இப்போது என் வீட்டில் இல்லை...
இப்போது இல்லை என்றால் ஏற்கெனவே இருந்திருக்கிறார்கள்...
...என் கோபத்துக்குப் பயந்து வேறிடத்தில் அவர்களை ஒளித்து வைத்திருக்கிறாய், அப்படித்தானே!
அது மனிதாபிமானம்...



இருக்கலாம்... ராக்ஷஸன் உன் நண்பனாக இருக்கலாம்... ஆனால் அவன் ராஜ துரோகி... அவனுக்கு உதவியதால் உன்னையும் உன் குடும்பத்தினரையும் சிறை வைக்கிறேன்!...
பிறகு, சாணக்கியர் ஓர் ஒற்றனை அழைத்து...
ராக்ஷஸன் மலையகேதுவின் பாசறையிலிருந்து புறப்பட்டிருப்பான். அவனைக் கண்டுபிடித்து...
ஒற்றன் ஒரு சாமானியனைப் போல் ராக்ஷஸனை நெருங்கி...
பாடலிபுத்ரத்திலிருந்து வரேனுங்க...
என்ன விசேஷம்...?
யாரோ சந்தனதாஸனாமே, கழுவேற்றப் போறாங்களாம்... பரபரப்பா பேசிக்கறாங்க...
ஆ!
ராக்ஷஸன் பாடலிபுத்திரத்துக்குச் சென்றார்...
என் குடும்பத்தைக் காப்பாற்றத் தன் உயிரையே கொடுக்கச் சித்தமானானா, சந்தனதாஸன்! அவனை எப்படியும் மரண தண்டனையிலிருந்து மீட்பேன்!



பாடலிபுத்திரத்தின் எல்லையில் கொலைக் களம்.....
உம்... இந்த ராஜ துரோகியை இழுத்துப் போய்க் கழுவிலேற்றுங்கள்...
நிறுத்து! நிறுத்து!
இது மகா மந்திரி சாணக்கியரின் கட்டளை... நிறுத்துவதற்கு நீ யார்?
வீரனே! சாணக்கியனிடம் போய், ராக்ஷஸன் வந்து விட்டேன் என்று சொல்லு!
சந்தனதாஸன் நெகிழ்ந்து போய்...
ராக்ஷஸரே! ஏன் இங்கு வந்தீர்?
நண்பா! உனக்கு என்னிடம் இருக்கும் அன்பு, எனக்கு உன்னிடம் இருக்காதா?
ராக்ஷஸன் வந்து விட்டதை அறிந்து சாணக்கியர் விரைந்து வந்தார்.....
பாடலிபுத்திரம் உங்களை வரவேற்கிறது....
சாணக்கியரே! என் செயல்கள் ராஜ துரோகமென்றால் என்னைத் தண்டியுங்கள். என் நண்பனைப் பழி வாங்காதீர்கள்!



ராக்ஷஸரே! உங்களை பாடலிபுத்திரத்துக்கு வரவழைக்க நான் நடத்திய நாடகம் இது. சந்தனதாஸன் இந்தக் கணமே விடுதலை பெறுவான்...
அப்போது சந்திரகுப்தனும் செய்தி அறிந்து வந்து...
ராக்ஷஸரே! வணங்குகிறேன்... உங்கள் ஆசிகளை வேண்டுகிறேன்...
எடுத்த காரியம் யாவிலும் வெற்றி பெறுவாய்...
தமது இடுப்பில் அணிந்திருந்த வாளை ராக்ஷஸனிடம் தந்தார் சாணக்கியர்...
இனி சந்திரகுப்தனுக்கு நீங்கள்தான் மகாமந்திரி...
ராக்ஷஸன் அன்புக் கட்டளைக்குப் பணிந்தார்...
சந்திரகுப்தா... மலையகேதுவை நண்பனாக்கிக் கொள்! முராவின் பிள்ளையான உன்னிடமிருந்து மௌரிய வம்சம் தழைத்தோங்கும்!
இவ்வாறு சாணக்கியர் சபதம் நிறைவேறியது. அசாதாரண ராஜதந்திரத்துக்கு "சாணக்கியம்" என்றே மாற்றுப் பெயர் ஏற்பட்டது. முத்ரா ராக்ஷஸம் (ராக்ஷஸனின் முத்திரை) என்ற வடமொழி நூலைத் தழுவி எழுதியது.

எனது செங்கல்

புத்தம் புதிதாய் எங்களுக்கு
வீடு கட்டுறார், அப்பா
வீடு கட்டுறார்,
கட்டுறார்!

புற நகரில் வீடு பார்க்கப்
போயிருந்தோம் நேற்று, நாங்கள்
போயிருந்தோம் நேற்று,
நேற்று!

கொத்தனார்கள் மொத்தமாக
வேலை செய்யப் பார்த்தோம், அங்கே
வேலை செய்யப் பார்த்தோம்,
பார்த்தோம்!

செங்கல் மீது செங்கல் வைத்தே
சுவர் எழுப்பக் கண்டேன், அங்கே
சுவர் எழுப்பக் கண்டேன்,
கண்டேன்!

சிறிய செங்கல் ஒன்றெடுத்துக்
கொத்தனார்க்குத் தந்தேன், நான்
கொத்தனார்க்குத் தந்தேன்,
தந்தேன்.

எனது கல்லைச் சேர்த்து வைத்துச்
சுவர் எழுப்பி விட்டார் — அவர்
சுவர் எழுப்பி விட்டார்,
எழுப்பி விட்டார்!

ஆகா,
எங்கள் வீட்டைத் தாங்கும் சுவரில்
எனது கல்லும் உண்டு,
எனது கல்லும் உண்டு,
என்றும் உண்டு!




ஒருவர்: திடீர்னு உங்க பிராக்டீஸ் குறைஞ்சதுக்குக் காரணத்தைக் கண்டுபிடிச்சிட்டீங்களா?

டாக்டர்: 'போலியோ' டாக்டர் என்று எழுதியிருந்த போர்டில் 'யோ'வை யாரோ அழிச்சிருக்காங்க.

— க. இராமலிங்கம்.





ஒரு குறை குடம் நிறை குடம் ஆகிறது

டி. ஜானகி

உங்களுக்கு மனோகரைத் தெரியுமா?

''எ..ன்..ன.. தெரியாதா?

அதோ புலியூர் புகை வண்டி நிலையத்தில் சுருட்டை முடியோடு, உருண்டை முகத்தோடு, தன் மாநிற மேனியில் காக்கி டிராயரும் பூப் போட்ட சட்டையும் அணிந்து, கரூரிலிருந்து வரும் புகை வண்டியை எதிர்பார்த்தபடி பதினைந்து வயதுச் சிறுவன் நிற்கிறானே, அவனே தான் மனோகர்.

மனோகர் நல்ல பையன்தான். படித்தால் நன்றாகப் படிப்பு வரும். ஆனால், படிப்பில் நாட்டம் செலுத்துவது கிடையாது. அவன் நாட்டம் எல்லாம் எதில் என்று நினைக்கிறீர்கள்? தன்னைப் பற்றித் தற்பெருமை அடித்துக் கொள்வதில்தான்.

ஆம்! இது அவனிடம் உள்ள கெட்ட குணமாகும். தன்னைப் பற்றி மற்றவர்கள் உயர்வாக நினைக்க வேண்டும், தன்னைப் பற்றிப் பெருமையாகப் பேச வேண்டும் என்பதற்காக, கூசாமல் அளப்பான்.

உள்ளூரில் வாங்கிய பாலியஸ்டர் சட்டையைத்தான் போட்டிருப்பான். அந்தச் சட்டை அமெரிக்காவிலிருந்து அவனுக்காக அவன் அப்பாவின் நண்பர் வாங்கி வந்ததாக அளப்பான். வீட்டில் பழைய சாதம்தான் சாப்பிட்டிருப்பான். நண்பர்களிடம் அல்வா, பூரி, குருமாவை ஒரு வெட்டு வெட்டியதாகக் கூறுவான். தரை டிக்கெட்டிற்குத்தான் சினிமாவிற்குப் போயிருப்பான். ஆனால், ஏ.ஸி.யில் பால்கனியில் அமர்ந்து பார்த்ததாக அளப்பான். தெரு நாயைப் பார்த்தாலே குதிகால் பிடரியில் பட வீட்டிற்குள் ஓடி விடுவான். ஆனால் தன்னைப் பார்த்தாலே தெருவில் உள்ள அத்தனை நாய்களும் பயந்து ஓடி விடும் என்பான். இதுதான் தொலைகிறது என்றால், பள்ளியில், தான் வாங்குகிற மார்க்கை எப்படிச் சொல்வான் தெரியுமா? ஆங்கிலத்தில் 39தான் வாங்கியிருப்பான். தமிழில் 38தான்

வாங்கியிருப்பான். ஆனால், வீட்டில் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் ஆங்கிலத்தில் 93, தமிழில் 83 என்று மாற்றிச் சொல்வான். கணக்கில் 34 தான் வாங்கியிருப்பான். சென்ட்டம் வாங்க ஒரு மார்க் ஆசிரியர் போட வில்லை என்பான். இப்படி எதற் கெடுத்தாலும் ஜம்பம் அடித்துக் கொண்டே இருப்பான். அதற்கு அளவே கிடையாது.

அவன் அம்மாவிற்கு இதெல்லாம் கொஞ்சம் கூடப் பிடிக்காது.

''மனோகர்! உயர்ந்த எண்ணமும் தன்னம்பிக்கையும் வாழ்க்கைக்கு மிகவும் தேவைதான். அதற்காக உன் னிடம் இல்லாததை எல்லாம் மிகைப் படுத்திக் கூறுவது நல்ல பழக்கம் இல்லை. இந்த மாதிரி பொய் சொல் வதை, தற்பெருமை அடித்துக் கொள் வதை விட்டு விட்டு உண்மையிலேயே உன்னைத் தகுதியுள்ளவனாக மாற் றிக் கொள்ள முயற்சி செய். குறை குடம் என்றும் கூத்தாடும். அது மாதிரி கூத்தாடாது, நிறை குடமாக இருக்க முயற்சி செய்'' என்று அடிக் கடி புத்திமதி கூறுவாள். ஆனாலும், அவன் தற்பெருமை அடித்துக் கொண்டேதான் இருந்தான்.

திருச்சி ஜங்ஷனில் குடியிருக்கும் அவன், அரை ஆண்டு விடுமுறையில் சென்னைக்குப் போகப் போவதாக நண்பர்களிடம் பொய் சொல்லி விட்டு, புலியூரில் உள்ள தன் மாமா வீட்டிற்குச் சென்றிருந்தான். மறு நாள், பள்ளிக்கூடம் திறக்க இருந்த தால் மாமா வீட்டாரிடம் விடை பெற்றுக் கொண்டு அந்தக் கிராமத்து ஸ்டேஷனில் வண்டிக்காக காத்துக் கொண்டிருந்தான்.

எதேச்சையாக அவன் பார்வை அங்குள்ள பேப்பர் விற்கும் பையனி டம் சென்றது. அவன் கையில் அந்த மாதச் சிறுவர் பத்திரிகையான 'வண்ண மலர்' கண்ணில் பட்டது.

நாளைக்குத்தான் வரும் என்று நினைத்தேன். இன்றே வந்து விட் டது போல் இருக்கிறது என்று மனத் திற்குள் எண்ணியபடி அந்தப் புத் தகத்தை விலைக்கு வாங்கினான்.

அங்குள்ள சிமெண்ட் பெஞ்சியில் அமர்ந்து கொண்டு வண்ண மலரைப்



புரட்டியவனின் கண்கள் வியப்பால் விரிந்தன.

ஆம்! அதில் அவன் எழுதிய துணுக்கு ஒன்று வெளியாகியிருந்தது. படம் போடப்பட்டு அதற்கு அடியில் அவன் எழுதிய துணுக்கு, அதற்குக் கீழே அவன் பெயர்!

முகத்தில் ஒரே மலர்ச்சி. மகிழ்ச்சி வானில் சிறகடித்துப் பறப்பது போல் பூரித்தான்.

''கூ என்ற பேரிரைச்சலுடன் வண்டி ஸ்டேஷனுக்குள் நுழைந்து மெதுவாக நின்றது.

மனோகர் 'வண்ண மலரை'த் தன் பையில் பத்திரமாக வைத்தபடி தன் எதிரே இருந்த ரயில் பெட்டியில் ஏறி ஜன்னல் ஓரமாக வசதியாக அமர்ந்து கொண்டான். ஏனோ தெரியவில்லை. வண்டியில் அன்று அதிகக் கும்பல் இல்லை. அதுவும் அவன் ஏறி இருந்த பெட்டியில் அவனையும் சேர்த்து மொத்தம் ஐந்து பேர். அவன் வயதை ஒத்த சிறுவன் கட்டம் போட்ட சட்டை அணிந்திருந்தான். கையில் ஏதோ ஒரு பேப்பரை வைத்துப் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு எதிரில் கிட்டத்தட்ட ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் தூய வெள்ளை ஆடையில், கண்களில் கண்ணாடி அணிந்தபடி கண்ணியமான தோற்றத்தில் காட்சி அளித்தார்.

அவனுக்கு எதிர்த்தாற் போல் இரண்டு கிராமத்துப் பெண்கள் வெற்றிலையை வாயில் குதப்பியபடி, சமீபத்தில் பெய்த மழையினால் பயிர்கள் பாதிக்கப்பட்டதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

சில வினாடிகள் ஓய்வு எடுத்துக் கொண்ட புகை வண்டி கிளம்ப ஆரம்பித்தது. திடீரென்று 'வண்ண மலர்' ஞாபகம் வரவே, அதை எடுத்துத் தான் எழுதிய துணுக்கை இரண்டு மூன்று முறை ரசித்துப் படித்தான். இந்த மகிழ்ச்சியை யாரிடமாவது சொல்லி, பெருமை அடித்துக் கொள்ள உள்ளம் பரபரத்தது.

புத்தகத்தை மறுபடியும் ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிய பொழுது அவன் கண்களில் அப் பத்திரிகை சிறுவர்களுக்காக நடத்திய சிறுவர்களே கலந்து கொண்ட சிறுகதைப் போட்டியின் முடிவை வெளியிட்டிருந்தது.

'முதல் பரிசு, கே. மனோஜ், பத்தாம் வகுப்பு, கரூர்' என்றிருந்தது.

மனோஜ்... இவன் எத்தனை முறை இந்த வண்ண மலரில் எழுதியுள்ளான்! துணுக்கு, படக்கதை, சிறுகதை என்று ஒவ்வொரு வண்ண மலரிலும் இவனுடைய படைப்பு ஏதாவது ஒன்று வெளியாகிக் கொண்டே இருக்கிறது. இந்த மாதம் இவன் பரிசு பெற்ற கதை!


ஒரே மூச்சில் கதையைப் படித்து முடித்தான். கதை அருமையாக இருந்தது. 'ஒரு துணுக்கு வெளியானதற்கே

என்ன? என்ன?

1. எண்ணும் முள்ளும் இல்லாத கடிகாரம். நின்று போனால் புதைக்கலாம்; அல்லது எரிக்கலாம்.
2. தண்ணீரில் நீந்தி வரும் அது தரையிலே தாண்டி வரும். அது என்ன?
3. தலையைச் சீவி விட்டால், தாள் மீது நடப்பான். அவன் யார்?
4. குளத்து நிறைய நீர் இருந்தும் குருவி குடிக்க முடியாது. அது என்ன?
5. அவனுக்கு ஒருமுறை பல் விழுந்தால் மறுமுறை முளைக்காது அவன் யார்?
6. வெள்ளைக் குளத்தில் கறுப்பு மொத்து. அது என்ன?

விடை: 1. இதயம் 2. தவளை 3. பென்சில் 4. இளநீர் 5. சீப்பு 6. கண்.

— பொன். பாண்டியன் (11,311) செஞ்சி.





எனக்கு இத்தனை மகிழ்ச்சியாக இருக்கிறதே, முன்பின் பார்த்திராத மனோஜிற்கு, தன் முதல் பரிசு கதையைப் படிக்கும் போது எத்தனை சந்தோஷமாக இருக்கும்! ஆஹா... அவனுக்குத்தான் எத்தனை புகழ்! பெருமை!'

லாலா பேட்டை ஸ்டேஷனில் வண்டி நின்றது. அந்தக் கிராமப் புறத்துப் பெண்கள் இருவரும் இறங்கி விட்டனர். ஒன்பது மாணவர்கள் அவன் வயதை ஒத்தவர்கள் வேகமாக ஏறி அதே பெட்டியில் அமர்ந்து கொண்டனர். அந்த ஒன்பது பேர்களின் கண்களிலும் முதலில் பட்டது மனோகரின் கையிலிருந்த வண்ண மலர்தான்.

தயங்கியபடியே ஒருவன் அவனிடம் வண்ண மலரைக் கேட்க, புன்முறுவலுடன் அவர்களிடம் நீட்டினான்.

ஒருவர் மேல் ஒருவர் இடித்துக் கொண்டு புத்தகத்தைப் புரட்டிய பொழுது அவர்கள் கண்ணில் பட்டது மனோஜ் பரிசு பெற்ற கதை.

''டேய் கோபால், மனோஜ் யாரோ பெரிய ஆள் என்று நினைத்துக் கொண்டிருந்தோம் அல்லவா? இதோ பார். நம்மைப் போல் அவனும் பத்தாவதுதான் படித்துக் கொண்டிருக்கிறான். எப்படி அருமையா எழுதறான்! பரிசுக் கதையை வெளியிட்டதோடு, அவன் போட்டோவையும் போட்டிருக்கலாமே. ஏனோ போடவில்லை. அவன் எப்படி இருப்பானோ!'' என்றான் ஒரு மாணவன்.

“ஆமாண்டா ராகுல், நாமும் அவனைப் பார்த்ததில்லை. சரி. சரி அவனோட கதையை நீ படி. நாங்கள் கேட்கிறோம்.''

ராகுல் என்ற மாணவன் கதையைப் படித்தான். படித்து முடித்ததும், ''கதைன்னா, இதுதாண்டா கதை! அதனாலேதான் முதல் பரிசு'' என்று மாணவர்கள் மனோஜைப் புகழப் புகழ...

மனோகர் தன்னையே மனோஜாக நினைத்துக் கொண்டான். திடீரென்று அந்த எண்ணம் தோன்றி



கீழே சில பெயர்களும், அவை எவற்றால் புகழ் பெற்றன என்பதும் வரிசை மாற்றிக் கொடுக்கப் பட்டுள்ளன. அவற்றை வரிசைப் படுத்துங்கள், பார்க்கலாம்.

1. அஜந்தா — காந்தியார் பிறப்பிடம்
2. அமிர்தசரஸ் — உலகின் உயர்ந்த சிகரம்
3. ஆக்ரா — பல்கலைக் கழகம்
4. எவரஸ்ட் — நீர் வீழ்ச்சி
5. நாலந்தா — சாய்ந்த கோபுரம்
6. நயாகரா — குகைக்கோயில்
7. பைசா — சீக்கியரின் பொற்கோயில்
8. போர் பந்தர் — தாஜ்மஹால்


விடை: 1—6, 2—7, 3—8, 4—2, 5—3, 6—4, 7—5, 8—1

— க. கோகுலகிருஷ்ணன் (20919), விசலூர்.

''போஸ்ட்மேன் உங்க வீட்டுக்கு வரும் போது மட்டும் பின்னாடியே நடந்து வர்றாரே, ஏண்டா?''

''என்னோட கதை திரும்பி வருகிறதுன்னு அவருக்குத் தெரிந்து விட்டதாம்!''

— க. இராமலிங்கம்.



யது. தன்னை நான்தான் அந்த மனோஜ் என்று சொல்லிக் கொண்டால்...

அதற்கேற்றாற்போல் ஒரு மாணவன் அவனைப் பார்த்து, ''உன் பெயரென்ன?'' என்று கேட்ட பொழுது,

''இத்தனை நேரம் நீங்கள் பேசிய அந்த மனோஜ் நான்தான்'' என்று பெருமையாகக் கூறினான்.

அவ்வளவுதான்! ஏதோ காணாத பொருளைக் கண்டது போல் அந்த ஒன்பது பேரும் அவன் அருகில் நெருக்கியடித்துக் கொண்டு அமர்ந்தனர். வியப்போடு அவனைப் பார்த்தனர். முதல் பரிசு பெற்றதற்காகத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். ஆளுக்கு ஆள் கேள்விகள் கேட்க, பெருமையோடு அவர்களைப் பார்த்தபடி கூசாமல் அளக்க ஆரம்பித்தான் மனோகர்.

''இந்தச் சின்ன வயசிலேயே உனக்கு எழுதணுங்கற ஆர்வம் எப்படி வந்தது?''

''எங்க தாத்தா அந்தக் காலத்திலே பெரிய எழுத்தாளராம். எங்க அம்மாவும் அப்பாவும் எனக்கு உற்சாகம் ஊட்டறாங்க.''

''எழுத நேரம் கிடைக்கிறதா?''

''எழுத்து என்றால், எனக்கு உயிர். அதற்காகத் தினம் ஒரு மணி நேரம் ஒதுக்குகிறேன்.''

''இதனால் பள்ளிப் படிப்பு பாதிக்கவில்லையா?''

''ஊஹூம். இங்கிலீஷில் 93. தமிழில் 83. கணக்கில் சென்ட்டம் வாங்க ஒரு மார்க் ஆசிரியர் போடவில்லை.''

''இதுவரை எத்தனை கதை எழுதியிருப்பாய்?''

''சரியாக ஞாபகம் இல்லை.''

''கதைக்கு எத்தனை ரூபாய் சன்மானம் அனுப்புகிறார்கள்?''

உண்மையில் அவனுக்கே தெரியாது எவ்வளவு கொடுப்பார்கள் என்று. ஒரு விநாடி திகைத்து, பின் சமாளித்தபடி கூறினான்:

''பணம் எனக்கு முக்கியமில்லை. ஆசிரியர் அனுப்புவதை மகிழ்ச்சியோடு பெற்றுக் கொள்கிறேன்! என் கற்பனை ஆற்றலைவளர்த்துக்கொள்-

ளவும் ஒரு பொழுது போக்காகவும் தான் எழுதுகிறேன்.''

இப்படியே இன்னும் சில சிறுவர் பத்திரிகைகளில் மனோஜ் எழுதியதை, தான் எழுதியதாகக் கூறிக் கொண்டான். ''இன்னும் நிறைய எழுதப் போவதாக... ஏன், கூடிய விரைவில் ஒரு தொடர் கதை கூட எழுதப் போவதாக அறிவித்தான்.''

''ஆ!'' என்று வாயைப் பிளந்தபடி அந்த ஒன்பது பேரும் அவனை ஆச்சரியத்தோடு பார்க்க... மனோகருக்கு ஜிவ்வென்று விண்ணில் பறப்பது போன்ற உல்லாசம். மனம் மகிழ்ச்சியால் துள்ளித் துள்ளிக் குதித்தது.

வண்டி ஜீயபுரம் ஸ்டேஷன் வந்ததும், அந்த ஒன்பது பேரும் எழுந்து நின்று கொண்டனர்.

''மனோஜ். எங்களுக்கு இன்றைக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. லாலா பேட்டைக்குக் கபடி மேட்சுக்காகப் போய் ஜெயித்து விட்டு வருகிறோம். வரும் போது பிரபல சிறுவர் எழுத்தாளனான உன்னைப் பார்த்து நேரம் போனது கூடத் தெரியாமல் அளவளாவினோம். இந்தச் சந்திப்பு, மறக்க முடியாத சந்திப்பு. எங்களை ஞாபகம் வைத்துக் கொள். வருகிறோம்'' என்று அவனிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு இறங்கினர்.

வண்டி புறப்பட்டுக் கண்ணுக்கு மறையும் வரை கையை அசைத்து டாடா காண்பித்தனர்.

வெளிப் பக்கத்திலிருந்து பார்வையை வண்டிக்குள் செலுத்தினான் மனோகர். முதலில் பார்த்த கண்ணாடிக்காரரர், கட்டம் போட்ட சட்டை அணிந்த பையன், அவன் மூன்று பேர் மட்டும்தான் அதில் இருந்தனர். இத்தனை நேரம், தான் பேசியதை நிச்சயம் அவர்கள் கேட்டிருப்பார்கள் என்று அவனுக்குத் தெரியும். எனவே, அந்தக் கட்டம் போட்ட சட்டை அணிந்த மாணவன் அவனிடம் வண்ண மலரைத் தரும்படி கேட்டவுடன்,

''ஓ! நான் எழுதிய முதல் பரிசு பெற்ற கதையை அவர்கள் படிக்கக் கேட்ட நீ, திரும்பவும் ஒருமுறை படிக்க ஆசைப்படுகிறாயா! சரி, படி படி'' என்று பெருமை பொங்கக் கூறியபடி புத்தகத்தை அவனிடம் கொடுத்தான்.

அவனும் சிரித்துக் கொண்டே புத்தகத்தை வாங்கிப் பிரித்துப் படிக்கலானான்.

ஆயிற்று. வண்டி இதோ... திருச்சிராப்பள்ளிக் கோட்டையை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்தக் கட்டம் போட்ட சட்டை அணிந்த பையன், ''தேங்ஸ்'' என்று கூறியபடி புத்தகத்தை மனோகரிடம் திருப்பிக் கொடுத்தான்.

அவன், தன்னைப் பற்றிப் புகழ்ந்து பேசாதது மனோகருக்குச் சற்று ஏமாற்றமாகத்தான் இருந்தது.

நீண்ட பெருமூச்சை விட்டபடி வண்டி பிளாட்பாரத்தில் நின்றது.

அப்பொழுது இரண்டு மூன்று பையன்கள் அவன் வயதை ஒத்தவர்கள், ''இதோ... இதோ... இங்கே இருக்கிறான்'' என்றுகூறியபடிஅவன் இருக்கும் ரயில் பெட்டிக்குள் வேகமாக நுழைந்தனர். நேராக அந்தக் கட்டம் போட்ட சட்டை அணிந்த பையனின் அருகில் சென்று ஒருவன்,

''மனோஜ், இன்று நீ வரப் போவதாகப் போட்ட கடிதம் கிடைச்சு ரொம்பச் சந்தோஷப்பட்டோம். உன்னை வரவேற்கவே ஸ்டேஷனுக்கு வந்தோம். 'வண்ண மல'ரை வாங்கிப் பார்த்தோம். கொண்டா.. கையை முதல் பரிசு உனக்குக் கிடைச்சிருக்கே! என் அத்தை மகனான நீ பரிசு வாங்கியிருப்பது எனக்கு எத்தனை சந்தோஷமா இருக்கு தெரியுமா? இதோ... நம்ம நண்பர்கள் ராஜாவும், ரிச்சர்டும் கூட வந்திருக்காங்க உன்னை வரவேற்க'' என்றான்.

தூக்கி வாரிப் போட்டது மனோகருக்கு.

'இவனா... இந்தப் பையனா மனோஜ்! இவன் எதிரிலேயே இவனிடமே நான் தற்பெருமை அடித்துக் கொண்ட போது, ஒரு வார்த்தை கூட மறுத்துச் சொல்லாது, சண்டை போடாது, எவ்வளவு அடக்கமாக, குடத்திற்குள் இட்ட விளக்காக அமைதியாக இருந்தான்!'

ஆனால் நான்... நான்? அவன் மனம் துண்டு துண்டாகச் சிதறியது போன்ற வேதனை. மனோஜ் கோபுரத்தில் உயர்ந்து நிற்பது போலவும், தான் பாதாளத்தில் தள்ளப்படுவது போலவும் உணர்ந்தான். பூமி அப்படியே பிளந்து தன்னை விழுங்கி விடாதா என்று கூட நினைத்தான். உண்மையான மனோஜைப் பார்க்கவே வெட்கமாக இருந்தது. குற்ற உணர்வோடு தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான்.

''மனோஜ். உன் அத்தை வீட்டிற்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு கரெக்டா இரண்டு மணிக்கு வந்துடு. என் மகள் வீட்டிற்குப் போய் விட்டு நானும் சரியா இரண்டு மணிக்கு ஜங்ஷனுக்கு வந்துடறேன்'' என்று அந்தக் கண்ணாடிக்காரர் கூறினார்.

''சரிங்க சார்'' என்று அவரிடம் விடைபெற்றுக் கொண்டு மனோஜ் அவனிடமும் விடை பெற்றுக் கொண்டு இறங்கினான்.

அவன் முன்னால் தான் ஒரு புழு போல் நெளிவதாக உணர்ந்தான்.

அந்தக் கண்ணாடிக்காரர் அவனைப் பார்த்து, ''தம்பி, உன் பெயர் என்ன?'' என வினவினார்.

தயங்கியபடியே தன் பெயரைக் கூறினான் மனோகர்.

''உன் பெயரிலும், மனோஜ் பெயரிலும் ஆரம்ப இரண்டு எழுத்துக்கள் ஒன்றாக இருக்கறதாலே, நீ மனோஜாக நடிச்சியா?''

''...............''

''ஏன் பேச மாட்டேங்கறே? மனோகர்! பழங்கள் நிரம்பிய மரக் கிளைகளைப் பார்த்திருக்கிறாயா? நெல் மணிகள் நிறையப் பெற்ற கதிர்களைப் பார்த்திருக்கிறாயா? அவைகள் செருக்கோடு தலை நிமிர்ந்து நில்லாமல், எவ்வளவு பணிவோடு தலைவணங்கி இருக்கின்றன. உன்னைப் போல எத்தனையோ மாண

தெரியாது போனால் தெரிந்து கொள்ளலாமே!

* இந்தியாவில் முதல் தபால் தலை 1852—இல் சிந்து மாகாணத்தில் வெளியிடப்பட்டது. 18.2.1911 — ஆம் ஆண்டு முதன் முதல் விமானத்தில் தபால் எடுத்துச் செல்லப்பட்டது. ஆண்டு தோறும் 975 கோடித் தபால்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. 1250 கோடிக்கு மணியார்டர்கள் செய்யப்படுகின்றது. வெளிநாடுகளுக்கு 7.25 லட்சம் பார்சல்கள் அனுப்பப்படுகின்றன. நாடு முழுவதும் பரவியுள்ள நமது தபால் துறை எட்டரை லட்சம் பேருக்கு வேலை கொடுத்துள்ளது!

* ஆரோக்கியமாக இருக்கும் புறா தூங்கவே தூங்காது. பலவீனமான, நோயுற்ற புறாக்கள் மட்டுமே தூங்கும்.

* இந்தியாவிலேயே பின்கோட் எண்கள் அதிகம் பெற்றுள்ள நகரம் சென்னைதான். 600001 முதல் 600098 எண்கள் சென்னை நகருக்கு உரியவை. இரண்டாம் இடம் பம்பாய் நகர். 400001 முதல் 400093 முடிய உள்ளது. மூன்றாம் இடம் கல்கத்தா — 700001 — 700071 வரை. நான்காவது தில்லி — 110001 முதல் 110062 வரை.

* இத்தாலி நாணயத்தின் பெயர் லிரா. சிலி நாட்டு நாணயத்தின் பெயர் எஸ்குடோ.

* கலிபோர்னியாவிலுள்ள 'ரெட்வுட்' என்ற மரம்தான் உலகிலேயே மிகப் பெரிய மரம்.

* எவரெஸ்ட் சிகரத்தின் மீது முதன் முதலில் ஏறிச் சாதனை புரிந்த பெண்மணி, ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 'ஜுன்க் கோதபே' என்பவர்தான். 1975 — இல் இச்சாதனை புரிந்த முதல் பெண்மணி இவரே.

* உலகிலேயே மிகப் பெரிய குகைகள் வடமேற்கு கென்டகியில் உள்ளது. இங்கு பூமிக்குள் நூற்றுக்கணக்கான மைல்கள் நீளமுள்ள குகைகள் உள்ளன.

* வெடி செய்யும் கலைக்குப் 'பைரோடெக்னிக்' என்று பெயர்.

* பிரான்ஸின் தேசிய மலர் லில்லி.

* கஸ்தூரி மான்களுக்குக் கொம்புகள் கிடையாது. கோரைப் பற்கள் உண்டு.

வர்கள் கூசாமல் பொய்களை அள்ளி வீசித் தற்பெருமை அடித்துக் கொள்வதைப் பார்த்திருக்கிறேன். மாணவர்களுக்கு, படிப்பு மட்டும் இருந்தால் போதாது. உண்மை பேசும் பண்பும் பணிவும் தேவை.''

மனோகர் அவர் கூறுவதைக் கவனத்தோடு கேட்டுக் கொண்டிருந்தான்.

''மனோகர், மனோஜ் என் வகுப்பு மாணவன். எத்தனை அடக்கத்துடன் இருக்கிறான் பார்த்தாயா? அவன் நடிப்புத் துறையிலும் கெட்டிக்காரன். வானொலி நிலையத்திலிருந்து சிறுவர்களுக்கான டிராமாவில் நடிக்க அவனுக்கு அழைப்பு வந்திருக்கு. அவனுக்குத் துணையாகத்தான் நான் வந்திருக்கேன். ஒன்றை மட்டும் மறக்காதே. 'தற்பெருமை, கர்வம், பொய்மை, வறட்டு ஜம்பம் – இவை உன் வாழ்க்கைப் பாதையின் முட்கள். ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்து விடு. இன்னொன்று. மலரின் மணத்தை அதன் அழகை அதன் தேனின் இனிமையை மற்றவர்கள் தான் ரசித்துப் புகழ்கிறார்களேயொழிய, மலர் தன்னைப் பற்றித் தானே விளம்பரம் செய்து கொள்வதில்லை'' என்று கூறி முடித்தார்.

''ஸார், நீங்கள் கூறியதன் பொருளை உணர்ந்து கொண்டேன். என்னை மன்னித்து விடுங்கள். இந்தச் சம்பவம் எனக்கு நல்ல புத்தியைப் புகட்டி விட்டது. நானும் மனோஜைப் போல அடக்கமுள்ளவனாக இருப்பேன். உண்மையாகவே உழைத்து, நன்கு படித்து வாழ்க்கையில் முன்னேறப் பாடுபடுவேன். என் அம்மா சொல்றது போல கூத்தாடும் குறை குடமாக இல்லாமல் நிறைகுடமாக இருப்பேன். இது உறுதி!'' என்றான் உண்மையிலேயே மனம் திருந்திய மனோகர்.

---

* பழங்கால ஒலிம்பிக்கில் தேரோட்டம் ஒரு முக்கிய போட்டியாக இருந்தது. இதில் பல அரச வம்சத்தினரும் கலந்து கொண்டனர்.

* அடுத்த ஒலிம்பிக் ஸ்பெயின் நாட்டின் பெர்ஸலோனியா நகரில் 1992 – ஆம் ஆண்டு நடைபெறவிருக்கிறது.

* ரோமானிய யுத்தக் கடவுளின் பெயர் மார்ஸ்.

* அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1929—இல் நிறுவப்பட்டது.

* நில நடுக்கத்தைப் (பூகம்பம்) பதிவு செய்யும் கருவியின் பெயர் சீஸ்மோ கிராப்.

* முதல் ஞானபீடப் பரிசு பெற்றவர் மகாகவி சங்கர குருப்.


* குரங்குகளிலேயே சிம்பன்ஸி குரங்குகள்தான் மிகவும் புத்திசாலித்தனமானவை. சொல்லிக் கொடுப்பதை நன்றாகப் புரிந்து கொண்டு விரைவில் அதன்படியே செயலாற்றும் திறன் கொண்டவை.

* ஒலிம்பிக் பந்தயங்களில் ஆரம்ப தினத்தன்று போட்டியில் கலந்து கொள்ளும் நாடுகளின் அணிவகுப்பு நடைபெறும் போது அந்த அணிவகுப்பில் எப்போதுமே கிரீஸ் நாடுதான் தலைமை தாங்கும். ஏனெனில் ஒலிம்பிக் பந்தயங்களை ஆரம்பித்து வைத்தது கிரீஸ் நாடு என்பதால் அளிக்கப்படும் கௌரவமாகும். அதுபோலவே ஒலிம்பிக் பந்தயங்களை ஏற்று நடத்தும் நாடு அணிவகுப்பின் கடைசியில் வரவேண்டுமென்பது மரபாகும்.

* உலகத்திலேயே முதல் புகை வண்டி இங்கிலாந்தில் ஸ்டாக்டனுக்கும் டார்லிங்டனுக்கும் இடையில் 1825 – ஆம் ஆண்டு 38 ரயில் பெட்டிகளுடனும், பயணிகளுடனும், சரக்குகளுடனும் ஓடியது.

* குங்குமப் பூச் செடியை ஒரு தடவை பயிர் செய்து விட்டால் பிறகு 14 ஆண்டுகள் வரை அதைக் கவனிக்க வேண்டியதில்லை. பழைய செடிகள் காய்ந்துவிடப் புதிய செடிகள் தாமாகவே தோன்றி விடுகின்றன.

தொகுப்பு: எஸ். விஜயா சீனிவாசன்.



ஜார்ஜ்



குழந்தைகளே! அமெரிக்கா கண்டத்தை முதன்முதலில் கண்டுபிடித்தவர் 'கொலம்பஸ்.' இது உங்களுக்குத் தெரியும் அல்லவா? அவர் அதை இந்தியா என்று நினைத்தார். எனவேதான், அங்குள்ள தீவுகள், இன்றும் கூட, 'மேற்கு இந்தியத் தீவுகள்' எனப்படுகின்றன. கிரிக்கெட் ஆடுவார்களே! அதே 'வெஸ்ட் இண்டீஸ்' தான்.

பிற்பாடு அங்கு சென்ற 'அமெரிக்கோ வெஸ்புஸி' என்பவர், 'அது இந்தியா அல்ல; புதிய கண்டம்' என்பதை அறிந்து சொன்னார். அவர் பெயராலேயே, அது இன்று அமெரிக்கா எனப்படுகிறது. அக்கண்டம், இரு பெரும் நிலப்பரப்புக்களைக் கொண்டது. ஒன்று வட அமெரிக்கா. மற்றொன்று தென் அமெரிக்கா.

வட அமெரிக்காவின் தென் பகுதி தான், இன்று பொதுவாக 'அமெரிக்கா' எனப்படுகிறது. அதன் பெயர் உண்மையில் 'அமெரிக்க ஐக்கிய நாடுகள்'. ஏன் தெரியுமா?

அப்பகுதியின் கிழக்கில், அட்லாண்டிக் பெருங்கடல் ஓரமாக, பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, 13 குடியேற்றங்கள் ஏற்பட்டன. அவர்கள் இங்கிலாந்திலிருந்து சென்று குடியேறினார்கள். நாளடைவில், அவர்கள் தாய்நாடு இங்கிலாந்தின் பிடியிலிருந்து விடுபட்டு, ஒரே நாடாக ஐக்கியப்பட்டனர். அதுதான் 'அமெரிக்க ஐக்கிய நாடுகள்.' அதாவது 'அமெரிக்கா.' ஆங்கிலத்தில் United States of America. சுருக்கமாக U.S.A. அது மெல்ல விரிவடைந்து, இன்றுள்ள அளவுக்குப் பெரிய நாடாகியுள்ளது. அதெல்லாம் தனிக் கதை. உங்கள் வரலாற்றுப் பாட ஆசிரியரைக் கேளுங்கள், சொல்வார். தற்போது அமெரிக்காவில்



புஷ்

ஜானகிமணாளன்

50 மாநிலங்கள் உள்ளன.

அமெரிக்கா, உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு. அதன் ஆட்சித் தலைவர் ஜனாதிபதி. முதல் ஜனாதிபதி 'ஜார்ஜ் வாஷிங்டன்'. முதல் ஜனாதிபதி தேர்தல் 1788 நவம்பரில் நடந்தது. சரியாக 200 ஆண்டுகளாகி விட்டன. ஒரு ஜனாதிபதியின் பதவிக் காலம் நான்கு ஆண்டுகள். இதுவரையில், இந்த 200 ஆண்டுகளில் 50 தடவைகள் ஜனாதிபதி தேர்தல் நடந்து விட்டது. 1988 நவம்பரில் நடந்தது 51—வது. இதுவரையில் 40 பேர் அப்பதவி வகித்துவிட்டனர். புதிய ஜனாதிபதி 'ஜார்ஜ் புஷ்' 41 — ஆவது நபர். இதோ அவருடைய கதை — 'ஜார்ஜ் புஷ்'ஷின் கதை:

ஜார்ஜ் புஷ் மிகப் பெரும் பணக்காரர். அவரது சொத்தின் மதிப்பு பல லட்சம் டாலர்கள். அதுமட்டுமல்ல. அவரது குடும்பமும் மிகப் பெரியது. தந்தை இல்லை. தாய் இருக்கிறார். புஷ்ஷுக்கு நான்கு மகன்கள். பெயர்— ஜார்ஜ், ஜெப், நெய்ல், மர்வின் என்பன. ஒரே மகள். டோராத்தி என்று பெயர். மற்றொரு மகள் ராபின். 1953 — இல் லூகோமியா என்ற வியாதியால் மூன்றரை வயதில் இறந்து விட்டாள். இப்போது ஜார்ஜ் புஷ்ஷுக்கு எத்தனை பேரக் குழந்தைகள் தெரியுமா? உங்களைப்போல் பத்துப் பேர்!

'புஷ்'ஷின் முழுப் பெயர் 'ஜார்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ்! பிறப்பு 1924 ஜூன் 12. இடம் மாசசுசெட்சில் உள்ள மில்டன். தந்தை பிரஸ்காட் புஷ். தாய் டோராத்தி வாக்கர் புஷ்.

''மனிதனுக்குக் கடமைதான் முக்கியம். அதைச் செய்து பெரும் சாதனைகளைப் புரிய வேண்டும். சமுதாயம் நம்மை உயர்த்துகிறது. நல்ல நிலையில் வைக்கிறது. பிரதி உபகாரமாக நாம் சமுதாயத்துக்குத் தொண்டு செய்ய வேண்டும்' — இவற்றை புஷ், தன் தந்தையிடமிருந்து கற்றுக் கொண்டார். தாயிடமிருந்து வாழ்க்கையை எப்படி மகிழ்ச்சியாகக் கழிப்பது என்பதைக் கற்றார். இவரது தந்தை முதலில் ஒரு தொழிலதிபர். பிற்பாடு அரசியலுக்கு வந்தார். 10 ஆண்டுகள் செனட் சபை உறுப்பினராகவும், பிறகு, குடியரசுக் கட்சியின் ஐசன்ஹவர் பிரிவின் ஒரு தலைவராகவும் இருந்தார். புஷ்ஷும் தந்தை வழியிலேயே அரசியலுக்கு வந்துள்ளார்.



அவரது பள்ளிப் படிப்பு பிலிப்ஸ் அகாடமியில், அது 'அன்டோவர்' என்ற இடத்திலுள்ள, தங்கிப் படிக்கும் பள்ளியாகும். அப்போது அவர் சுறுசுறுப்பான திறமைசாலி மாணவன். உயர் வகுப்புகளின் மாணவத் தலைவர். மாணவர் சங்கச் செயலாளர். அத்துடன் கால்பந்து மற்றும் பேஸ்பால் அணியின் காப்டனும் கூட!

இரண்டாம் உலகப் போர் சமயத்தில், புஷ் உயர் வகுப்பில் படித்துக்

கொண்டிருந்தார். 1942 ஜூன் 13. அவருக்குச் சரியாக 18 வயது. கல்லூரிப் படிப்புக்குப் பின் அன்றுதான் அவர் கடற்படையில் சேர்ந்தார். உடனே விமானப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டார். கடற்படையில், அச்சமயம் இவர்தான் மிகவும் வயது குறைந்த விமானி. பசிபிக் பெருங்கடலில் 'சான் ஜசிண்டோ' என்ற விமானம் தாங்கிக் கப்பலில், மூவர் பயணம் செய்யும் ஒற்றை எஞ்சின் விமானம் ஒன்றின் காப்டனாக இருந்தார்.

1944 செப்டம்பர் 2. நேசப்படைகள் ஜப்பானை நெருங்கின. 'போனின்' என்ற தீவுத் தொடரில், 'ச்சிச்சி ஜிம்' தீவைத் தாக்கும் செயல். புஷ் விமானத்தில் எதிரியின் தகவல் மையத்தைத் தாக்கி அழிக்கச் சென்றார். அப்போது எதிரியின் குண்டு, இவர் விமானத்தைத் தாக்கியது. அது தீப்பற்றியது. விமானி அறையிலிருந்து கடும் புகை மூட்டம். புஷ் கலங்கவில்லை. குறிப்பிட்ட இலக்கில் 225 கிலோ குண்டுகளை வீசி, அதை அழித்தார். திரும்பும் போது, மற்ற இருவரையும் கடலில் குதிக்கச் சொல்லிவிட்டுப் பிறகு தாமும் குதித்தார். இவரது பாராசூட் விமானத்தின் வாலில் சிக்கிக் கொண்டது. இவர் மட்டும் 'பொத்'தென்று கடலில் விழுந்தார். நல்ல வேளை. அவருக்கு முன்பே, பாராசூட்டில் இருந்த, உயிர் காக்கும் ரப்பர் வளையம் கடலில் விழுந்திருந்தது. புஷ் அதைப் பற்றிக் கொண்டு நீந்தினார். மற்ற இருவரும் பிழைக்கவில்லை. உடனே 'ஃபினபேக்' என்ற அமெரிக்க நீர் மூழ்கிக் கப்பல் மேலே வந்து, அவரை ஏற்றிக் கொண்டு, 'பேர்ள்' என்ற ஹவாய்த் தீவிலுள்ள துறைமுகத்தில் கொண்டு வந்து சேர்த்தது. இந்தத் தீரச் செயலுக்காகப் பிற்பாடு அவருக்கு 'ஃபிளையிங் கிராஸ்' சிறப்பு விருது வழங்கப்பட்டது.



அவர் நினைத்திருந்தால், அத்துடன் போரிலிருந்து விலகிக் கொண்டு, நாடு திரும்பியிருக்கலாம். புஷ் அப்படிச் செய்யவில்லை. சில நாட்கள் ஓய்வுக்குப் பின், மீண்டும் 'சான் ஜசிண்டோ' சென்றுவிட்டார். அதன் பின்னரும் பல போர் முனைகளில் தீரத்துடன் தாக்குதலில் ஈடுபட்டார். 58 தடவைகள் எதிரிகளைத் தாக்கவும், 126 தடவைகள் ஆட்கள் மற்றும் தளவாடங்களைச் சுமந்து சென்றும் மொத்தம் 1228 மணி நேரம் விமானத்தில் பறந்து சாதனை புரிந்தார்.

1944 கிறிஸ்துமசுக்கு முன்னால், நாடு திரும்ப உத்தரவிடப்பட்டார். அடுத்த சில வாரங்களில் அவருக்குத் திருமணம். மணமகள் பார்பரா பியர்ஸ். ஒரு பத்திரிகை அதிபரின் மகள். புஷ் அவரை ஏற்கெனவே 1942 கிறிஸ்துமஸ் நடன நிகழ்ச்சி ஒன்றில் சந்தித்துப் பழகியிருந்தார். திருமணத்துக்குப் பிறகு, மீண்டும் போர்முனை செல்ல வேண்டும். ஆனால், அதற்குள் போர் முடிந்துவிட்டது. எனவே, புஷ் நியூஹேவலுக்குச் சென்றார். அங்கே 'யேல்' பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, இரண்டரை ஆண்டுகளில் ஒரு பட்டம் பெற்றார். அப்போது அவர் தலைசிறந்த மாணவர். அத்துடன் பேஸ் பால் அணியின் காப்டனாக இருந்து, இரு தடவை தேசிய இறுதி ஆட்டத்

தில் ஆடினார்.

படிப்புக்குப்பின், புஷ் தம் மனைவி, குழந்தையுடன், டெக்சாஸில் உள்ள ஒடிஸ்ஸாவுக்குச் சென்றார். 1948 — இல், அங்கு ஓர் எண்ணெய் வயலின் விநியோகத் துறையில் எழுத்தரானார். பின்னர், வேறு சிலருடன் கூட்டுச் சேர்ந்து, சில எண்ணெய் எடுக்கும் நிறுவனங்களைத் துவக்கினார். 1959 — இல் ஹூஸ்டன் சென்று, ஆழ்கடல் எண்ணெய்க் கிணறு தோண்டும் ஒரு நிறுவனத்தின் தலைவரானார்.

பின்னர், புஷ் தம் தந்தை வழியில் அரசியல்வாதியானார். 1964 — இல் செனட் சபைக்குப் போட்டியிட்டார். ஆனால் ஜனநாயகக் கட்சி செனட்டர் 'ரால்ஃப்' யார்பரோ'விடம் தோற்றார். 1966 — இல் ஹூஸ்டனிலிருந்து மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினரானார். 68 — லும் அதே வெற்றி. 1970 — இல் செனட் சபைக்குப் போட்டியிட விரும்பினார். ஆனால், சூழ்நிலை அவருக்கு எந்தப் பதவியும் கிடைக்காமல் செய்து விட்டது

1970 டிசம்பரில் ஜனாதிபதி ரிச்சர்டு நிக்சன், அவரை ஐ. நா. சபைக்கு அமெரிக்கப் பிரதிநிதியாக அனுப்பினார். 73 வரை அப்பதவியிலிருந்தார். 1972 — இல் நிக்சன் இரண்டாம் தடவையாக ஜனாதிபதியானார். புஷ், குடியரசுக் கட்சி தேசிய கமிட்டியின் தலைவராக்கப் பட்டார். கட்சியில் அவரது செல்வாக்கு உயர நல்ல வாய்ப்பு. ஆனால், அதற்குள் நிக்சன் மீது ஊழல் குற்றச்சாட்டு. 'வாட்டர் கேட் ஊழல்' எனப் பெயர். நிக்சன் ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்துவிட்டார். பதிலுக்கு 'ஜெரால்டு ஃபோர்டு' ஜனாதிபதியானார்.

ஃபோர்டின் காலத்திலும் ஜார்ஜ் புஷ் பல பணிகளை ஏற்றுச் செய்தார். சீனாவுக்கு அமெரிக்கப் பிரதிநிதியாகச் சென்றார். அங்கே ஓராண்டு காலம் தங்கி, இரு நாடுகளுக்கும் இடையே நட்பு மற்றும் நன்மதிப்புச் சூழ்நிலை உருவாகப் பாடுபட்டார். 1976, 77 ஆண்டுகளில் அமெரிக்க உளவு ஸ்தாபன மத்தியப் பிரிவு டைரக்டராக இருந்தார்.


சித்திரப் புதிர் — 36

விடைகள் :

1. ஸ்ரீலங்கா,
2. பூடான்,
3. குயில்,
4. எகிப்து,
5. புகையிலை.

1976 ஜனாதிபதி தேர்தலில் ஃபோர்டு தோற்றுப் போனார். ஜனநாயகக் கட்சியின் ஜிம்மி கார்ட்டர் ஜனாதிபதியானார். உடனேயே புஷ், 1980 தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட முடிவு செய்து, அதற்கான ஆயத்தங்களில் ஈடுபடலானார். துவக்க நிலைத் தேர்தல்களில் வெற்றியும் பெற்று விட்டார். எனினும், திடீரென்று, 1980 மே மாதம், ரோனால்டு ரீகனுக்காக, ஜனாதிபதி தேர்தலிலிருந்து புஷ் விலகிக் கொண்டார். தமது ஆதரவாளர்களையும் ரீகனை ஆதரிக்கச் சொன்னார். ஜூலையில் கட்சியின் தேசிய கன்வென்ஷன். அதில் ரீகன், இவரைத் துணை ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுமாறு கேட்டுக் கொண்டு அறிவிப்புச் செய்தார். 1980 நவம்பரில் தேர்தல். ரீகன் ஜனாதிபதியானார். புஷ் துணை ஜனாதிபதியானார். அடுத்த 1984 நவம்டர் தேர்தலிலும் இருவரும் அதே பதவிகளைப் பெற்றனர்.

1980 — 88 ஆண்டுகளில், ரீகனின் முக்கிய ஆலோசகராகவே விளங்கினார் துணை ஜனாதிபதி புஷ். நிர்வாகச் சீரமைப்பு, சர்வதேசப் பயங்கரவாத ஒழிப்பு, போதைப் பொருள் கடத்தல் தடுப்பு ஆகிய பணிகளுக்கு புஷ் தலைமை ஏற்றார். 1981 — இல் ரீகனைக் கொல்ல ஒரு முயற்சி நடந்தது. உயிர் தப்பினார். எனினும் காயம்



ஏற்பட்டது. அவருக்கு ஓய்வு தேவைப்பட்டது. அவரது பணிகளை ஏற்றுச் செய்த புஷ், நல்ல நிர்வாகி என்ற பாராட்டைப் பெற்றார். 1984 — இல், அமெரிக்க வெளியுறவுக் கொள்கை உருவாக்கக் குழுத் தலைவராக, ஜார்ஜ் புஷ் 74 நாடுகளுக்குப் பயணம் செய்தார். அப்போது, இந்தியாவுக்கும் வந்தார். அதே ஆண்டு ஜெனிவாவில் ஆயுதக் குறைப்பு மாநாடு. புஷ் அதில் தம் நாட்டின் ரசாயன ஆயுதக் குறைப்புத் திட்டத்தை முன் வைத்தார். ஆப்பிரிக்க நாடுகளில் வறட்சியும், பஞ்சமும் நிலவின. 1985 மார்ச்சில் மாலி, நைஜர், சூடான் ஆகிய நாடுகளுக்கு புஷ் நேரில் சென்று, அமெரிக்க உதவிக்கு உறுதி செய்து வந்தார்.

அமெரிக்க நாட்டில் ஒரு நபர் இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதியாக இருக்க முடியாது. எனவே, ரொனால்டு ரீகனுக்குப் பிறகு, 1988 நவம்பர் தேர்தலில், ஜார்ஜ் புஷ் போட்டியிட்டு, அமெரிக்கப் புதிய ஜனாதிபதியாகியுள்ளார்.

ஒருவர், துணை ஜனாதிபதியாக இருந்து கொண்டே, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெற்று ஜனாதிபதியாவது, 1836 — க்குப் பிறகு, இப்போதுதான் நடந்துள்ளது. புஷ்ஷிடம் இது ஒரு சிறப்பு.

சரி, குழந்தைகளே! புஷ் ஜனாதிபதி ஆகிவிட்டார். அவருடன் இணைந்து போட்டியிட்டுத் துணை ஜனாதிபதியாகியிருப்பது யார் என்று அறிய ஆவலாக உள்ளது அல்லவா?

அவர் பெயர் டான் குவெய்லி! 41 வயது. இவரிடமும் ஒரு சிறப்பு உண்டு. என்ன தெரியுமா? இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு பிறந்து, அமெரிக்காவின் இத்தனை பெரிய தேசியப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் நபர் குவெய்லிதான்.

துணை ஜனாதிபதியாக இருந்த போதே, ஜார்ஜ் புஷ் பல அற்புதப் பணிகளைச் செம்மையாகச் செய்து முடித்தவர். இப்போது புதிய ஜனாதிபதியாகியுள்ளார். மேலும், பல நற்பணிகளை அவரால் செய்ய முடியும். இல்லையா, குழந்தைகளே!



வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள்

9

— பூவலூர் முத்து

சைக்கிள் மணியின் ஒலி கேட்டது. விமலானந்தம் வெளியே வந்தார்.

பள்ளிக்கூடத்துப் பணியாள் கையில் ஒரு கடிதத்தோடு நின்றுகொண்டிருந்தான்.

''என்னப்பா, பள்ளிக் கூடத்திலே ஏதாவது விழாவா?''

''விழா எதுவும் இல்லேங்க... வேறு ஏதோ முக்கியமான விஷயம். தலைமை ஆசிரியர் உடனே உங்களிடம் இதைக் கொடுத்து விட்டு வரச் சொன்னார்.''

'முக்கியமான விஷயமா?' அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

''சரி, இப்படி கொடு!''

கடிதத்தைக் கொடுத்து விட்டு அவன் புறப்பட்டுச் சென்றான்.

உட்கார்ந்து படிப்பதற்கு அவருடைய மனம் அமைதியாக இல்லை; நின்று கொண்டே உறையைப் பிரித்தார். படித்தார்:

''திருவாளர் விமலானந்தம் அவர்களுக்கு, உங்கள் பையன் வேலப்பனின் முன்னேற்றம் குறித்துப் பேச வேண்டியிருப்பதால் தாங்கள் அன்பு கூர்ந்து பள்ளிக்கு வருமாறு வேண்டுகிறோம்.''

'என்னவோ ஏதோ' என்று பயந்தவர் 'முன்னேற்றம் குறித்துப் பேச' என்றதும் தெளிவடைந்து உட்கார்ந்தார்; மனைவியை அழைத்தார்.

''ஆண்டாள்! பள்ளிக் கூடத்திலிருந்து இத்தனை நாளாகக் கடிதம் எதுவும் வரவில்லையே என்று வியப்பில் ஆழ்ந்திருந்தேன். இதோ வந்து விட்டது. வேலப்பன் ஏதோ செய்திருக்கிறான். போய் அதைப் பூசி மெழுகிவிட்டு வர வேண்டும்.''

''அவன் செய்தது என்னவென்று தெரியாமலே பூசி மெழுகப் போகிறேன் என்கிறீர்களே... இது நன்றாக இருக்கிறதா?''

''இதில் தெரிந்து கொள்ள என்ன

இருக்கிறது? முன்பு அவன் படித்த பள்ளிக் கூடத்திலிருந்து வாரப் பத்திரிகை போல் வாரந்தோறும் புகார் வந்து கொண்டு இருந்ததே... இங்கும் அதே போல் வேலைகளைச் செய்யத் தொடங்கியிருப்பான்.'' சிரித்துக் கொண்டே சொன்னார் அவர்.

''வேதனை தரக்கூடிய விஷயம் இது. சிரிக்கிறீர்களே...''

''நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறாய்?''

''அவன் என்ன செய்தான் என்பதை அமைதியாக இருந்து கேளுங்கள். தவறு அவன் பக்கம் இருந்தால் வீண் விவாதம் செய்யாதீர்கள். தவற்றைத் தவறு என்று ஒத்துக் கொள்ளுங்கள். அவன் திருந்துவதற்கு அவர்கள் சொல்லும் வழிகளைக் கேளுங்கள்.''

அவருக்குப் பழக்கமில்லாத — கடினமான— விஷயத்தை அவள் சொன்னாள்.

''ஒரு பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியரிடம் பேச இவ்வளவு முன்னேற்பாடா? அவர் என்ன அமைச்சரா?''

கிண்டல் அவருடைய சொற்களில் தொனித்தது.

''அமைச்சரையும் உருவாக்குகிறவர் ஒரு பள்ளி ஆசிரியர்தான். அவருக்கு உரிய மரியாதையைக் கொடுக்க எப்போதும் மறக்காதீர்கள். சில பெரிய மனிதர்கள் அவர்களை 'ஏணி... தோணி' என்று புகழ்ந்துவிட்டு மறந்து விடுகிறார்கள். நாமோ அவர்களை மிகச் சாதாரணமானவர்களாக நினைக்கிறோம். புறக்கணிக்கிறோம். தலைமை ஆசிரியர் உண்மையைத்தான் சொல்வார். நன்மையைத்தான் கருதுவார். நம் பிள்ளையால் பள்ளிக் கூடத்துக்கு வீண் தொல்லை வருகிறதென்றால் 'டி.சி.'யைப் பெற்றுக் கொள்வோம். துன்பமெல்லாம் நம்மோடு போகட்டும்.''

அவளுடைய குரல், உள்ளத்தின் ஆழ்ந்த வேதனையை வெளிப்படுத்தியது.

''டி.சி. வாங்கிக் கொண்டால் நம் கௌரவம் என்னாவது?''

''பள்ளியில் அவன் நினைத்தபடி நடந்து கொண்டால் பள்ளியின் பெருமை என்னாவது?''

''நம் பையனை விடப் பள்ளிக் கூடம் உனக்குப் பெரிதாகப் போய் விட்டதா?''

''அந்தப் பள்ளிக்கூடம் நல்ல பெயரோடு வளர்ந்து வருகிறது. நம் பகுதியில் இப்படி ஒரு பள்ளிக் கூடம் இருப்பது நமக்கும் பெருமைதானே? நம் பையன் பூவாகவும் இல்லாமல் அதைக் கட்டும் நாராகவும் இல்லாமல் பூ மாலையைப் பிய்த்துப் போடும் குரங்காக இருந்தால் எப்படிச் சகித்துக் கொள்வது? எப்படி அனுதாபம் காட்டுவது?''

ஆண்டாளின் நடுநிலையான உள்ளம் அறத்தைச் சார்ந்து நின்றது. நியாயத்தை எடுத்துச் சொன்னது.



ஆசைத்தம்பியின் தாய் சங்கரி நிம்மதியில்லாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

பள்ளிக் கூடத்தை விட — பிள்ளையின் படிப்பை விட—தம்பி சித்தலிங்கத்தின் வயல் அறுவடைதான் இப்போது அவளுக்கு மிகவும் முக்கியமாகத் தெரிந்தது. அவன் அவளுடைய தங்கச் சங்கிலியை வாங்கி அடகு வைத்திருக்கிறான். நெல்லைப் போட்டு நகையைத் திருப்பித் தருவதாகக் கூறியிருக்கிறான். சங்கிலி வந்தால்தான் அவள் மறுபடி ஒழுங்காக மூச்சு விடுவாள்!

அறுவடைக்காகப் போன ஆசைத்தம்பி, மாமனுக்குச் சாப்பாடு கொண்டு போய்க் கொடுத்த நேரம் போக மீதி நேரத்தில் அங்கிருந்த தென்னந் தோப்பையும் மாந் தோப்பையும் சுற்றி வந்தான்.

அங்கு வந்த சங்கரி, ''ஆசைத் தம்பி, அவசரப்பட்டு ஊருக்கு வந்து விடாதே... எல்லா வேலையும் முடிந்த பின்னால் வா. நாம் செய்த உதவியை நினைத்தாவது மாமன் நகையைத் திருப்பித் தருவான்'' என்றாள்.

''பள்ளிக் கூடத்திலே எத்தனை பாடம் நடத்தினார்களோ?'' வருத்தப்படுகிறவன் போல நடித்தான். போனால் வேலப்பனைப் பார்க்கலாம் என்பது அவன் எண்ணம். பாடம் போவதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை.

''பாடம்தானே... வேலை முடிந்து வந்த பின்னால் எல்லாவற்றையும் படித்துக் கொள்ளலாம். கவலைப் படாதே...''



இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் ஒருவர், "ஐயா, திருமால் ஏன் பல அவதாரங்கள் எடுத்து உலகைக் காப்பாற்ற வேண்டும்? ஒரே ஒருவராக இருந்து உலகைக் காக்கக் கூடாதா?" என்று வினவினார்.

அதற்கு இராமகிருஷ்ணர், "நீங்கள் ஒரே ஆள்தானே! தாங்கள் தாய்க்கு மகனாகவும், மகனுக்குத் தந்தையாகவும், பாட்டிக்குப் பேரனாகவும், பேரனுக்குத் தாத்தாவாகவும், தங்கைக்கு மைத்துனனாகவும், மனைவிக்குக் கணவராகவும் இருக்கவில்லையா? அப்படித்தான் விஷ்ணுவும் அவதாரங்கள் எடுத்தார்" என்று பதில் அருளினார்.

— கிருபானந்தவாரியாரின் உரையிலிருந்து.

— த. ந. நாகேந்திரன் (20,079)

சொல்லி விட்டு, பேருந்தைப் பிடிக்க விரைந்து கொண்டிருந்தாள் அவள்.

பள்ளியிலிருந்து வீராசாமிக்கும் ஒரு கடிதம் வந்திருந்தது.

அறுவடைக்கு ஆசைத்தம்பியை அனுப்பிய பின் அவனைப் பற்றிய நினைவே அவருக்கில்லை. தலைமை ஆசிரியரின் கடிதம் இப்போது அவனைப் பற்றி நினைக்கவும் சிந்திக்கவும் வைத்து விட்டது.

சங்கரியை அழைத்தார்; கடிதத்தைக் காட்டினார்.

"என்ன நடந்து போய்விட்டதென்று அவர் கடிதம் அனுப்பியிருக்கிறார்? ஊர் உலகத்தில் எந்தப் பிள்ளையும் செய்யாத அநியாயத்தை நம் பிள்ளை செய்து விட்டானா?"

கோபம் அவளுடைய மூக்கு முனையில் நின்றது.

"அவன் முன்பு படித்த பள்ளிக் கூடத்துத் தலைமை ஆசிரியரும் இப்படித்தான் அலட்டிக்கொண்டார். இப்போது இவர் ஆரம்பித்து விட்டார்..."

"நீங்கள் ஏன் குழம்புகிறீர்கள்? வழக்கமாகப் போடுவார்களே பெற்றோர் சங்கக்கூட்டம் அதுவாகத்தான் இருக்கும். போய் வாருங்கள்" என்று தெளிவாகப் பேசினாள் அவள்.

'வழக்கமான கூட்டமாகத்தான் இருக்கும்' என்று அவள் சொல்லியிருந்தாலும் அவருடைய மனம் தெளிவடையவில்லை. சட்டை விஷயத்தில் அவன் நடந்து கொண்ட விதத்தை அருள்மதி கூறினாள். குழப்பம் இன்னும் மிகுதியாயிற்று.

'தலைமை ஆசிரியர் கேட்கப் போகும் ஒவ்வொரு கேள்விக்கும் என்ன பதில் சொல்லப் போகிறோமே தெரியவில்லையே!

ஸ்கூட்டர் போய்க் கொண்டிருந்தது. வழியில் 'கார்புரேட்டர்' அடைத்தது; எனவே அது குலுங்கிக் குலுங்கிப் போய்க் கொண்டிருந்தது. அவருடைய உள்ளத்தைப் போலவே!

வீராசாமி பள்ளிக் கட்டட நடைபாதையில் விமலானந்தத்தைப் பார்த்தார். அவர் கைகளைப் பின்புறமாகக் கட்டிக் கொண்டு போவதும் வருவதுமாக இருந்தார். ஸ்கூட்டரைப் பார்த்ததும் வெளியே வந்தார்.

"வாருங்கள் வீராசாமி! பையனின் 'முன்னேற்றம்' பற்றிப் பேசத்தான் நீங்களும் வந்திருக்கிறீர்களா?"

"ஆமாம். நமக்குள் எவ்வளவு ஒற்றுமை பார்த்தீர்களா?"

இருவரும் சிரித்துக் கொண்டார்கள். தலைமை ஆசிரியர் அழைப்பதாகப் பணியாள் வந்து சொன்னான். சிரிப்பு விடை பெற்றது.

அவர்களைக் கண்ட தமிழன்பனின் நினைவுகள் முன்னோக்கிச் சென்றன.

அன்று பள்ளியின் ஆண்டு விழா.

கலை நிகழ்ச்சிகள் முடிவுற்ற பின்னர் விமலானந்தம், வீராசாமி இருவரும் தமிழன்பனைச் சந்தித்தார்கள்.

"இந்தச் சீர்மிகுந்த பள்ளிக் கூடத்துக்கு நாங்கள் ஏதாவது உதவி செய்ய விரும்புகிறோம். எங்கள் வேண்டுகோளை மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்ற அவர்களுடைய பேச்சு அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

தேவையிருக்கிறதோ இல்லையோ பொருளைச் சேர்த்து வைப்போமே... குவித்து வைப்போமே... புதைத்து

வைப்போமே... அடுத்தவர் பெயரில் எழுதி வைப்போமே என்று அலையும் உலகில் தாமாக முன்வந்து உதவும் மனிதர்களும் இருக்கிறார்களா?

தியாகராஜன், பல்பீர்சிங் இன்னும் ஒருசில அன்பர்கள் நினைவுக்கு வந்தார்கள். 'எல்லா உலோகப் பொருள்களும் திடப் பொருள்கள், பாதரசம் தவிர' என்பார்களே! இவர்கள் எல்லாம் பாதரசம்! கல் மனத்தார் பலர் வாழும் உலகில் இவர்களுக்கெல்லாம் கனிந்த நெஞ்சம்!

பள்ளிக்காக இன்னது வேண்டும் என்றால் தியாகராஜன் போன்றவர்களே அதை உடனே நிறைவேற்றித் தருவார்கள்.

விமலானந்தமும் வீராசாமியும் நல்லவர்களாக இருந்தால் அவர்கள் உதவியைப் பெற்றுக் கொள்வதில் என்ன தவறு?

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்'
'கணை கொடிது யாழ்கோடு — செவ்விதாங்கன்ன
வினைபடு பாலால் கொளல்'

என்று குறள் கூறியிருக்கிறதே? அவர்களுடைய செயலை வைத்துத்தானே நாம் எதையும் முடிவு செய்ய இயலும்? உதவுவதில் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று பார்ப்போம்.

தமிழன்பன் சிந்தித்துப் பார்த்த பின், ''எங்கள் பள்ளியில் விழாக்கள், கலை நிகழ்ச்சிகள், பரிசளிப்பு நடத்துவதற்கு உதவியாகக் கூரையுடன் ஒரு மேடை கட்டிக் கொடுங்கள்'' என்றார்.

பதினைந்து நாளில் அவர் குறிப்பிட்ட மேடை உருவாகி விட்டது.

தமிழன்பன் அவர்களை மனம் திறந்து பாராட்டினார்.

பத்து நாட்கள் சென்றன.

அவர்கள் வேலப்பனையும் ஆசைத்தம்பியையும் அழைத்துக் கொண்டு வந்தார்கள்.


''புனித ஜோசப் பள்ளியில் சேர்த்திருந்தோம். இடையில் உடல்நலக் குறைவு காரணமாகச் சில நாட்கள் பள்ளிக்குப் போகவில்லை. இப்போது இந்தப் பள்ளியில் சேர்க்க விரும்புகிறோம். 'டி.சி.' வாங்கி வந்திருக்கிறோம்'' என்றார்கள்.

அவருக்கு வியப்பாக இருந்தது. சொல்லி வைத்தது போல் இருவருக்குமே உடல்நலக் குறைவா? இருந்தாலும் இருக்கலாம். உண்மை எது என்று பார்ப்போம். இடம் இருக்கிறதா... சேர்த்துக் கொள்ள இயலுமா... 'டி.சி.' வாங்கி வரலாமா என்று எதுவுமே கேட்கவில்லையே!

பெரிய மனிதர்களாகக் காட்சியளிக்கிற இவர்களுக்குப் பள்ளிக்கூட நடைமுறைகள் தெரியாதா? பிள்ளைகள் படிக்க வேண்டும் என்ற நோக்கம் நல்லதுதான். ஆனால் அவர்களுடைய வழிமுறைகள் வேறு விதமாக இருக்கின்றனவே!

சிந்தித்தார். 'ஆர்வத்தோடு' முன் வந்து மேடை கட்டிக் கொடுத்த அவர்களின் மனத்தைப் புண்படுத்த அவர் விரும்பவில்லை.

''மருத்துவச் சான்றிதழ்கள் எல்லாம் இருக்கின்றன அல்லவா? நாளை வாருங்கள்... சேர்த்துக் கொள்கிறேன்...'' என்றார்.



"இன்றைக்கு நல்ல நாள்..." என்று இழுத்தார்கள்.

"இறைவன் படைப்பில் எல்லா நாளும் நல்ல நாளே... வருந்தாதீர்கள்... நாளை வாருங்கள்" என்றார்.

ஸ்கூட்டர்கள் சீறிக் கொண்டு சென்றன.

தமிழன்பன், புனித ஜோசப் பள்ளியோடு தொடர்பு கொண்டு வேலப்பன், ஆசைத்தம்பி பற்றி விசாரித்தார். அவர்கள் நல்லவிதமாகக் கருத்துக் கூறவில்லை.

"இங்கேயும் ஒரு தண்ணீர்த் தொட்டி கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். வேறு வழியில்லாமல்தான் அவர்களைச் சேர்த்தோம். சேர்த்த பின்னர் தொல்லையடைந்து விட்டோம். நீங்கள் சற்று விழிப்பாக இருங்கள்" என்று எச்சரித்தார்கள்.

விமலானந்தமும் வீராசாமியும் மறுநாள் வந்து விட்டார்கள்.

வேலப்பன் ஒன்பதாம் வகுப்பிலும் ஆசைத்தம்பி பத்தாம் வகுப்பிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

'அவர்கள் இங்கேயாவது திருந்தி நல்ல மாணவர்களாக உருப்பெறுகிறார்களா என்று பார்ப்போம்; திருந்துவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வோம்' என்று தமிழன்பன் நினைத்தார். ஆசிரியர்களிடமும் அக்கறையோடு எடுத்துச் சொன்னார்.

"மரப்பொந்தில் இருந்த சட்டைகள் காவல்காரர் கூறிய சட்டைகளைப் போலவே இருக்கின்றன என்பதற்காக வேலப்பனையும் ஆசைத்தம்பியையும் குற்றவாளிகள் என்கிறீர்களா? உங்களுக்கு எத்தனை பூச்செடிகள், தொட்டிகள் வேண்டும்? ஏற்பாடு செய்கிறோம்."

அவர்கள் சொன்னதைக் கேட்ட தமிழன்பனுக்குக் கோபம் வந்தது. அடிப்படையான விஷயத்தை விட்டு விட்டு ஏதேதோ பேசுகிறார்களே!

கோபத்தை வெளிக்காட்டிக் காரியத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது என நினைத்து நிதானத்தைக் கடைப்பிடித்தார்.

"அங்கே தண்ணீர்த் தொட்டி... இங்கே மேடை... எல்லாம் நல்ல உதவிகள்தாம்; இல்லையென்று சொல்லவில்லை. அதற்காக, வேலப்பனும் ஆசைத்தம்பியும் செய்வதெல்லாம் நியாயம் ஆகி விடுமா? உங்கள் உதவியைப் பெற்றுக் கொண்ட காரணத்துக்காகவே நாங்கள் ஊமையாகி விட முடியுமா? அவர்களை நானும் பள்ளி ஊழியர்களும் கண்காணித்து வருகிறோம். அவர்களுடைய செயல்கள் சந்தேகத்துக்கு இடமானபடி அமைந்து வருகின்றன. ஆதாரமில்லாமல் பழி போடக் கூடாது அல்லவா? சில தடயங்கள் கிடைத்துள்ளன. உரிய நேரத்தில் உங்களுக்குத் தகவல் வரும்" என்றார்.

அதைக் கேட்டு அவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். எதுவும் பேச முடியாமல் மௌனத்தில் ஆழ்ந்தார்கள்.

"இருந்தும் அவர்களை நாங்கள் வெறுக்கவில்லை. அவர்கள் மாண்பை உயர்த்த, பண்பைப் பட்டை தீட்ட எங்களால் இயன்ற முயற்சிகளை எடுத்து வருகிறோம்.



எல்லாவற்றுக்கும் அடிப்படை கல்வி தானே... அன்பு கூர்ந்து இந்த மதிப் பெண் ஏடுகளைப் பாருங்கள்.''

வாங்கி அமைதியாகப் பார்த்தார் கள்.

அவற்றில் சிவப்பு மை நிறையச் செலவாகி இருந்தது. ஒரு பாடத்தில் கூடத் தேர்ச்சி பெறவில்லை. அதைப் பார்த்து அவர்கள் வியப்பும் அடைய வில்லை.

''இந்தப் பள்ளியில் சேர்த்து விட் டால் அவர்கள் நிச்சயம் நன்றாகப் படிப்பார்கள். நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள் என்று நினைத்துத்தான் இங்கே சேர்த்து விட்டோம்.''

அடக்கமாகப் பேசினார்கள்.

''உங்கள் நம்பிக்கைக்கும் எதிர் பார்ப்புக்கும் எங்கள் உளமார்ந்த நன்றி. எங்கள் வேலையை ஒரு தொழி லாக நினைக்காமல் எங்கள் வாழ்வா கவே நினைத்துச் செயல்படுகிறோம். பள்ளியின் மூலமாகவும் கல்வியின் மூலமாகவும் சமுதாயத்துக்கு ஏதாவது நன்மை செய்ய முடியுமா என்று அன்றாடம் சிந்திக்கிறோம்; திட்டமிடுகிறோம். நீங்களும் ஆர்வத் தோடும், அக்கறையோடும் முயன் றால் நல்ல பலன் கிடைக்கும். ஒரு நாளில் அவர்கள் பள்ளியில் இருப்பது ஆறுமணி நேரம்தான். மீதி நேரமெல் லாம் அவர்கள் எங்கே இருக்கிறார் கள், என்ன செய்கிறார்கள், யாரோடு பழகுகிறார்கள் என்று பார்ப்பது உங்கள் கடமையல் லவா?''

தமிழன்பனின் கேள்வியில் நியா யம் இருப்பதை அவர்கள் உணர்ந் தார்கள்.

''எதையும் கவனிக்க முடியாமல் எங்கள் தொழில் அமைந்து விட்டது சார்! நேரமே இல்லை சார்!''

வழக்கமான அறிக்கையை வாசித் தார்கள். ''அந்தத் தொழிலால் நீங்கள் தேடி வைக்கப் போவதெல் லாம் யாருக்காக? உங்கள் பிள்ளை களுக்காகத்தானே? அவர்களுக்கு நீங்கள் முதலில் தர வேண்டியது நற்பண்புதானே! நற்பண்பைக் கோட்டை விட்டு அவர்கள் பெறப் போகும் செல்வம் ஒரு பயனையும் அளிக்காது'' என்ற தமிழன்பன் அந்த மதிப்பெண் ஏடுகளை மறுபடி அவர்களிடம் எடுத்துக் காட்டினார்.

''இவற்றில் உள்ள கையெழுத்துக் கள் நீங்கள் போட்டவைதானா? நன் றாகப் பாருங்கள்.''

அவற்றைத் திரும்பத் திரும்ப அவர்கள் பார்த்தார்கள். அண்மை யில் நடந்த தேர்வு மதிப்பெண்களைப் பார்த்ததாக அவர்களின் ஒப்பம் இடப் பட்டிருந்தது.

உண்மையை உணர்ந்த அவர்களிட மிருந்து பெருமூச்சு ஏற்பட்டது.

'இந்தப் பயல்களுக்கு எவ்வளவு திமிர் இருந்தால் நம்முடையதைப் போலப் போலியாகக் கையெழுத்துப் போடுவார்கள்? இனிமேலும் இவர் களைச் சும்மா விடக்கூடாது; நமக்குப் பெரிய அவமானம் ஏற்பட்டு விடும்.'

இருவருடைய உள்ளங்களும் உலைப் பானைகளாகக் கொதித்துக் கொண்டிருந்தன.

(தொடரும்)



பிருந்தாவனக் கதையரங்கம்

வெட்டியான்பேரன்



ஆர். சுமதி
(17578)

சூரியன் எழுந்ததுமே மாணிக்கமும் எழுந்து விட்டான். இரவெல்லாம் காய்ச்சலில் முனகிக் கொண்டிருந்த அவனது தாத்தா இப்பொழுதுதான் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார். குடிசையை விட்டு வெளியில் வந்த மாணிக்கம் மனத்தில் நினைத்தான்.

குளிக்கச் சென்ற போது வழியெல்லாம் பல சிந்தனைகள்.

'நானும் நன்றாகத்தானே படிக்கிறேன்! என்னை ஏன்தான் எல்லோரும் வெறுக்கிறார்களோ தெரியவில்லை. எல்லாவற்றிற்கும் இந்தத் தாத்தாதான் காரணம். அவர் வெட்டியான் வேலை செய்வதால்தானே எனக்கு இத்தனை அவமானம்? இந்தச் செல்வம் பயல் என்னை எப்படிக் கிண்டல் செய்கிறான்! சே....! விளையாட்டில் சேர்த்துக் கொள்ளாமல் விரட்டியடிக்கிறான். நான் தின்பண்டம் தந்தால், ஒருவர் கூட வாங்கிக் கொள்ள மாட்டேன் என்கிறார்களே! நான் வெட்டியான் பேரனாம். எல்லோரையும் போல எனக்கு ஏன் புதுச் சட்டை கிடைப்பதில்லை? எல்லாம் இந்தத் தாத்தாவால்தான்.

'ஏன், தாத்தாவும் செல்வத்தின் அப்பாவைப் போல் ஆபீஸ் வேலை செய்தாலென்ன?' — மாணிக்கம் இப்படி சிந்தனை செய்தபடியே ஆற்றங் கரையை அடைந்து குளித்து முடித்தான். பின் வீட்டிற்கு வந்து சுவரில் மாட்டியிருந்த தன் தாய் தந்தை புகைப் படத்தை வணங்கினான்.

'அப்பா, நீங்க இருந்திருந்தால் புதுப் புதுச் சட்டையெல்லாம் வாங்கித் தருவீங்க இல்லியா? இந்தத் தாத்தாவால் எனக்குப் புது சட்டை வாங்கி தரமுடியல்லியே....!'

"மாணிக்கம்... மாணிக்கம்."

குரல் கேட்டுத் திரும்பினான். அவன் தாத்தாதான் கூப்பிட்டார்.

"என்ன தாத்தா....?"

"கலயத்திலே பழையது கொஞ்சம் இருக்கு. சாப்பிட்டுட்டுப் பள்ளிக் கூடம் போப்பா."

"சரி, தாத்தா."

மாணிக்கம் சாப்பிட்டு விட்டுப் புத்தகப் பையைத் தோளில் மாட்டியபடி நடந்தான்.

பள்ளிக்குச் செல்லவே மனம் இல்லை அவனுக்கு. தன்னை அனைவரும். (ஆசிரியர்களைத் தவிர) அவமானப் படுத்துகின்றனர். நான் பள்ளியில் நுழைந்தாலே, 'வெட்டியான்

வராண்டார்' என்று கத்துகின்றனர். கண்களில் கண்ணீர் வழிய நடந்து வந்து கொண்டிருந்தவனின் கண்ணில் பட்டது அது.

அதுதான் சுடுகாடு!

அந்தச் சுடுகாட்டை ஒருமுறை பார்த்தான். அவன் கண்களில் பட்டது அந்தப் பிணமேடு. அப்பொழுது தான் மூடப்பட்டு மாலை போடப்பட்டிருந்தது. ஆனால், அந்த மாலை வாடாமல் இருந்தது. மண்ணும் ஈரமாக இருந்தது.

'நேற்று யாராவது நம் ஊரில் இறந்தார்களா? அப்படியொன்றும் தெரியவில்லையே! அப்படியே இருந்தாலும் தன் தாத்தாதானே புதைப்பார். தாத்தாவின் தொழிலில் மண்ணைப் போட்ட புது வெட்டியான் யார்?' இப்படி யோசனை செய்தவாறே நடந்தான்.

அப்போது, செல்வம் மணியிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருக்க, மாணிக்கமும் அதைக் கேட்டான்.

''டேய் மணி, நம்ம ஊர் மாரியம்மன் கோயிலிலே திருட்டுப் போயிடுச்சே, உனக்குத் தெரியுமா?''

''தெரியுமே! எங்க அப்பா போலீஸ்தானே! நேத்து ராத்திரி திருட்டுப் போயிடுச்சாம். திருடர்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.''

''ஏகப்பட்ட நகைகள். அத்தனையும் காலி.''

பின்னர் மாலை பள்ளிவிட்டுச் சுடுகாடு வழியே மாணிக்கம் வந்த பொழுது அந்த மணல் மேடு கண்ணில் பட்டது. செல்வம் சொன்னது காதில் ஒலித்தது. 'ஒரு வேளை, திருடர்கள், போலீசுக்குப் பயந்து கொண்டு நகைகளை இங்கு புதைத்து விட்டுப் போய்விட்டனரோ! ஊரில் யாரும் சாகவில்லை. புது வெட்டியானும் இல்லை. அப்படியென்றால் இந்த மண்ணுக்குள் கிடப்பது பிணமா? இல்லை நகையா? ஏன் வீண் சந்தேகம்? தோண்டித்தான் பார்ப்போமே!'

மாணிக்கம் விரைவாக வீட்டை நோக்கி நடந்தான். புத்தகப் பையை மூலையில் வீசிவிட்டு மண்வெட்டியைத் தோளில் சுமந்து கொண்டு போர்க்களத்தை நோக்கிச் செல்லும் வீரனைப் போல் சுடுகாடு நோக்கி வந்தான். பிண மேடையை வெட்டி மண்ணை ஒதுக்கினான். சில நிமிடங்களுக்குப் பிறகு உள்ளே 'ணங்' என்ற ஒலி கேட்டது. மண்வெட்டி எதன் மேலோ மோதிய ஒலி. உள்ளே குனிந்து பார்த்தான் மாணிக்கம். ஒரு தகரப் பெட்டி எட்டிப் பார்த்தது. மாணிக்கத்திற்கு வியப்புத் தாளவில்லை. சிரமப்பட்டுப் பெட்டியை மேலே தூக்கினான். பெரிய பூட்டு போடப்பட்டிருந்தது. தன் வீட்டை நோக்கி நடந்தான்.

இந்தத் திருடர்கள் அதிபுத்திசாலிகள். சுடுகாட்டுப் பக்கம் யாரும் வர மாட்டார்கள். வந்தாலும் பிண மேட்டை யார் தோண்டுவார்கள்? என்று அறிந்து செய்த தந்திரம் இது. போலீஸ் பரபரப்புக் குறைந்ததும் சாவகாசமாக எடுத்துக் கொள்ளலாம் என்று திட்டம் போட்டிருக்கிறார்கள். மனத்துக்குள் இப்படி நினைத்தவாறே வீட்டினுள் நுழைந்து பெட்டியை ஒரு மூலையில் வைத்தான். தாத்தா இன்னும் படுக்கையில் இருந்தார். தன் வீட்டில் இருந்த ஒரு பழைய தகரப் பெட்டியை எடுத்து வந்து தூசு போகத் தட்டி, அதில் செங்கற்களை வைத்து மூடினான். ஒரு பூட்டாத பூட்டைப் பெட்டியில் மாட்டி வைத்தனர். பின் அதைத் தலையில் சுமந்து சுடுகாட்டுக்கு வந்தான். குழியினுள் பெட்டியை இறக்கி மண்ணைப் போட்டு மூடி முன்போல் செய்து மாலையைப் போட்டுவிட்டு நேரே போலீஸ் ஸ்டேஷனை நோக்கி ஓடினான்.

''ஐயா,'' என்று மாணிக்கம் அழைத்தான். 'யாரிவன்?' என்று அவனிடம் வந்தார் இன்ஸ்பெக்டர்.

''ஸார்,... அந்தத் திருடர்கள் திருடிய அத்தனையும் என்கிட்டே இருக்கு.''

''நீ என்னப்பா சொல்றே?'' அதிர்ச்சியுடன் அவர் கேட்க, மாணிக்கம் நடந்தவை அனைத்தையும் சொன்னான்.

''சபாஷ்'' என்று சொல்லி அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார் இன்ஸ்பெக்டர்.

இரவு பத்து மணி இருக்கும். சுடுகாட்டைச் சுற்றிப் போலீஸார் மறைந்திருந்தனர். இன்ஸ்பெக்டர் அருகில் மாணிக்கம் இருந்தான். சிறிது நேரத்தில் தூரத்தில் ஒரு வெளிச்சம் தெரிந்தது. பின், அது ஒரு வேன் என்பது புரிந்தது. வேன், சுடுகாட்டிற்கு வெளியே நிற்க, அதிலிருந்து மூன்று பேர் இறங்கி விரைவாக அந்தப் பிண மேட்டை நோக்கி வந்தனர். வந்ததும், ஒருவன் தன் கையிலிருந்த மண்வெட்டியைக் கொண்டு தோண்டி உள்ளேயிருந்த பெட்டியைத் தூக்கினான். மறுகணம், 'டுமீல்...' என்று குண்டு வெடிக்க மூவரும் திகைத்து, சுற்றும் முற்றும் பார்த்தனர். அவர்களைச் சுற்றிப் போலீஸ் வளையம் நின்றது.

கையில் பெட்டியை வைத்திருந்தவன் மட்டும் ஒரு போலீசை எதிர்பாராதவிதமாகத் தள்ளிவிட்டுத் தப்பித்து ஓடினான். போலீஸ் சுட்ட குண்டுகளிலிருந்து தப்பி ஓடிய அவனை இரண்டு போலீஸார் துரத்தினர். பாவம், அவன் பெட்டியில் நகை உள்ளதென எண்ணி ஓடினான். அவ்வாறு ஓடிக் கொண்டிருக்கும் போதே பூட்டாத பெட்டியின் பூட்டு விலகிக் கொள்ள, பெட்டி வாயைப் பிளக்க, கற்களெல்லாம் அவன் காலில் விழ, அவனும் குப்புற விழுந்தான்.

திருடர்கள் அனைவரும் பிடிபட்டனர். இன்ஸ்பெக்டர் மாணிக்கத்தின் வீட்டுக்குச் சென்று அந்தப் பெட்டியைத் திறந்தவுடன் பிரமித்தார். எத்தனை எத்தனை நகைகள்! அப்பப்பா... இந்த ஊரையே காக்கும் மாரியம்மனின் நகைகள்! மாணிக்கத்திற்குப் பாராட்டும், புகழும், பணமும் கிடைத்தன. அவன் படிப்புச் செலவுக்கு அரசு உதவி செய்தது. அவன் திக்குமுக்காடிப் போனான். அவன் தாத்தா புல்லரித்துப் போனார். வெட்டியான் தொழிலைக் கேவலமாக நினைத்ததை எண்ணி மாணிக்கம் வெட்கினான். அவனைக் கிண்டல் செய்த செல்வமும், மணியும், மற்றவர்களும் வாயடைத்து நின்றனர்.

தெய்வ பக்தி



—ஜெ.அனிதா (21295)

மங்களபுரி ஓர் அழகிய குக்கிராமம். அங்கு ஆரம்பப் பள்ளி மட்டுமே இருந்தது. ஐந்து கி. மீ. தொலைவிலுள்ள இரத்தினகிரி என்ற பேரூரில் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்று இருந்தது. ஊர்க் கோடியில் ஓர் ஆலமரம் இருந்தது. அதனடியில் பாம்புப் புற்று ஒன்று இருந்தது. அதில் முருகன் என்ற ஒரு பாம்பு தன் சுற்றத்தாரோடு வசித்தது. ஆலமரத்தினடியில் சிறுவர்கள் விளையாடுவார்கள். பாம்புகள் அவர்களை ஒன்றும் செய்யாது. அதனால் மக்களும் பாம்புகளை அடிப்பதில்லை. புற்றுக்குப் பால் ஊற்றிப் பூஜித்து வந்தனர்.

கிராமத்தில் கலா, செல்வி என்ற இரு சிறுமியர் தோழிகளாய் இருந்தனர். அவர்கள் தினமும் மேல்நிலைப் பள்ளிக்குச் சென்று படித்து வருவார்கள். செல்வி எப்பொழுதும், 'இறைவனால்தான் இவ்வுலகம் இயங்குகிறது. இறைவனே நம்மைக் காக்கிறார்' என்று தெய்வபக்தியின் பெருமையைப் பற்றியே பேசுவாள். ஆனால் கலாவோ, 'இறைவனே இல்லை

என்று இறைவனை நம்ப மாட்டாள். செல்வி கலாவிடம், 'கலா உனக்குத் துன்பம் வரும் பொழுது இறைவனை நினை. உனக்கு எவ்வித ஆபத்தும் நேராது' என்று தினமும் கூறுவாள். மேலும் பழனி முருகனைப் பற்றிப் பெருமையாகப் பேசுவாள்! ஆனால் கலாவோ, அவள் பேச்சில் சலிப்புக் கொண்டு, 'ஏண்டி, சும்மா அளக்கறே!'' என்று கோபித்துக் கொள்வாள். அதனால் செல்வியும் அவளே திருந்திக் கொள்ளட்டும் என்று விட்டு விட்டாள்.

ஒருநாள் செல்வி தன் வீட்டில் விசேஷமென்று பள்ளி செல்லவில்லை. கலா தனியாகவே பள்ளிக் கூடம் சென்றாள். செல்வி இல்லாததால் பள்ளி முடிந்ததும் வீட்டுக்குத் திரும்பாமல் மற்றத் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். பொழுது சாய்ந்து விட்டது அப்போதுதான் அவசரம் அவசரமாக வீடு திரும்பினாள். ஆலமரத்தின் சமீபமாக வரும்பொழுது இருட்டி விட்டது. அங்கு இருவர் அவளை மறித்து இழுத்துச் சென்றனர். அவள் சப்தமிட்டும் பயனில்லை. அப்பொழுது செல்வி சொன்னது நினைவிற்கு வரவே, 'முருகா, முருகா' என்று இறைவனைக் கூவியழைத்தாள். தன்னைக் காப்பாற்றும்படி வேண்டினாள்.

புற்றுக்குள் இருந்த முருகன் என்ற அப்பாம்பு யாரோ தன்னை உதவிக்கு அழைக்கும் சப்தத்தைக் கேட்டுத் தன் சுற்றத்தாருடன் உதவிக்கு ஓடிவந்தது. பாம்பைக் கண்டதும் திருடர்கள் ஓடி விட்டனர். கலாவின் பெற்றோர்களும் அவளைத் தேடி அங்கு வந்து சேர்ந்தனர்.

அப்பொழுதுதான் கலா தெய்வத்தின் மகிமையை உணர்ந்தாள். முருகனே நாகத்தின் உருவில் வந்து தன்னைக் காப்பாற்றினார் என்று நம்பினாள். அன்றிலிருந்து தெய்வபக்தியுடன் பால் ஊற்றிப் புற்றினைப் பூஜித்து வந்தாள். செல்வி கலா திருந்தியது கண்டு மகிழ்ந்தாள்.

பெண்கள் வெற்றி பெறுவதேன்? ஆண்கள் தோல்வி அடைவதேன்?




நெல்லை ஆ. கணபதி

அம்மா: இந்த வேகாத வெயிலில் எங்கேடா போய்ச் சுத்திட்டு வர்றே?

பையன்: 'வெயி'லில் சுத்தலியே! குடை எடுத்துக்கிட்டுப் போய்த் தான் சுத்திட்டு வர்றேன்!

— கு. கோட்டி. சத்துவாச்சாரி.



அரசுத் தேர்வு முடிவுகளில்
ஆண்களைவிடப் பெண்கள்தான்
பரிசும்பெற்றார்! மிகவெற்றி
பலபேர் அடைந்தார்! புகழ்பெற்றார்!

'ஆண்டுமுழுதும் படித்தாலும்
அத்தனைபாடமும் முடித்தாலும்
ஏண்டா மகனே, மாணவர்கள்
எழுதும்தேர்வினில் தோற்கின்றார்?'

என்றேஅம்மா எனைக்கேட்டாள்
என்னபதில்நான் சொல்லிடுவேன்?
'நன்றாய்த்தினமும் கடைகண்ணி
நாங்கள்தானே அலைகின்றோம்?

காய்கறிவாங்கப் பால்வாங்கக்
காலைமாலை நடக்கின்றோம்.
ஆயிரம்தடவை வெளிவேலை
அனைத்தும்நாங்கள் செய்கின்றோம்.

ரேடியோ டீ.வி., குழாய்ரிப்பேர்!
ரேஷன் அரிசி, பாமாயில்,
ஓடியே வாங்கி முடிக்கின்றோம்!
ஓய்வேஇன்றித் துடிக்கின்றோம்!

பேசாமடந்தை போல்வீட்டில்
பெண்கள் இருப்பர், அம்மாவைத்
தாஜாபண்ணிச் சரிக்கட்டித்
தமக்கும்சேவகம் செய்விப்பர்.

கடைக்குப்போகும் துயரில்லை;
கால்கள் வலிக்கும் கூறு இல்லை.
'சடையை அம்மா வாரிப் பூ
தலையில்வைத்தே விடு!' என்பார்.

பள்ளிவிடு இரண்டோடு.
படிப்புத்தூக்கம் உணவின்றி
என்னளவும்பிற சுமையில்லை!
எனவேபெண்கள் படிக்கின்றார்!

இத்தனைவேலையும் செய்தும்ஆண்
எழுதிடும்தேர்வில் வெல்கின்றார்!
எத்தனைவேலையும் இல்லாமல்
ஏனோபலபெண் தோற்கின்றார்.'


என்றேன் அம்மா, 'டேய்தம்பி!
இரவும்பகலும் உழைத்தாலும்
நன்றாய்ப்படிப்பில் அக்கறைதான்
நல்கும்வெற்றி. இதுஉண்மை.

இளமைக்கல்வி கற்றிடவே
ஏதும்வசதி வாய்ப்பின்றி
அலுவலகத்தில் பணிசெய்வோர்.
அஞ்சல்கல்வி கற்கின்றார்.

வீட்டுக்கவலை ஒருபக்கம்
வேலைப்பளுதான் மறுபக்கம்.
வாட்டும்பொழுதும் கற்கின்ற
வயதானோரைப் பார்தம்பி.

என்றாள் அம்மா 'சரியம்மா!
இன்றே, இனிதே, இப்பொழுதே
நன்றாய்ப் படிப்போம்! பெருவெற்றி
நாங்கள் பெறுவோம், இதுஉறுதி.'

என்றேன்! இனிய மாணவரே!
இனிமேல் வருகின்ற பொதுத்தேர்வில்
நன்றாய்ப் பெண்கள் போல்வெற்றி
நாமும் பெறுவோம்! உயர்ந்திடுவோம்!



தவறு என்பது...

பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வந்த மகேஷ், யார்கிட்டேயும் பேசாமல் 'உம்'னு போய் உட்கார்ந்தான்.

'போய், கை, கால் அலம்பிண்டு வாடா... காப்பி தரேன்' — என்றாள் மகேஷின் தாய்.

மகேஷ், இதைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. ஏதோ பலமான யோசனையில் ஆழ்ந்தவன் மாதிரி காணப்பட்டான்.

மகேஷ் எழுந்து போகாமல், இடிச்சபுளி மாதிரி அங்கேயே உட்கார்ந்து இருப்பதைக் கண்டு, அடுக்களையிலிருந்து எட்டிப் பார்த்த மகேஷின் தாய்க்கு என்னவோ போலாகி விட்டது.

'ஏண்டா உடம்பு சரியில்லையா.. ஜுரம் அடிக்கிறதா? — என்று கேட்டுக் கொண்டே, தன் புறங்கையால் மகேஷின் நெற்றி, கழுத்து எல்லாம் தொட்டுப் பார்த்தாள்.

மகேஷுக்கு ஒன்றுமில்லை என்று தெரிந்ததும், உரத்த குரலில் 'ஏண்டா என்னவோ போல் இருக்கிறாய்? ஸ்கூல்ல யார்கிட்டேயாவது சண்டை போட்டாயா...?' என்றாள்.

'இல்லை' என்று தலையை மாத்திரம் ஆட்டினான்.

'ஹோம் ஒர்க் பண்ணாமே போனயா... டீச்சர் திட்டினாளா?'

'இல்லை.'

'ஜாமிட்டரி பாக்ஸ் டிபன் பாக்ஸ் ஏதாவது தொலைச்சிட்டயா?'

'இல்லை.'

'அப்போ எதுக்கு உம்'னு உட்கார்ந்திருக்கே?' என்று மகேஷிடம் கேட்டுக் கொண்டே, அவனருகில் இருந்த 'ஸ்கூல் பேக்'கைப் பார்த்தாள். அதன் மேலே 'ப்ராக்கிரஸ் ரிப்போர்ட்' இருப்பது தெரிந்தது!

விருட்டென்று அதை எடுத்துப் பார்த்த மகேஷின் தாய்க்கு அடிவயிற்றில் புளியைக் கரைத்தது. 'கடன்காரா,நீநாசமாப்போக!' என்று அலறினாள்.

மகேஷ் நான்கு பாடத்தில் 'பெயிலாகி' இருந்தான்.


'நீங்க என்ன செய்வீங்களோ, ஏது செய்வீங்களோ, எனக்குத் தெரியாது. மகேஷை ஒரு வழி பண்ணிட்டுத்தான் போகணும்' — என்று தன் கணவனிடம் ஒரேயடியாக பிடிவாதம் பிடித்தாள் அவன் தாய்.

சற்றுத் தொலைவில் மகேஷ் தலை குனிந்து நின்று கொண்டிருந்தான். மகேஷின் தந்தை விஸ்வநாதன், மகேஷைப் பார்த்தார்.

'படிபடின்னு எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். புத்தகத்தைத் தூக்கவே மாட்டேங்கிறான். ஒரு பாடமாவது படிடா. நாளைக்கு ஸ்கூல்ல டெஸ்ட். தொண்ணூறு மார்க் வாங்காட்டாலும் பரவாயில்லை. பாஸ் மார்க்காவது வாங்கப் பாருடான்னு அடிச்சிட்டேன். மாட்டேன்னுட்டான். இப்போ ப்ராக்கிரஸ் ரிப்போர்ட்ல 'சுழி' வாங்கிட்டு வந்திருக்கான்.'

விஸ்வநாதன் இப்பொழுது மகேஷின் பிராக்கிரஸ் ரிப்போர்ட்டை ஊன்றிக் கவனித்தார். கணக்கு, சயன்ஸ், இங்கிலீஷ், நேச்சுரல் ஸ்டடி — இந்த நான்கு பாடத்திலேயும் இருபதுக்கும் குறைவாகவே மார்க் வாங்கியிருப்பது தெரிந்தது.

எப்பவுமே அப்பா சொல்லைத் தட்ட மாட்டான் மகேஷ். அப்பா கூப்பிட்டதும் தலைகுனிந்தபடியே அவர்



பக்கம் வந்தான்.

'இதோ பார் மகேஷ். நீதான் ரொம்ப நல்ல பையனாயிற்றே! எப்படி மார்க் குறைஞ்சது?' — என்று தன்னருகே இழுத்துக் கொண்டு தட்டிக் கொடுத்துக் கேட்டார்.

மகேஷ் பதில் சொல்லவே இல்லை.

'அம்மா உன்னை ரொம்பத் திட்டினாளா?' — என்று மெதுவாகக் கேட்ட பொழுது மகேஷுக்கு அழுகையே வந்து விட்டது.

"ஆமாப்பா. படிப்புச் சொல்லிக் கொடுக்கறேன்னு சொல்லி, என்னை 'நீ உருப்பட மாட்டே. குப்பை பொறுக்கத்தான் போகப் போறே, நீ உதவாக்கறை' அப்படி இப்படின்னு திட்டறாப்பா... 'கடன்காரா, நாசமாப் போக'ன்னு கத்தறாப்பா...'

'இதை ஏன் எங்கிட்டே அன்னிக்கே சொல்லல்லே?'

'நீங்கதான் தினமும் ராத்திரி ரொம்ப லேட்டா வர்றீங்க. காலம்பற எழுந்தா எனக்கு முன்னாலேயே வெளியிலே போயிடறீங்க...

அழாக்குறையாக மகேஷ் சொன்னது விஸ்வநாதன் மனத்தில் அம்பெனத் தைத்தது.

பொதுப்பணி என்றும், அந்தச் சங்கம், இந்தச் சங்கம் என்றும் ஏகப்பட்ட பதவிகளை, கௌரவத்திற்குப் பெற்றுக் கொண்டு, ஊருக்கு உழைக்க விஸ்வநாதன் போவது வழக்கம்.

மகேஷின் தாய்க்கோ, வீட்டுக்காரரையும் குற்றம் சொல்ல முடியவில்லை. மகேஷும் விளையாட்டுப் புத்தியாய் இருக்கானே, என்ற கவலை. அவனை விட வசதி குறைந்தவர்கள் எல்லோரும் நன்றாகப் படிக்கும் பொழுது மகேஷ் சரியாகப் படிக்கவில்லையே என்ற கவலை.

இதனால்தான் அவளுக்கு எரிச்சல் வர, மகேஷைப் பிடித்துத் திட்டுகிறாள்.

விஸ்வநாதன் இப்பொழுது இதைக் கொஞ்சம் கொஞ்சமாக உணரத் தொடங்கினார்.

'வெரிகுட் மகேஷ். உன் மனசு

எனக்கு இப்போதுதான் புரிகிறது. ஓ.கே. இனிமே உன்னை உன் அம்மா திட்ட மாட்டா. நானும் தினமும் சீக்கிரமா வீட்டுக்கு வந்துடறேன். போதுமா...?'

மகேஷுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அப்படியே அப்பாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

'இந்தத் தடவை மார்க் குறைஞ்சு வாங்கிட்டே. அதனால என்ன... பரவாயில்லை. அடுத்த டெஸ்ட்லே நிறைய வாங்கு. நானும் அம்மாகிட்டே சொல்றேன். உன்னைத் திட்டாம பார்த்துக்கிறேன். போதுமா?'

தந்தையின் இந்தக் கனிவான பேச்சு, மகேஷுக்குக் காதிலே தேன் பாய்ந்தது போலாயிற்று. அப்படியே வெளியே போனான் மகேஷ்.

மகேஷ் சென்ற பிறகு —

''இதோ பார் மங்களம். குழந்தையை ரொம்பத் திட்டாதே. பக்கத்திலே உட்கார வைச்சு, நைசா பாடம் சொல்லிக் கொடு. அவன் என்ன சொல்ல வரான்னு முழுவதும் கேட்டுக்கோ. அவனுக்குத் தகுந்தாற் போல் பேசு. நீ கரடியாக் கத்திச் சொல்லிக் கொடுத்தது மகேஷ் மனசிலே ஏறலே. ஆனா நீ திட்டினது மாத்திரம் எப்படி அவன் மனசிலே பதிஞ்சுட்டிருக்கு பார்த்தாயா?'' — என்று நிதானமாக அறிவுரை கூறினார்.

மறுநாள் மாலை. விஸ்வநாதன் சீக்கிரமே வந்து விட்டார். மகேஷுக்கு ரொம்பச் சந்தோஷம்.

'இந்தா மகேஷ், உனக்கு என்ன வாங்கிட்டு வந்திருக்கேன் பார்'' என்று சொல்லி, ஒரு பொட்டலத்தை அவனிடம் நீட்டினார்.

வேகமாகப் பிரித்துப் பார்த்தான். உள்ளே மகேஷுக்குப் பிடித்தமான சோன்பப்டி. 'தேங்க்யூ' என்று சொல்லி விட்டு, புத்தகத்தை எடுக்க ஓடினான்.

தன் கணவர் சீக்கிரமாகவே வீட்டுக்கு வந்து விட்ட சந்தோஷம். வாய் திறந்து சொல்லாமலேயே 'மகேஷ் புத்தகத்தை தூக்கிக் கொண்டு, சொல்லிக் கொடம்மா — என்று புன்னகை பூத்துக் கொண்டு கெஞ்சின காட்சி இந்த இரண்டும் மகேஷின் தாய்க்கு அளவற்ற மகிழ்ச்சியைத் தந்தது.

'வாடா கண்ணு. நான் சொல்லித் தரேன்' — என்று மகேஷை உச்சி மோந்து அழைத்துக் கொண்டு போனாள்.


தள்ளி நின்று இவற்றை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த மகேஷின் தந்தைக்கு —

'பொதுப் பணி செய்து பெறுகின்ற சந்தோஷத்தை விட, ஒரு குடும்பத்திற்குத் தந்தை என்ற பெயரில் செய்கின்ற பணிதான் சிறந்தது' — என்று எண்ணத் தோன்றிற்று.

அடுத்த 'டெஸ்ட்'டில் மகேஷ் எடுத்த 'மார்க்'கைப் பார்த்ததும், விஸ்வநாதனுக்கும், மகேஷின் தாய் மங்களத்திற்கும் ஏற்பட்ட மகிழ்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல. ஆமாம், எல்லாப் பாடங்களிலும் தொண்ணூறு மார்க் எடுத்து 'ஸ்டார்' வாங்கியிருந்தான் அவன்!

கைஎடுக்காமல்வரைய முடியுமா?

கை எடுக்காமல் வரைய முடியுமா?



முயற்சி செய்து பாருங்கள். 1—இல் வைத்த பென்சிலை எடுக்காமல் இந்தப் படத்தை முடித்து 2 — இல்தான் எடுக்க வேண்டும். முடியா விட்டால் 94 — ஆம் பக்கம் பார்க்க.

கி.பி. 2001-ன் வகுப்பறைக்கு

உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள்!



வேகமும் சக்தியும் மிக்க நாளைய தொழில் நுட்பத்தை இன்றே சாதியுங்கள்!

தகுதியான வருங்காலத்தைக் கண்டு பிடியுங்கள்! வாங்குங்கள்

சிப்-சாப்

நீங்களே செய்யும் எலெக்ட்ரானிக் கிட்!

ஒரே 'சிப்' மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட பரிசோதனைகள்!

''சிப்-சாப்'' நீங்களே செய்யும் எஜுகேஷனல் கிட் நூற்றுக்கும் மேற்பட்ட பகட்டான பரிசோதனைகள் கொண்டது. வித்தையை விளையாட்டாய் கற்பிக்கவென்றே திட்டமிடப்பட்டது!

உங்கள் குழந்தை நாளைய உலகில் வெற்றியடைய வழிசெய்யுங்கள்!

எலெக்ட்ரானிக் யுகத்தின் சவால்களை சமாளிக்கத் தகுதியான சாதனம் ''சிப்-சாப்''!

அம்சங்கள்: பாட்டரியால் இயங்கக் கூடியது - பாதுகாப்பானது • எளிதில் எடுத்துச் செல்லக் கூடியது • ஸால்டரிங் இல்லை – கனெக்‌ஷனுக்கு ''பேட்டென்டுடன்'' கூடிய விசை • கையாள எளிது.

பரிசோதனைகள்: • மியூஸிகல் ஆர்கன்* ஷூட்டிங் விளையாட்டு • ஃபயர் அலார்ம்* ஒயர்லெஸ் பீப்பர் * ஸிக்னல் டிரான்ஸ்மிட்டர்* லைட் ஆபரேடட் அலார்ம் இன்னும் பலப் பல.

ரூ. 300/- மட்டும் - வரிகள், அனுப்பும் செலவு தனி.

''எலக்ட்ரானிக்ஸ் எல்லோருக்கும்''

தேசிய விருது பெற்றது

எஜுடெக்

33, சர்ச் தெரு, பெங்களூர்-560 001.
இந்தியா. போன்- 578801.


எனக்குத் தேவை ''சிப்-சாப்''. கிட் ஒன்றுக்கு ரூ. 350/- வரியும், அனுப்பும் செலவும் சேர்த்து. தயவு செய்து ....கிட்/கிட்கள் அனுப்பவும். இத்துடன் 'கிராஸ்' செய்யப்பட்ட டி.டி./போஸ்டல் ஆர்டர் (ஒரு கிட் ரூ. 50/- என்ற கணக்கில்) முன்பணமாக அனுப்புகிறேன். மீதித்தொகையை வி.பி.பி. வந்து சேர்ந்தவுடன் அனுப்புவதாக உறுதியளிக்கிறேன்.

பெயர் ....

விலாசம் ....

பள்ளி ☐ கல்லூரி ☐

Climb ads/Chip-Chap/890J



கை நிழலில் உருவங்கள்!

ஆழி. வே. ராமசாமி

இப்போது நீங்கள் ஒரு வேடிக்கையைச் செய்து பார்க்கப் போகிறீர்கள். என்ன வேடிக்கை? உங்கள் கைகளைக் கொண்டு, கைவிரல்களைக் கொண்டு, நிழல் உருவங்களாக நாய், கழுதை, குதிரை, யானை, அன்னம் முதலியவற்றை வரவழைக்கப் போகிறீர்கள்.

செலவே இல்லை. இதற்கு வேண்டியதெல்லாம், ஒரு மெழுகுவத்தி, அல்லது ஒரு மண்ணெண்ணெய் விளக்கு. ஒரு வெள்ளைச் சுவர். சுவர் வெள்ளையாக இருக்க வேண்டும். கலராக இருந்தால் ஒரு வெள்ளைத் துணியைச் சுருக்கம் இல்லாமல் கட்டித் தொங்க விட்டுக் கொள்ளுங்கள்.

இருட்டாக இருந்தால்தான் இந்த வேடிக்கையைச் செய்து காட்ட முடியும். பகல் வெளிச்சம் இதற்குச் சரிப்பட்டு வராது.

விளக்குக்கும் சுவருக்கும் இடையே உங்கள் கைகள் இருக்க வேண்டும். விளக்கின் வெளிச்சம் உங்கள் கைகளில் பட்டு, உங்கள் கைகளின் நிழல் சுவரில் விழ வேண்டும். விளக்குக்கு மிக அருகில் கைகள் இருந்தால் நிழல் மிகப் பெரிதாகத் தெரியும். சுவர்ப் பக்கம் போகப் போக நிழல் சிறிதாகும்.

முன்னதாக உங்கள் விரல்களைச் 'சொடக்கு' எடுத்து நன்றாக நீட்டி மடக்கிப் பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் கொஞ்சம் சாமர்த்தியசாலியாக இருந்தால், எடுத்த எடுப்பிலேயே உருவம் தெளிவாக வந்துவிடும். இல்லை என்றால், கொஞ்சம் முன்னே பின்னே இருக்கும். நீங்கள் செய்து பார்க்கும் போதுதான் உங்களுக்கு அனுபவமும் தெளிவும் கிடைக்கும்.

அடுத்து வரும் பக்கங்களைப் பாருங்கள். கைகளை, விரல்களை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்பது புரியும். விரல்களை எப்படி நீட்டினால், அல்லது எப்படி மடக்கினால் எந்த உருவம் கிடைக்கும் என்பதைப் படத்தைப் பார்த்தே புரிந்து கொள்ளலாம்.

உருவம் சரியாக வருகிற வரையில், விரல்களை நீட்டி அல்லது மடக்கிச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.


• இதற்குப் பொறுமை அவசியம் தான்.

உங்களுக்கே திருப்தியாக உருவத்தை வரவழைத்துக் கொண்டு பார்த்த பிறகுதான், நீங்கள் மற்றவர்களுக்குக் காட்ட வேண்டும்.


மாஜிக் செய்கிறவர்கள், தாங்கள் செய்து காட்டுவதற்கு முன்பு, பார்வையாளர்களுக்குக் கொஞ்சம் 'லெக்சர்' அடிப்பார்கள். கவனித்திருப்பீர்களே! அதுமாதிரி, "ம்... இதோ பாருங்கள், இப்போது என் கை நிழலில் ஒரு கழுதையை வரவழைக்கப் போகிறேன்... கழுதை வாயைப் பிளக்கிறது பாருங்கள்... காதை ஆட்டுகிறது பாருங்கள்..." என்று சிறு விளக்கம் கொடுத்தீர்களானால், பார்க்கிறவர்கள் தயாராகி விடுவார்கள். எந்தக் காரியத்தையும் மற்றவர்களுக்குச் செய்து காட்டுவதற்கு முன்பு, அதை ஏற்றுக் கொள்ள அவர்களைத் தயார் செய்ய வேண்டும்.

உருவத்தைச் சுவரில் காட்டும் போது, விரல்களைத் தேவையான இடத்தில் அசைத்தால், உருவம் காதுகளை ஆட்டுவது போல இருக்கும்; அல்லது வாயைப் பிளப்பது போல இருக்கும்.


செய்து பாருங்களேன்!



1.நாய்
உ. கழுதை
3. குதிரை
4. ஒட்டகம்
5.பறவை
6.பசு
7.வாத்து



8. ஆடு



9. யானை



10. அன்னம்



11. கழுகு



12. நண்டு



13. முயல்



குளம் வெட்டிய பிராணிகள்

முன்னொரு காலத்தில் இலங்கையில் இரக்க குணமுள்ள ஓர் அரசன் ஆண்டு வந்தான். மனிதர்களிடம் மட்டுமல்லாமல், அவன் பிராணிகள், பறவைகள், மிருகங்கள் எல்லாவற்றிடமும் இரக்கம் காட்டி ஆதரித்து வந்தான்.

அவன் அடிக்கடி மாறு வேஷம் தரித்து ஊர் சுற்றி மக்களின் குறைகளை அறிவது வழக்கம். அப்படிப் போகும்போதெல்லாம் மிருகங்கள், பறவைகளுக்கு என்ன குறைகள் இருக்கின்றன என்று கவனித்து அறிவது வழக்கம்.

அவனுக்குப் பறவைகள், மிருகங்கள் பேசும் மொழி தெரியும். அந்த மொழி அறிவை, ஒரு வன தேவதை அவனுக்குத் தந்திருந்தது.

அந்த ஆற்றலை அவனுக்கு வழங்கியபோது, அந்த வன தேவதை, ''ஒரு முக்கியமான நிபந்தனை. இப்படி ஒரு அதிசய ஆற்றல் உனக்கு இருக்கிறது என்பதை நீ யாரிடமும் வெளியிடக் கூடாது. தப்பித் தவறி வெளியிட்டால், உன் மண்டை இரண்டாகப் பிளந்து விடும்,'' என்று எச்சரித்திருந்தது.

அரசனும் அதைஎப்போதும்நினைவில் வைத்திருந்து மிகுந்த எச்சரிக்கையுடன் இருந்தான். தன் மந்திரியிடம் கூட அவன் அதை வெளியிட்டதில்லை.

பறவைகள், பிராணிகளின் மொழி தெரிந்ததனால், அவனால் அவற்றின் குறைகளை உடனுக்குடன் அறிந்து தீர்த்து வைக்க முடிந்தது.

இதனால் பறவைகள், பிராணிகள் எல்லாம் குறைகள் தீர்ந்து சந்தோஷமாக வாழ்ந்தன. ''இப்படி ஒரு அரசர் நமக்குக் கிடைத்தது நாம் செய்த பாக்கியம்,'' என்று பாராட்டின. ''அவன் நன்றாக இருக்க வேண்டும்,'' என்று வாழ்த்தின.

அவை வாழ்த்துவதைக் கேட்கும் போதெல்லாம் மகிழ்ச்சி தாளாமல், ''மிக்க நன்றி,'' என்று சொல்ல அவன் நாக்குத் துடிக்கும். கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்வான். மிருகங்களுக்குக் கூடத் தன்னிடம் உள்ள அதிசய சக்தி தெரியாமல் அரசன் சர்வ ஜாக்கிரதையாக இருந்தான்.

அவனுடைய அரண்மனைக்குப் பின்னால் ஒரு பெரிய நந்தவனம் இருந்தது. அதில் பெரிய பெரிய மரங்களும் பூஞ்செடிகளும் கொடிகளும் புதர்களும் நிறைந்திருந்தன. கோழிகள், முயல்கள், மான்கள், கிளிகள், குயில்கள் என்று ஏராளமான சின்னஞ் சிறு உயிரினங்கள் அதில் வசித்தன.

அரசன் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தன் கையாலேயே அவற்றுக்குத் தானியங்கள், பழங்கள், கொட்டைகளைப் போடுவது வழக்கம்.

அந்த நேரம் வரும்போது அவை எல்லாம் அரசன் வரும் பாதை ஓரமாக வந்து கூடி நிற்கும். அவற்றுக்கு உணவிட்டு விட்டே அரசன் சாப்

சிங்களக் கதை — தமிழில்: சந்திரநாத்

பிடப் போவான்.

இந்த வழக்கப்படி ஒருநாள் அரசன், அந்தச் சின்னஞ்சிறு பிராணிகளுக்கு உணவு வழங்கிக் கொண்டு வந்தான். அவனுக்குச் சற்றுப் பின்னால், அவனுடைய அருமை மனைவியும் வந்து கொண்டிருந்தாள்.

முயல்கள் இருக்குமிடத்திற்கு வந்ததும் அவன் அவற்றுக்குப் பழங்களையும், கீரைகளையும் போட்டான். அவற்றை எடுத்துத் தின்ற முயல்களில் ஒன்று, தன் தோழனிடம், ''இந்த உலகிலேயே இவ்வளவு காருண்யமுள்ள இன்னொரு அரசன் வேறு கிடையாது. அது நிச்சயம்,'' என்றது.

இதைக் கேட்டதும், இந்தப் புகழ்ச்சியினால் அரசனுக்கு அடக்க முடியாத ஆனந்தம் உண்டாயிற்று. சந்தோஷம் தாளாமல் அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

அரசன் சிரித்ததைக் கேட்டு, அரசி ஆச்சரியமடைந்தாள். 'அரசன் எதைக் கேட்டு இப்படிச் சிரிக்கிறார்? அவர் அருகில் கூட யாரும் இல்லையே! யாரோ ஏதோ சொல்லியிருந்தால் தானே அதைக் கேட்டு ஒருவருக்குச் சிரிப்பு வரும்? அப்படியானால் அரசர் யார் பேச்சைக் கேட்டு இப்படிச் சிரித்தார்?' என்று அவள் நினைத்தாள்.

அரசனை நெருங்கி, ''மன்னா! இப்போது திடீரென்று சிரித்தீர்களே — ஏன் சிரித்தீர்கள்?'' என்று கேட்டாள்.

அதன் பின்தான் அரசன் தான் சிரித்தது எவ்வளவு தவறு என்று உணர்ந்தான். ''ஒன்றுமில்லை. சும்மா தான் சிரித்தேன்,'' என்று சமாளித்துக் கொண்டே அடுத்த பகுதிக்குப் போனான்.

அங்கே ஒரு கோழிக் குடும்பம் இருந்தது. பெரிய கோழி அரசனைப் பார்த்ததும், ''இதோ, நமக்குத் தினம் தினம் படி அளக்கிற கடவுளே வருகிறார். அவர் வரவு நல்வரவாகுக!'' என்று கோஷித்தது.

'அட, என்னைக் கடவுளாகவே ஆக்கி விட்டதே, இந்தக் கோழி!' என்று நினைத்த அரசனுக்கு, கர்வத்தால், முன்னை விடப் பெரிய சிரிப்பே வந்து விட்டது. அவன் வாய்



விட்டுக் கடகடவென்று சிரித்தான்.

அவன் கூடவே வந்த அரசி இப்போது அவன் மடியைப் பிடித்துக் கொண்டாள். ''இப்போது எதற்காகச் சிரித்தீர்? அதைச் சொல்லித்தான் ஆக வேண்டும். சொல்லா விட்டால் உம்மை விட்டுப் போய் விடுவேன். பிறகு முகத்திலேயே விழிக்க மாட்டேன்,'' என்றாள்.

அரசனுக்குத் தர்மசங்கடமாகப் போய் விட்டது. 'பிராணிகள் பேசியதைக் கேட்டேன்,' என்றால், 'உமக்குப் பிராணிகளின் மொழி தெரியுமா?' என்று கேட்பாள். தெரியும், என்றால் மண்டை வெடித்து விடும். என்ன செய்வது?

ஒரு வழியும் தெரியாமல் அரசன், 'இதற்கு என்ன செய்வது?' என்று யோசித்தபடியே அடுத்த பகுதியை நோக்கி நடந்தான் அரசன்.

அரசியும், ''சொன்னால்தான் வருவேன்,'' என்று மடியைப் பிடித்துக் கொண்டு கூடவே வந்தாள்.

அடுத்த பகுதிக்கு வரும்போது அவன் முகம் வாடிக் கிடந்தது. அவன்



தன் மனைவியிடம் உயிரையே வைத்திருந்தான். அவளைப் பிரிந்து அவனால் வாழவே முடியாது. சிரித்ததன் காரணத்தைச் சொல்லா விட்டால் அவள் பிரிந்து போய் விடுவாள். அவள் போன பின் அவன் உயிரே போனது போலாகி விடும். அவனும் இறந்து விடுவான்.

எப்படிப் போனாலும் தனக்கு மரணம்தான் காத்திருப்பதை உணர்ந்தான் அரசன். எப்படியும் போகப் போகிறது தன் உயிர்! அதை அவளை இழந்த பின் விடுவதை விட, அவள் மடியில் படுத்துக் கொண்டு, அவளிடம் உண்மையைச் சொல்லி, தனக்குக் கிடைத்துள்ள அதிசய ஆற்றலை வெளிப்படுத்தி விட்டுச் சந்தோஷமாக உயிரை விட்டு விடுவோமே என்று தீர்மானித்தான் அரசன்.

இப்படி யோசித்துக் கொண்டு வந்த அரசன் காதில் அந்தப் பகுதியில் உணவுக்காகக் காத்திருந்த இன்னொரு கோழிக் குடும்பம் பேசிக் கொள்வது விழுந்தது.

அந்தக் குடும்பத்தின் தலைவனான சேவல், ''என் அருமை மனைவி மக்களே! இதோ நமக்குத் தினமும் உணவளித்து ரட்சித்துக் காக்கும் அரசன் வருகிறான். இதுதான் அவன் நமக்குக் கடைசியாக உணவு போடுவது. நாளை அவன் உயிரோடு இருக்க மாட்டான். நமக்கு உணவளிக்க யாரும் இருக்க மாட்டார்கள். நாமும் பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான். இவன் இறந்தபின் நாம் ஏன் உயிரோடு இருக்க வேண்டும்? இன்றிருந்தே உண்ணாவிரதம் இருந்து உயிரைத் துறந்து விடுவோம். அதுதான் முறை. ஆகவே இவன் இன்று போடுகிற தானியத்தை யாரும் தொட வேண்டாம்,'' என்றது.

இதைக் கேட்ட அதன் பெட்டைக் கோழி, ''அடடா, அப்படியா? இந்த அரசன் எதற்காகச் சாக வேண்டும்? இதைத் தடுக்க வழியே இல்லையா?'' என்று கேட்டது.

''என் பண்ணையிலுள்ள பெட்டைக் கோழிகளை நான் அடக்கி ஆள்கிறேன். அப்படியின்றி, தன் மனைவிக்குப் பயந்து, உண்மையைச்

சொல்லி உயிரை விடத் துணிந்து விட்ட இவனை யார் காப்பாற்ற முடியும்?'' என்றது சேவல்.

இதை எல்லாம் கேட்ட அரசன், மிகுந்த வெட்கமடைந்தான். 'ஒவ்வொருவருக்கும் ஒரு அளவு உண்டு! அதை இந்தச் சேவல் எவ்வளவு அழகாக எடுத்துக் கூறி விட்டது! என் உயிரை விட என் மனைவியின் பிடிவாதம் ஒன்றும் பெரிதல்ல,' என்கிற ஞானோதயம் பெற்றான்., அவன் முகம் பிரகாசமடைந்தது.

அவன் தன் மனைவியைப் பார்த்து, ''என் மடியை விடு. நான் சிரித்த காரணத்தைச் சொல்கிறேன்,'' என்றான்.

அவள் மடியை விட்டு விட்டு, ''என்ன காரணம், சொல்லும்?'' என்றாள்.

''வேறொன்றுமில்லை. நம் நாட்டில், மற்ற நாட்டார் வந்து பாராட்டும் படியாக எத்தனையோ அதிசயங்களைச் செய்து வைத்திருக்கிறேன். இதை எல்லாம் விட,பெரிய அதிசயம் ஒன்று நினைவு வந்தது. அதைச் செய்து முடித்தால் எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்தேன். சிரிப்பு வந்து விட்டது,'' என்றான்.

இதைக் கேட்டதும் அரசிக்கு மிகுந்த ஆவலுண்டாகி விட்டது. ''அப்படியா? அது என்ன புது அதிசய சாதனை?'' என்று கேட்டாள்.

''உலகத்திலே எல்லா நாடுகளிலும் மனிதர்கள்தானே குளம் வெட்டுகிறார்கள்? நாம் மிருகங்கள், பறவைகள், பிராணிகளைக் கொண்டே ஒரு குளம் வெட்டினால் எப்படி இருக்கும்?'' என்றான் அரசன்.

அரசி ஒரு மாதிரி புதுமைப் பைத்தியம். அவள் உடனே இந்த அதிசய யோசனையைப் பிடித்துக் கொண்டு விட்டாள். ''அற்புதமான யோசனை! இன்றைக்கே அதைச் செய்ய ஆரம்பித்து விடுவோம்; இன்றே நம் ஆட்சி வட்டத்திற்குள் உள்ள எல்லாப் பறவைகள், பிராணிகளுக்கும் வேலைக்கு வரச் சொல்லி உத்தரவிட்டு விடுங்கள்,'' என்றாள்.

அரசனும் முக்கியமான பிரசினையிலிருந்து இவளைத் திசை திருப்பி உயிரைக் காப்பாற்றிக் கொண்டோமே என்கிற மகிழ்ச்சியில், அப்படியே உத்தரவிட்டு விட்டான்.

குறிப்பிட்ட நாளன்று, எல்லாப் பறவைகளும், பிராணிகளும் அவரவர் ஆயுதங்களுடன், தலைநகருக்கு வெளியே உள்ள மலை அடிவாரத்திற்கு வந்து சேர வேண்டும் என்ற உத்திரவு மூலை முடுக்கெல்லாம் பரவியது.


இதைக் கேட்டதும், பிராணிகளும் பறவைகளும் திடுக்கிட்டுப் போய் விட்டன. ''என்ன இது! என் சின்ன அலகால் நான் எவ்வளவுதான் தோண்ட முடியும்?'' என்றது குருவி.

''என்னால் நாலு கூடை மண் கூடச் சுமக்க முடியாது,'' என்றது முயல்.

''இரண்டு கொத்து கொத்தினாலே என் அலகு முறிந்து விடுமே,'' என்றது கோழி.

''இவ்வளவு முட்டாள்தனமான யோசனையை நம் அரசனுக்குச் சொல்லிக் கொடுத்தது யார்?'' என்று கேட்டது கழுகு.

கை எடுக்காமல் போடலாம்...



இந்த வழியில் பென்சிலை ஓட்டினால் கை எடுக்காமல் வரையலாமே!

''இந்த அரக்கனைப் போய் பெரிய தயாளன் என்றோமே!'' என்றது ஆந்தை.

''அது சரி. ஆனால் அரசனிட்ட உத்திரவு அல்லவா? அதை யார் மீற முடியும்? நாம் போகத்தான் வேண் டும்;'' என்றது நரி. ''அதைத் தவிர்க் கவே முடியாது,'' என்று தீர்மானமா கச் சொல்லி விட்டது அது.

மறுநாள் நாடெங்கிலுமிருந்து சாரி சாரியாகப் பறவைகளும், பிராணிகளும் மலை அடிவாரத்திற்கு வரத் தொடங்கின.

எல்லாப் பிராணிகளும் வந்ததும், அரசன் அரசியுடன் அங்கே வந்தான். நல்ல நேரத்தில் குளம் வெட்டத் தொடங்கப் பூசை போட்டான்.

அது ஆனதும், எதிலிருந்து எது வரை, எவ்வளவு ஆழத்திற்குக் குளம் வெட்ட வேண்டும் என்று அளந்து காட்டி விட்டு, அவனும் அவன் மனை வியும் அரண்மனைக்குத் திரும்பினார் கள்.

பறவைகளும், பிராணிகளும் குளம் வெட்ட ஆரம்பித்தன. ஆனால் அவற்றால் மனிதர்களைப் போல வேலை செய்ய முடியவில்லை. விரை விலேயே அவை சோர்ந்து போயின. ஆனாலும் அரசனின் தண்டனைக் குப் பயந்து மெதுவாக வேலை செய்து கொண்டிருந்தன.

நரி எப்போதுமே தந்திரம் நிரம் பிய பிராணி அல்லவா? அது மட்டும் தனக்கிட்ட வேலையைச் சிறிது கூடச் செய்யாமல் இங்குமங்கும் போவதும் வருவதுமாக அலைந்து, ஏதோ பிர மாதமாக வேலை செய்வது போல காட்டிக் கொண்டிருந்தது.

நாலைந்து நாட்கள் கழித்து, வேலை எவ்வளவு தூரம் நடந்திருக் கிறது என்று பார்க்க, அரசன் மலை யடிவாரத்திற்கு வந்தான். அவன் திடீ ரென்று வந்ததனால் பிராணிகளி டையே பெரிய பரபரப்பு உண்டா யிற்று.

அவன் ஒவ்வோர் இடமாகப் பார்த் துக் கொண்டே வந்தான். நரி இருந்த இடத்திற்கு அவன் வந்த போது, அது ஒரு மேட்டின் மீது நின்று கொண்டு,



''டாக்டர்களுக்குத்தான் எப்ப வும் ஸ்கோப் இருக்கும்னு எப் படிச் சொல்றே?''

''எப்பவும், 'ஸ்டெதாஸ் கோப்'போட, அவங்கதானே இருக்காங்க?''

— சீர்காழி ஸ்ரீராம்.

கையில் ஓர் ஏட்டை வைத்துக் கொண்டு ஏதோ கணக்குப் போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான்.

வேலை செய்யாமல் நின்ற நரியைப் பார்த்ததும் அரசனுக்குக் கடுங் கோபம் உண்டாயிற்று. அதனிடம் வந்து, ''எல்லாப் பிராணிகளும் வேலை செய்து கொண்டிருக்கும் போது நீ மட்டும் ஒன்றும் செய்யாமல் ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டிருக் கிறாயே!'' என்று கேட்டான்.

நரி பணிவுடன் அரசனை வணங்கி, ''அரசர் பெருமானே! நானும் வேலை செய்து கொண்டு தான் இருக்கிறேன்,'' என்றது.

''அப்படியா! என்ன வேலை செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று அரசன் கேட்டான்.

''நான் ஒரு கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறேன், அரசே!'' என்றது நரி.

''கணக்கா! என்ன கணக்கு?''

''நம் ராஜ்யத்தில் ஆண்கள் அதி கமா, பெண்கள் அதிகமா என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கி றேன்,'' என்றது நரி.

அரசனுக்கு வெகு கோபம் வந்து விட்டது. இருந்தாலும் அதை அடக் கிக் கொண்டு, ''நல்லது உன் கணக்கு முடிந்து விட்டதா? நம் ராஜ்யத்தில் ஆண்கள் அதிகமா, பெண்கள் அதி

கமா?'' என்று கேட்டான்.

''பெண்கள்தான் அதிகம்,'' என்றது நரி.

''நீ சொல்வது சரியல்ல; ஆண்கள் தான் அதிகம்.''

''இருக்கவே இருக்காது. பெண்கள்தான் அதிகம்,'' என்றது நரி.

''அரண்மனையில் ஜனத்தொகைக் கணக்குகள் இருக்கின்றன. அவற்றைப் பார்க்கிறேன். நீ சொன்னது சரியில்லை என்றால் உன்னைக் கடுமையாகத் தண்டிப்பேன்,'' என்றான் அரசன்.

''சரி,'' என்று ஒப்புக் கொண்டது நரி.

அரசன் அரண்மனைக்குத் திரும்பி ஜனத்தொகைக் கணக்குகளைக் கொண்டு வரச் சொல்லிப் பார்த்தான். ஆண்களே அதிகம் என்று தெரிந்தது.

அரசன் நரியைப் பிடித்து வரும்படி கட்டளையிட்டான். சேவகர்கள் நரியைப் பிடித்துக் கொண்டு வந்து அரசன் முன் நிறுத்தினார்கள்.

''நீ சொன்னது பொய் என்று நிருபணமாகி விட்டது. இப்போது என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான் அரசன்.

''அரசே! உங்கள் கணக்கெல்லாம் பிழை. பெண்கள் சொல்கிறபடி எல்லாம் கேட்பவர்கள் ஆண்களாக மாட்டார்கள்,'' என்றது நரி.

அரசனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

''பறவைகளாலும் சிறு பிராணிகளாலும் குளம் வெட்ட முடியுமா? ஆணாக இருந்தால் அதைச் சிந்தியா திருப்பார்களா? புகழுக்கு ஆசைப் பட்ட பெண்ணின் பேராசைக்குச் செவி சாய்த்த நீங்கள் கூடப் பெண்ணாகத்தானே எனக்குத் தெரிகிறீர்கள்?'' என்றது நரி.


இதன் உண்மையே உணர்ந்த அரசன் வெட்கித்துத் தலை குனிந்தான். சின்னஞ் சிறு உயிர்களுக்குப் பெருந் தீங்கு இழைத்து விட்டதற்காக் வருந்தினான். குளம் வெட்டுவதை உடனே நிறுத்தும்படி உத்தரவிட்டான். பறவைகளும், பிராணிகளும் அரசனை வாயாற வாழ்த்தி விட்டுத் தங்கள் தங்கள் இருப்பிடங்களை நோக்கி நிம்மதியாகச் சென்றன.

அதன்பின் அரசன் தேச காரியங்களில் யார் பேச்சையும் கேட்பதே இல்லை. தர்ம நியாயப்படியும், தன் சொந்த மனச்சாட்சியின்படியும் தான் நடந்து வந்தான். தர்மம் அவனைப் பல்லாண்டு காலம் காத்து வாழ வைத்தது.



பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 3154 3, 4 34 157.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால்: ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 36/—; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—.

PARRY'S PAGE





பாம்பை ஆட்டி வைப்பது எப்படி?

பாம்பாட்டி மகுடி ஊதி, இசைக்கேற்ப பாம்பை ஆட்டுவதைப் பார்த்திருப்பீர்கள். உண்மை என்னவென்றால், பாம்பிற்கு மகுடி இசை கேட்காது. ஏன், எதுவுமே கேட்காது. காரணம், பாம்புகளுக்கு காது கேட்காது. பாம்பாட்டி மகுடி ஊதும்போது காலால் தரையைத் தட்டிக் கொண்டே, மகுடியைச் சுழற்றிக் கொண்டேயிருப்பார். தட்டுவதனால் ஏற்படும் அதிர்ச்சிக்கேற்ப பாம்பு ஆடுவதுடன் சுற்றி சுற்றி வரும் மகுடியையும் பார்த்து அது சுழன்று ஆடுகிறது.




Fig. 3

Fig. 2

காகித பொம்மை நடன நிகழ்ச்சி

இதோ ஒரு வித்தியாசமான நடன நிகழ்ச்சி. நீங்கள் செய்ய வேண்டியது சுமார் 8 செ.மீ. அளவுக்கு சின்னச் சின்னதாக சில உருவங்களை வரைய வேண்டும். இந்த உருவங்களுக்குக் கால்களை வரையக் கூடாது (படம் 1 ஐப் பார்க்கவும்) படம் வரைந்ததும் அவைகளுக்கு வர்ணம் தீட்டி, தனித்தனியாக வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். கால்கள் இருக்க வேண்டிய இடத்தில் சிறிய துளைகளை வெட்டி எடுத்துவிடுங்கள். (படம் 3 ஐப் பார்க்கவும்). உங்கள் முதல் விரலையும் இரண்டாவது விரலையும் அந்த துளைகளுக்குள் விடுங்கள் (படம் 3 ஐப் பார்க்கவும்). ஒரு படத்தை இடது கை விரல்களால் நடனமாடச் செய்யுங்கள். இதே மாதிரி வலது கை விரல்களை இன்னொரு படத்தின் துளைகளில் நுழைத்துக் கொண்டு விரல்களால் நடனமாடச் செய்யுங்கள். இதே மாதிரி படங்களை வரைந்து உங்கள் நண்பர்களும் காகித பொம்மை நடனக்காரர்களைத் தயாரிக்கலாம். உங்களுக்குள் ஒரு நடனப்போட்டி கூட நடத்தலாம்!

Fig. 1



இதோ ஒரு பென்சில் மேஜிக்!

ஒரு பெரிய கண்ணாடி டம்ளரில் தண்ணீரை ஊற்றுங்கள். ஒரு பென்சிலை டம்ளருக்குப் பின்னால் வைத்துவிட்டு, தண்ணீர் வழியாகப் பாருங்கள். அங்கு இரண்டு பென்சில்கள் தெரியும். வலது கண்ணை மூடிக்கொண்டு பார்த்தால் இடதுபக்க பென்சில் மறைந்துவிடும். இடது கண்ணை மூடிக்கொண்டு பார்த்தால் வலது பக்க பென்சில் மாயமாய்ப் போய்விடும்.

இதற்கு காரணம், ரிப்ப்ரெக்ஷன் என்னும் ஒளி விலகல் (ஒளி விலகல் பற்றி பௌதிக பாடத்தில் நீங்கள் படித்திருக்கலாம், கண்ணாடி, தண்ணீர் போன்றவற்றின் வழியாக ஒளி செல்லும் போது திசை மாறுதல் அடைகிறது. இதுவே ஒளிவிலகல் என்பதாகும்). நீங்கள் ஒரு மேஜிக் நிபுணர் என்று உங்கள் நண்பர்களிடம் பெருமை அடித்துக்கொள்ளலாம்.



✂ CUT AND KEEP

REGISTERED No. TN MS (S) 28
Registered as a Newspaper in Sri Lanka

